Vol.2, Issue 9 | Annual Subscription ₹420

பிப்ரவரி 2020

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org



Rotary

# ரோட்டரி சர்வ தேச மாநாட்டிலிருந்து ஒரு தருணம்



*DGEக்களின் மனைவிமார்கள் RID கமல்சங்வி மற்றும் RID பரத் பாண்டியா ஆகியோருடன் சான்டியாகோவில்...*

புகைப்படம்: DGE சின்னப்பா ரெட்டி

# உள்ளே


**12** **பகுதிமயமாக்கலும் கூட்டாட்சி முறையும்தான் எதிர்காலம்: பரத் பாண்ட்யா**
RC கல்கத்தா தனது 100வது பிறந்தநாளை இந்தியா மற்றும் வெளிநாடுகளின் மூத்த தலைவர்கள் கலந்து கொண்ட ஒரு பிரமாண்டமான வாழ்த்து நிகழ்ச்சியுடன் கொண்டாடியது.

**20** **ரோட்டரி மாறலாம், இன்னும் முன்னேறலாம் என்கிறார் ஹோல்கர் நாக்**
புதிய RI தலைவர் அடுத்த ஆண்டுக்கான தனது கருப்பொருளை சான் டியாகோவில் உள்ள சர்வதேச மாநாட்டில் அறிவிக்கிறார்.

**22** **அரசு செய்யும் பணிகளில் 10% சேவைத் திட்டங்களை நாம் நிறைவேற்றுவோம்: சேகர் மேத்தா**
ரோட்டரியர்கள் இப்போது அரசாங்கத்திற்கு பெரிய சமூக சேவை திட்டங்களை செய்ய உதவ வேண்டும்.

**26** **RIPN சேகர் மேத்தா விடியல் திட்டத்தை துவக்கினார்**
RC வடக்கு மெட்ராஸ் நலிந்த கல்லூரி சிறுமிகளுக்கு நிதி உதவி வழங்குகிறது.

**32** **தொண்டின் ஆற்றலைத் தொகுத்துப் பயன்படுத்துவோம்: RIDN வெங்கடேஷ்**
RID 3232 புதிய இயக்குனரைக் கொண்டாடுகிறது.

**48** **உறுதியான மனம் கொண்ட சாதனையாளர்களுக்கு விருது**
சவால்களை எதிர்கொண்டு வெற்றிகரமாக வெளிவந்த மக்களுக்கு டேர் டு ட்ரீம் விருதுகள் வழங்கப்பட்டன.

**52** **மனநலக் குறைபாடுள்ள குழந்தைகளுக்குக் கிறிஸ்துமஸ் தாத்தாவாகி மகிழ்ச்சி தந்த RC நாக்பூர்**
கிளப் தனது 75 ஆவது ஆண்டு விழாவை பல்வேறு முயற்சி களால் சமூகத்தை மகிழ்வித்து நினைவு கூர்ந்தது.





















**அட்டைப்படத்தில்:** சான் டியாகோவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் சிலர் இந்திய DGEக்களின் துணைவர்கள்.

**படங்கள்:** © rotary.org

## இந்தூர் இன்ஸ்டிட்யூட்டின் வண்ணமயமான பக்கங்கள்




ஜனவரி அட்டையில் இந்தூர் நிறுவனத்தில் துர்கா வந்தனாவின் செயல் புகைப்படத்தை படமெடுத்த V முத்துக்குமாரனை பாராட்டுகிறேன். நினைவில் கொள்ள ஒரு நிறுவனம் என்ற தலைப்பின் தலையங்கம், நிறுவனத்தின் முக்கியத்துவத்தை காட்டியது. RI இயக்குனர் பரத் பாண்ட்யா ஆற்றலுடன் நிகழ்வுகள் மீது கடுமையான கட்டுப்பாட்டை வைத்திருந்தார். ரோட்டரி தகவல்கள் மற்றும் கிளப் திட்டங்கள் நிறைந்த ஒரு அழகான பத்திரிகையை வெளியிட்டதற்காக ஆசிரியர் மற்றும் அவரது குழுவினருக்கு எனது பாராட்டுக்கள்.

சிந்தனையைத் தூண்டும் மற்றொரு கட்டுரை 'பெண்கள் வாய்ப்புகளைத் தேடுகிறார்கள், வெற்றிபெற உதவி கேட்பதில்லை'. பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல் பற்றி நிறைய பேசினாலும் முடிவெடுப்பதில் அவர்களுக்கு பங்கில்லை என்றால், அவர்கள் எவ்வாறு அதிகாரம் பெற முடியும்

சுவாமி விவேகானந்தர், அவர்களுக்கு கல்வியைக் கொடுங்கள், அவர்கள் அதிகாரம் பெறும் அளவுக்கு வல்லவர்கள் என்று சரியாகக் கூறியுள்ளார். பெண்கள் மற்றும் சிறுமிகளை மேம்படுத்துவது சமூக மாற்றத்திற்கு முக்கியமாகும்.

பெண்கள் வீட்டிலேயே கொடுமை, துஷ்பிரயோகம் மற்றும் அடிபணியலுக்கு ஆளாகி வருவதால் ஆணாதிக்கம் நம் வீடுகளிலும் சமூகத்திலும் பரவலாக உள்ளது. அத்தகைய பெண்கள் எப்படி பேசத் துணிவார்கள்?

ராஜ் குமார் கபூர்
RC ரூப்நகர் — RID 3080

ஜனவரி இதழ் இந்தூர் நிறுவனம் பற்றிய செய்திகளை சிறப்பாக வழங்கிய விதம் இந்த நிகழ்வில் கலந்து கொண்டது போல் உணர்ந்தேன். புகைப்படங்கள் மிகவும் சிறப்பானதாக நிறுவனத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருந்தன.

தலைவர் பேசுகிறார் Four-Way-Test முக்கியத்துவம் அளித்தது. 1,400க்கும் மேற்பட்ட குழந்தைகளை தத்தெடுத்த சிந்துதாய் சபக்கலுக்கு நம் கிளப் Four-Way-Test விருதை வழங்கிய இந்த விழாவில் ரோட்டரியிடமிருந்து சிந்துதாய்க்கு அனைத்து உதவிகளையும் செய்த RIPN சேகர் மேத்தா கலந்து கொண்டார். TRF கருத்தரங்கு குறித்த அறிக்கை தகவல் சுவையாக இருந்தது. கொல்கத்தாவில் உள்ள 20 பள்ளிகளிலும், மேற்கு வங்கத்தின் சில மாவட்டங்களிலும் வின்ஸ் திட்டத்தை விரும்பும் ₹1 கோடி மதிப்புள்ள உலகளாவிய மானியத்தை நம் கிளப் செயல்படுத்துகிறது.

R K பூப்னா, RC பெஹுர் — RID 3291

இந்தூர் நிறுவனத்தில் மதிப்புமிக்க போலியோ முன்னோடி விருதைப் பெற்ற PRID அசோக் மகாஜனுக்கு வாழ்த்துக்கள். TRF ஸ்டார் கலைஞர்கள் பெருமைக்கு தகுதியானவர்கள். நிறுவனத்தில் ரோட்டரி தலைவர்கள் ஆற்றிய உரைகள் அனைத்தும் அருமை. அமர்வுகளின் வண்ணமயமான படங்கள் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் சுவையாக்குகின்றன.

RI தலைவர் மார்க் மலோனியின் தொழில்சார் சேவை குறித்த செய்தி ரோட்டரியில் சேருவதன் நோக்கத்தை விளக்குகிறது. ஜனவரி 2020ல் RC கல்கத்தா 100 வயதை எட்டுகிறது என்பதில் மகிழ்ச்சி. ரோட்டரி எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து மலோனியின் கருத்துக்கள் ஒரு கண் திறப்பு.

திட்டங்களுக்காக TRF நிதிகளை விவேகத்துடன் செலவிடுவது குறித்து அறங்காவலர் தலைவர் தேர்வு PRIP K R ரவீந்திரனின் கருத்துக்கள் குறிப்பிடத்தக்கவை. AKS உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,000ஐத்

## ரோட்டரியில் குழு இயக்கவியல்

RC செவன் ஹில்ஸ் தார்வாட், RID 3170, நடத்தப்பட்ட MHM மீதான கருத்தரங்கம் அவசியமானது. ரோட்டரியில் ஆண் பெண் பேதமின்றி மாதவிடாய் பிரச்சினைகளைத் மனத்தடை இன்றி பேசும் இடமாகும்.

மீண்டும் பயன்படுத்தக் கூடிய பட்டைகள் மற்றும் மாதவிடாய் கோப்பையை அறிமுகப்படுத்தும் கருத்து ஒரு உன்னதமான யோசனையாகும். பள்ளி சிறுமிகளுக்கு ஹாப்பி கிட்களை விநியோகித்து கழிப்பறைகளைப் பயன்படுத்துதலின் முக்கியத்துவத்தைப் பற்றி அவர்களுக்குக் கற்பித்தது இந்த கருத்தரங்கின் முக்கிய விஷயமாகும். இந்த நிகழ்வு ஒரு பொதுவான சமூக நோக்கத்திற்காக கூடியிருந்த நான்கு ரோட்டரி மாவட்டங்களுக் கிடையிலான பிணைப்பை பிரதிபலித்தது.

சின்மயா மஹாபத்ரா
RC புவனேஸ்வர்,
ஹெரிடேஜ் — RID 3262

குழு இயக்கவியல் ரோட்டரியில் சிறப்பாக செயல் படுகிறது: சேகர் மேத்தா வின் கட்டுரை புதிய ரோட்டரியினர்களுக்கு சிறந்த வழிகாட்டுதல் களை வழங்குகிறது. இந்தியாவிலிருந்து போலியோவை ஒழித்து பல உயிர்களை காத்தது இதுபோன்ற ஒரு குழு இயக்கவியலாலே ஆகும்.

T D பாட்டியா, RC டெல்லி
மயூர் விஹார் — RID 3012

தற்கொலை என்பது உதவிக்கான கூக்குரல்

*தாண்டியது மற்றும் பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது என்பது மகிழ்ச்சியளிக்கிறது.*

*பிலிப் முலாபோன்* M T
RC *திருவனந்தபுரம் புறநகர்* — RID 3211

*இந்தூர் இன்ஸ்டிடியூட்டில் உள்ள விளக்கப்படங்களுடன் பரந்த காட்சிகள் ஜனவரி இதழை புதுமையானதாகவும், முழுமையானதாகவும் ஆக்குகின்றன. டீம் ரோட்டரி நியூஸ் பின்பற்றிய சிறந்த இதழியலுக்கான சான்று இது. வாழ்த்துக்கள்.*

Dr B *நாகலிங்கம் பிள்ளை*
RC *நாகர்கோயில்* — RID 3212

DGE*களுக்கு* RIPN *சேகர் மேத்தாவின் செய்தி எனக்கு மிகவும் பிடித்தது. அவரது செய்தி-மனதிலிருந்து அல்ல, இதயத்திலிருந்து சிந்தியுங்கள் - மிகவும் உண்மை, அதைப் பின்பற்றினால், நம் சமுகங்களில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும்.* 2025*க்குள் இந்தியாவை கல்வியறிவு பெற வேண்டும் என்ற அவரது கனவை நனவாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.*

R *தாயுமனவன்,* RC *கடலூர் மிட் டவுன்* — RID 2981

RI *தலைவர் மார்க் மலோனி தொழில்சார் சேவையைப் பற்றி சரியாகப் பேசியுள்ளார்.* 20 *ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு ரோட்டேரியன் என்ற முறையில், நான் கிளப் உறுப்பினர்களிடையே இக்குணங்களைக் கண்டுள்ளதோடு,* Four-Way-Test *இனை பின் தொடர்பவர்களாக இருப்பதை கண்டிருக்கறேன்.*

*இந்தூரில் உள்ள சராஃபா பஜார் குறித்த ஆசிரியர் ரஷீதாவின் கட்டுரை, அவரும் அவரது சகாக்களும் இந்த சந்தை உணவு வகையை ரசித்தார்கள் என்பதைக் காட்டியது. நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட மண்டல நிறுவனத்திற்காக* RI *இயக்குனர் டாக்டர் பாரத் பாண்ட்யா மற்றும் நிறுவனத் தலைவர் ராஜு சுப்பிரமணியன் ஆகியோருக்கு அவர் எழுதிய ஆசிரியர் குறிப்பில் சிறந்த அஞ்சலி செலுத்தியுள்ளார். வருங்கால மாவட்ட தலைவர்களுக்கு சரியான நேரத்தில் அறிவுறும் படியாக மனதில் இருந்து அல்ல, இதயத்திலிருந்து சிந்திக்க வேண்டும் என்று* DGE*க்களை* RIPN *சேகர் மேத்தா கேட்டுக் கொண்டார். உறுப்பினர் தேக்க நிலையைச் சமாளிக்க, ஒவ்வொரு ரோட்டரியனும் ஒரு புதிய உறுப்பினரைச் சேர்த்தால் உறுப்பினர்கள் இரட்டிப்பாக்கும்.*

*புதிய* IIW *தலைவர் டாக்டர் பினா வியாஸை வாழ்த்துகிறோம். இந்தப் பதவியை வகிக்கும் ஏழாவது இந்தியரான அவர் மேலும்* IIW *தலைவராக வெற்றிகரமாக செயல்பட விரும்புகிறோம்.*

*சிகாகோவில் உள்ள ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸின் வீடு ரோட்டேரியன்களின் பங்களிப்புகளுடன் மீண்டும் கட்டப்படும் என்ற செய்தி மகிழ்ச்சியளித்தது. சரியான நேரத்தில் பணியை நிறைவேற்ற நன்கொடைகள் குவியும் என்று நம்புகிறேன்.*

S *முனியாண்டி*
RC *திண்டுக்கல் ஃபோர்ட்* — RID 3000

*இந்தூரின் சாலை உணவு கட்டுரை என் குடும்பத்தை கவர, பிப்ரவரியில் இந்தூருக்கான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்துள்ளோம். கட்டுரையும் புகைப்படங்களும் தகவல் தரும் வகையில் இருந்தன. எங்கள் விடுமுறையைத் திட்டமிட உதவியதற்கு நன்றி.*

*ராகேஷ் பாட்டியா*
RC *பேலூர்* — RID 3291

*மண்டல நிறுவனத்தில் நடந்த சம்பவங்களை ஆசிரியர் தனது தலையங்கத்தின் மூலம் கண்களுக்கு முன் கொண்டு வர முடிந்தது.*

V G *தியோதர்*
RC *நாசிக்* — RID 3030

என்ற அட்டைப்பட கட்டுரை, பல்வேறு காரணங்களுக்காக மக்கள் விபரீத முடிவுகளை எடுப்பது கண்டு நான் அதிர்ந்தேன். ஆனால் தற்கொலைக்கு முக்கிய காரணம் மன அழுத்தத்தின் தீவிரத்தை பொறுத்துக் கொள்ள இயலாமையே.

டாக்டர் லட்சுமி நிறுவிய சினேகா என்ற ஹெல்ப் லைன் மனச் சோர்வடைந்தவர்களுக்கு தன்னார்வத் தொண்டர்கள் குழுவுடன் 24x7 ஆதரவு வழங்குகிறது. நல்ல குடும்ப வாழ்க்கையும் நல்ல நண்பர்களும் தற்கொலை எண்ணங்களைத் தவிர்க்க உதவும்.

N ஜெகதீசன்
RC எலூரு —RID 3020

TCA சீனிவாச ராகவன் எழுதிய இரவு விமானங்கள் தொடர்புடைய செய்தியை விமானத் துறை அதிகாரிகள கவனிக்க வேண்டும் ஆசிரியர் குழுவுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்.

K தேவராஜன்
RC கோயம்புத்தூர் ஈஸ்ட் — RID 3201

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com*

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org.*



# உங்கள் இணைப்புகளை வலுவாக்குங்கள்

*பாசமிகு ரோட்டரி குடும்பத்தினர்களே...*

சக ரோட்டரியன்களுக்கும், ரோட்டரி குடும்பத்தின் உறுப்பினர்களுக்கும் இனிய 115வது பிறந்தநாள் வாழ்த்துகள்!

ரோட்டரி தொடங்கப்பட்டபின் இந்த 115 ஆண்டுகளில் எல்லாமே மாறிவிட்டதாகத் தோன்றுகிறது, ரோட்டரியின் மதிப்பீடுகளைத்தவிர.

நாம் தோழமைக்கும் நேர்மைக்கும் பன்முகத் தன்மைக்கும் சேவைக்கும் தலைமைப்பண்புகளுக்கும் அர்ப்பணித்துக்கொண்ட ஓர் இயக்கத்தைத் தொடங்கினோம், இன்றும் அவற்றுக்கு நம்மை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறோம்.

“தனக்குமேல் சேவை” என்கிற நம்முடைய குறிக்கோள் 1911ல் உருவாக்கப்பட்டது, அந்தச் சொற்களுக்குப் பின்னாலிருக்கிற உணர்வு, ரோட்டரியின் நிறுவனர்களுக்குள் ஏற்கெனவே ஆழமாக வேரூன்றியிருந்தது.

உலக அளவில் இன்னும் விரைவாக மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருப்பதால், ரோட்டரி சேவைக்கான தேவை முன்பு எப்போதையும் விட அதிகமாக உள்ளது.

சேவைத் திட்டங்களைப்பற்றிப் படிப்பது வேறு, அவற்றைச் செயலில் பார்ப்பது வேறு, அவற்றின்மூலம் பலன்பெற்ற மக்களுடைய நன்றியுணர்வு மிக்க முகங்களைப் பார்ப்பது வேறு.

ரோட்டரியின் திட்டங்கள் வாழ்க்கைகளை மாற்றுகின்றன, உலகை இணைக்கின்றன. கடந்த ஆண்டில் நான் சில மிகச்சிறந்த ரோட்டரித் திட்டங்கள் செயல்படுவதைப் பார்த்துள்ளேன்.

சென்ற ஆண்டு, கேய், நான் இருவரும் ஜப்பானில் உள்ள ஃபுகுஷிமா பகுதிக்குச் சென்றோம். மார்ச் 2011ல் ஃபுகுஷிமா சந்தித்த பேரழிவைப்போன்ற ஒரு பிரச்னையை உலகில் மிகச்சில இடங்கள்தான் சந்தித்துள்ளன. அப்போது, ஒரு நிலநடுக்கத்தால் தொடங்கிய ஒரு சுனாமி, ஓர் அணு மின் ஆலையில் பேரிடரை உருவாக்கியது.

ஆனால், இன்றைக்கு ஃபுகுஷிமா-வின் கதை அழிவைப் பற்றியது இல்லை; நம்பிக்கை, புதுப்பித் தலைப் பற்றியது. ரோட்டரியின் நல்கைகள் இந்தப் பேரழிவினால் பாதிக்கப்பட்டவர்களுடைய மருத்துவ மற்றும் மன நலப் பராமரிப்பு அணுகல்களை மேம்படுத்தி யுள்ளன; உலகின் மற்ற பகுதிகளில் பேரழிவிலிருந்து மீண்டுள்ள மக்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம், இந்தச் சமூகங்களின் தனிமையும் குறைந்துள்ளது. அத்துடன், இந்தப் பகுதிமுழுவதும் தன்னம்பிக்கை, ஊக்கத்தை உண்டாக்கவும், நீடித்திருக்கும் தொலைநோக்குச் சமூக மீட்சியை ஊக்கப்படுத்தவும் நம்முடைய நல்கைகள் உதவியுள்ளன.

இதுபோன்ற ரோட்டரித் திட்டங்கள் வெற்றிபெறக் காரணம், அவை ஓர் உள்ளூர்த் தேவையை நிறைவு செய்கின்றன, தங்களுடைய தாக்கத்தை நீட்டிக்கச் செய் வதற்கு உள்ளூர் அரசு வழங்கும் நிதியை ஈர்க்கின்ற சாத்தியம் இவற்றுக்கு உள்ளது.

ரோட்டரி கவனம் செலுத்துகிற ஒவ்வொரு துறை யிலும், உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ரோட்டரித் திட்டங்கள் வாழ்க்கைகளை மேம்படுத்துகின்றன, மிக விரைவான மாற்றம் நிகழ்ந்துவரும் இந்தக் கால கட்டத்தில் சமூகங்கள் அதற்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளவும் உதவுகின்றன.

இன்னொரு மிகச்சிறந்த ரோட்டரி ஆண்டை நாம் கொண்டாடுகிற இந்த நேரத்தில், நம்முடைய சேவையை இந்த அளவு தாக்கமுள்ளதாக ஆக்குகின்ற இணைப்புகளை வலுப்படுத்துவதற்கு நம்மை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்வோம். ரோட்டரி உலகை இணைக்கிற அதே நேரத்தில்,நாம் வாழ்க்கைகளை மேம்படுத்துவோம்.

**மார்க் டேனியல் மலோனி**
RI தலைவர்



# நம்பிக்கை, வாய்ப்புகள், ‘‘இரண்டாம் பாலினம்’’ பற்றி

பன்னாட்டுக் கூட்டத்தில், RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஹோல்கர் நாக் ‘வாய்ப்புகளைத் திறக்கும் ரோட்டரி’ என்ற தன்னுடைய கருப் பொருளை அறிவித்த போது முதலில் நினைவுக்கு வந்தது, RI இயக்குநர் பரத் பான்ட்யா அடிக்கடி சொல்கிற ‘‘ரோட்டர் என்பது நம்பிக்கை, வாய்ப்புகளைப்பற்றியது’’ என்ற சொற்றொடர் தான். கல்கத்தா ரோட்டரி சங்கம் சரியாகப் புத்தாண்டன்று தன்னுடைய 100வது பிறந்தநாளைக் கொண்டாடியபோது, ‘‘சமூகம் ரோட்டரிமீது நம்பிக்கை வைத்திருக்கிறது... தங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த, உலகை இன்னும் சற்று சிறப்பாக்க ரோட்டரி ஏதாவது செய்யும் என்று நம்புகிறது’’ என்று மீண்டும் வலியுறுத்தினார்.

‘‘நம் உடலை இன்னும் மேம்பட்ட ஓர் இடமாக ஆக்குகிற நம்பிக்கையை நிறைவேற்றுவதற்காக உங்களுக்கும் எனக்கும்’’ ரோட்டரி வாய்ப்புகளை வழங்குகிறது என்று சொன்னபோது, நம் RI இயக்குநர் வரப்போகும் தலைவருடன் முழுமையாக ஒத்துப்போனார். ‘‘இது வெறுமனே மக்கள் இணைகிற சங்கம் இல்லை, எல்லையற்ற வாய்ப்புகளுக்கான ஓர் அழைப்பு’’ என்றும், ரோட்டரியில் உறுப்பினராகச் சேர்கிறவர்கள் தங்களுடைய வாழ்க்கைகளையும் சேவைத் திட்டங்களின்வழியாகத் தங்களுடைய உதவியைப் பெறுகிறவர்களுடைய வாழ்க்கைகளையும் மேம்படுத்தலாம், அதற்கான வழிகளை ரோட்டரி வழங்குகிறது என்றும் சொன்னபோது, நாக்கும் இதேபோன்ற எண்ணச் செயல்முறையை வெளிப்படுத்தினார்.

தன்னுடைய கருப்பொருளின் வழியாக நாக் தெரிவித்த, பின் விவரித்த அறிவார்ந்த அறிவிப்பின் சாரத்தையும் ஆழத்தையும் சிந்தித்துப்பாருங்கள். ரோட்டரி தன்னுடைய உறுப்பினர்கள், ரோட்டரியன்களுடைய உதவிக்கரத்தைப் பெறும் சமூகத்திலுள்ள தேவையுள்ள மக்கள் என இருவருக்கும் வாய்ப்புகளை வழங்குகிறது. அதன் தாக்கத்தை முழுமையாகச் சிந்தித்தால், ரோட்டரியன்கள் தங்களுடைய சேவையின்வழியாக நல்லதைச் செய்ய வாய்ப்பைப் பெறுகிறார்கள், ஒரு தலைவராக, உலகைச் சுற்றிவர, புதிய நண்பர்கள், இணைப்புகளை உண்டாக்கிக்கொள்ள வாய்ப்பைப் பெறுகிறார்கள், அத்துடன், தங்களிடம் உதவி பெறுகிறவர்கள் அவர்களுடைய வாழ்க்கைகளை வாழ்வாதாரங்களை மேம்படுத்திக்கொள்ள வாய்ப்புகளை வழங்குகிறார்கள். இது வாய்ப்புகளின் கூட்டல் இல்லை, பெருக்கல் என்பது கணிதவியலாளராக இல்லாதவர்களுக்கும் தெரியும்.

‘வாய்ப்பு’ என்பது மிக அழகான சொல், இல்லையா? அது பல மிகச்சிறந்த, நேர்விதமான பண்புகளைக் கொண்டுள்ளது... நம்பிக்கை, வலிமை, கடின உழைப்பு, வெற்றி. பெண்கள் இவற்றைதான் நாடுகிறார்கள்.

பல ஆண்டுகளுக்குமுன் (1949ல்) ஃபிரெஞ்சு அறிஞரான சைமோன் டி பௌவாய்ர் தன்னுடைய புகழ்பெற்ற நூலொன்றுக்கு ‘இரண்டாம் பாலினம்’ என்று பெயரிட்டார். இது பெண்களைக் குறிக்கும் சொல்லாகும்.

ஆர்வமூட்டும் விஷயம், 1981ல் சைமோன் இறக்கும் வரை 51 ஆண்டுகளுக்கு அவருடைய இணையராக இருந்தவர் புகழ்பெற்ற ஃபிரெஞ்சுத் தத்துவவியலாளர் ஜீன் பால் சாத்ரெ. அவர் சைமோனிடம் தன் அன்பைச் சொன்னபோது ‘நகைச்சுவை பண்ணாதீர்கள்’ என்றார் சைமோன். ஒருமுறை, சாத்ரெ சைமோனிடம் ‘உங்களுக்கு ஓர் ஆணின் அறிவு இருக்கிறது’ என்று சொன்னாராம், சைமோன் நெடுங்காலத்துக்கு அதை ஒரு பாராட்டாகவே நினைத்துக்கொண்டிருந்தாராம், அதன்பிறகுதான் அவர் அதன் பொருளை யோசிக்கத் தொடங்கினாராம். இதை அவர் பின்னர் எழுதினார், ‘‘இதன் பொருள், மனித குலம் ஆண்தான்; பெண்களைத் தீர்மானிப்பதும் ஆண்தான்’’!

அறிவுபற்றிய நுணுக்கமான அம்சங்கள் எந்தவொரு தளத்திலும் சூடான விவாதங்களை உண்டாக்கக் கூடியவை; நலிந்தோர், பின்னுக்குத் தள்ளப்பட்ட வர்களுக்கு வாய்ப்புகள்தான் தேவை. பெண்கள் இந்தப் பிரிவில் இருப்பது உறுதி. ரோட்டரியில் பெண்களுடைய எண்ணிக்கை பெருகவேண்டும் என்ற இலக்கை உலகெங்குமுள்ள மூத்த RI தலைவர்கள் வலியுறுத்திவருகிறார்கள். ரோட்டரிக்குள் பெண்களுக்கான தலைமைப் பொறுப்புகள் பெருகிவருகின்றன, இதனால், நிறுவனத்துக்குள்ளும் வெளியிலும் பெண்களுக்கான ஆற்றலளித்தல்மீது கவனம் கூர்மையடையும். இது மெதுவாக நிகழ்ந்தாலும் உறுதியாக நிகழும். ஜெர்மனியின் ஏஞ்செலா மெர்க்கெலுடைய மிகச்சிறந்த பெண் தலைமையையும், நியூ சிலாந்தின் ஜசிந்தியா ஆர்டெர்ன் இன்னொருவிதமான தலைமையை வெளிப்படுத்திவருவதையும் உலகம் ஏற்கெனவே கண்டுகொண்டிருக்கிறது, இவர்களைப்போன்றவர்கள் இன்னும் பெருகட்டும்.■

ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG N Manimaran |
| RI Dist 2982 | DG Natesan A K |
| RI Dist 3000 | DG Dr A Zameer Pasha |
| RI Dist 3011 | DG Suresh Bhasin |
| RI Dist 3012 | DG Deepak Gupta |
| RI Dist 3020 | DG M Veerabhadra Reddy |
| RI Dist 3030 | DG Rajendra Madhukar Bhamre |
| RI Dist 3040 | DG Dhiran Datta |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Bina Ashish Desai |
| RI Dist 3060 | DG Anish Shah |
| RI Dist 3070 | DG Sunil Nagpal |
| RI Dist 3080 | DG Jitendra Dhingra |
| RI Dist 3090 | DG Rajeev Garg |
| RI Dist 3100 | DG Hari Gupta |
| RI Dist 3110 | DG Kishor Katru |
| RI Dist 3120 | DG Sanjay Agrawal |
| RI Dist 3131 | DG Ravee Dhotre |
| RI Dist 3132 | DG Suhas Laxmanrao Vaidya |
| RI Dist 3141 | DG Harjit Singh Talwar |
| RI Dist 3142 | DG Dr Mohan Chandavarkar |
| RI Dist 3150 | DG Pandi Sivannarayana Rao |
| RI Dist 3160 | DG Nayan S Patil |
| RI Dist 3170 | DG Dr Girish R Masurkar |
| RI Dist 3181 | DG Joseph Mathew |
| RI Dist 3182 | DG Ramesh B N |
| RI Dist 3190 | DG Dr Sameer Hariani |
| RI Dist 3201 | DG R Madhav Chandran |
| RI Dist 3202 | DG A Karthikeyan |
| RI Dist 3211 | DG Shirish Kesavan |
| RI Dist 3212 | DG S Sheik Saleem |
| RI Dist 3231 | DG Sridar Balaraman |
| RI Dist 3232 | DG G Chandramohan |
| RI Dist 3240 | DG Dr Debasish Das |
| RI Dist 3250 | DG Gopal Khemka |
| RI Dist 3261 | DG Ranjeet S Saini |
| RI Dist 3262 | DG Debasish Mishra |
| RI Dist 3291 | DG Ajay Agarwal |



Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.


# RI இயக்குனர்



## நேருக்கு நேர்

ரோட்டரி எப்போதும் அமைதிப்பணிக்கு முக்கியத்துவம் தந்துவந்திருக்கிறது. ரோட்டரியின் பயணம், நட்பு என்கிற எளிய நோக்கத்துடனும், பரஸ்பர ஒத்துழைப்பு எண்ணத்துடனும் தொடங்கியது: இந்த இரண்டுமே அமைதிக்கு முக்கியம். அமைதிக்கான ரோட்டரியின் பணி, மாநாடுகள், கருத்தரங்குகளில் நடைபெறுவதில்லை; அது தனிப்பட்ட உறவுகளின்மூலம், அடிப்படை மனிதத் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம், முரண்களைச் சரிசெய்வதற்காக ஒருவரோடொருவர் இணைந்து பணியாற்றுவதன்மூலம் நடைபெறுகிறது.

அமைதியில் இரண்டு அம்சங்கள் உள்ளன: முரண், போர் இல்லாமலிருப்பது மற்றும், மக்களை முன்னேற அனுமதிக்கிற, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகிற, அமைதிக்கு உகந்த ஒரு வாழ்க்கைத் தரத்தை அனுமதிக்கிற சூழல்களை நம் சமூகங்களில் உண்டாக்குவது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் பள்ளிகளை மீண்டும் கட்டுதல், ஆந்திரப் பிரதேசப் பள்ளிகளுக்கு இருக்கைகளை வழங்குதல், கிராமப்புற மகாராஷ்டிரத்தில் பெண்களுக்கு ஆற்றலளித்தல், தமிழ்நாட்டில் தொழில் சார்ந்த பயிற்சியை அளித்தல், கேரளத்தில் வெள்ள நிவாரணம் எனப் பலவிதங்களில் ரோட்டரியன்கள் அமைதிப்பணி ஆற்றிவருகிறார்கள்.

அமைதி என்பது, சத்தமில்லாத, பிரச்னையில்லாத, கடின உழைப்பு இல்லாத, வலியில்லாத ஓர் இடத்தில் வசிப்பது இல்லை. அமைதி என்றால், இவை அனைத்தின் நடுவிலும் நிம்மதியாக இருப்பதுதான். இதுதான் அமைதியின் உண்மையான பொருள். ஒவ்வொருமுறை செய்திச் சானல்களைப் போடும்போதும், நம் பூமியில் வன்முறை, துயரம், அநீதி நிகழ்வதைக் காண்கிறோம். சில சமயங்களில் நாம் அமைதியாக இருக்கிறோம், சில சமயங்களில் குரல் கொடுக்கிறோம், எதிர்நடவடிக்கை எடுக்கிறோம்.

ஆனால், நாம் எப்படிச் செயல்படுகிறோம் என்பதும், நாம் என்ன சொல்கிறோம் என்பதும் எப்போதும் நம் எண்ணங்கள், உணர்வுகளால் வழிநடத்தப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவது நாம்தான், அந்தப் பொறுப்பு நம்முடையது. காந்தி சொன்னதுபோல், நாம் முதலில் மாற்றமாக இருக்கவேண்டும், அமைதியாக இருக்கவேண்டும், அன்பாக இருக்கவேண்டும், நமக்குள் அமைதி வரவேண்டும், அப்போதுதான் நம்மைச் சுற்றியுள்ள உலகுக்கு நம்மால் இன்னும் அதிக அமைதியை, அன்பை, அறிவைக் கொண்டுவர இயலும்.



**Dr பரத் பாண்ட்யா**
RI இயக்குனர், 2019–21

# களின் செய்திகள்

## உலக அமைதியை வளர்ப்போம்



அன்புள்ள ரோட்டரி தலைவர்களே,

கடந்த ஆண்டில் வன்முறையினால் இடம்பெயர்ந்த 68 மில்லியன் மக்களில் பாதி குழந்தைகள் என்பது வருத்தமான விஷயம். ரோட்டரி திட்டங்கள் மோதல்களைத் தீர்க்க சமூகங்களுக்கு திறன்களை வழங்குகின்றன.

திட்டங்கள், உதவித்தொகை மூலம், வறுமை, சமத்துவமின்மை, உள்ளிட்ட மோதலுக்கான அடிப்படை காரணங்களை நிவர்த்தி செய்ய ரோட்டரி நடவடிக்கை எடுத்து வருகின்றது.

பசித்தவர்களுக்கு உணவு, அங்கம் இழந்தவர்களுக்கு கை, கால்கள், பார்வையற்றவர்களுக்கு பார்வை, வீடற்றவர்களுக்கு வீடு, தாகத்திற்கு நீர், ஆகியவற்றை வழங்குவதே அமைதி என்பது என் எண்ணம்.

ஒரு சமூகம் சமாதானமாகவும், முற்போக்காகவும், தனிமனிதன் கண்ணியத்துடன் வாழ்ந்தால், இதை முன்னோக்கி நாம் எடுத்துச் செல்ல வேண்டும். ஒவ்வொரு ரோட்டரியனும் மனிதர்கள் முகத்தில் புன்னகை மலரக் காரணமாக இருக்க வேண்டும்.

2002இல் நிறுவப்பட்ட ரோட்டரி அமைதி மையம் அமைதிக்கான ரோட்டரியின் முயற்சியாகும். இந்த திட்டம் நிபுணர்களுக்கு உலகில் அமைதியை நிலவுவதற்கான பயிற்சியளிக்கிறது. இதில் ரோட்டரியின் கூட்டாளர் பல்கலைக்கழகங்களின் முதுகலை பட்டமும், தொழில்முறை சான்றிதழ் திட்டமும் அடங்கும்.

இன்று, 900க்கும் மேற்பட்ட அமைதி கூட்டாளிகள் பல்வேறு துறைகளில் தங்கள் ஆற்றலை பயன்படுத்துகின்றனர். மேற்கு ஆப்பிரிக்காவின் எல்லை மோதல்கள் துவங்கி அமைதிக்கான பல்வேறு துறைகளில் அவர்கள் பங்காற்றுகின்றனர்.

எலினோர் ரூஸ்வெல்ட்டின் வார்த்தைகளில்: அமைதியைப் பற்றி பேசினால் மட்டும் போதாது. அதை நம்ப வேண்டும். அதை நம்பினால் போதாது. அதைச் செயல்படுத்த வேண்டும்.

எனவே நீங்கள் ஒவ்வொருவரும் கொடுக்கும் தேவதையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



**கமல் சங்வி**
RI இயக்குனர், 2019–21


**Board of Permanent Trustees & Executive Committee**

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPN Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID Yash Pal Das | RI Dist 3080 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |

**Executive Committee Members (2019–20)**

| | |
|---|---|
| DG Deepak Gupta<br>Chair – Governors Council | RI Dist 3012 |
| DG Nayan Patil<br>Secretary – Governors Council | RI Dist 3160 |
| DG Dhiran Datta<br>Secretary – Executive Committee | RI Dist 3040 |
| DG Ajay Agarwal<br>Treasurer – Executive Committee | RI Dist 3291 |
| DG Rajendra Madhukar Bhamre<br>Member – Advisory Committee | RI Dist 3030 |



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

# District Wise TRF Contributions as on December 2019

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | India | | | |
| 2981 | 23,627 | 5,986 | 0 | 8,480 | $38,093 | 106 | 2.3 |
| 2982 | 23,622 | 12,418 | 161,362 | 720 | $198,122 | 106 | 3.5 |
| 3000 | 67,090 | 2,403 | 3,703 | 296 | $73,491 | 91 | 1.8 |
| 3011 | 23,303 | 1,089 | 21,923 | 0 | $46,315 | 53 | 1.5 |
| 3012 | 160,932 | 5,615 | 129,552 | 30,000 | $326,099 | 141 | 3.8 |
| 3020 | 26,155 | 31,775 | 0 | 12,029 | $69,958 | 100 | 2.6 |
| 3030 | 1,804 | 7 | 1,423 | 2,000 | $5,234 | 6 | 0.1 |
| 3040 | 6,359 | 145 | 8,917 | 0 | $15,421 | 8 | 0.4 |
| 3053 | 27,873 | 32 | 64,331 | 0 | $92,236 | 74 | 2.6 |
| 3054 | 5,743 | 168 | 35,809 | 0 | $41,720 | 18 | 0.3 |
| 3060 | 39,415 | 57,014 | 125,678 | 21,678 | $243,785 | 420 | 10.4 |
| 3070 | 22,234 | 705 | 9,674 | 0 | $32,613 | 83 | 2.7 |
| 3080 | 43,197 | 4,286 | 14,219 | 1,013 | $62,716 | 83 | 2.4 |
| 3090 | 10,813 | 1 | 0 | 0 | $10,814 | 29 | 1.5 |
| 3100 | 22,865 | 0 | 0 | 0 | $22,865 | 66 | 3.5 |
| 3110 | 16,220 | 1,609 | 833 | 0 | $18,662 | 27 | 0.7 |
| 3120 | 60,245 | 141 | 0 | 0 | $60,386 | 131 | 3.9 |
| 3131 | 126,819 | 1,640 | 248,055 | 43,000 | $419,513 | 474 | 9.0 |
| 3132 | 5,388 | 292 | 9,538 | 15,000 | $30,218 | 27 | 0.7 |
| 3141 | 251,021 | 11,518 | 269,961 | 66,392 | $598,892 | 598 | 10.9 |
| 3142 | 96,256 | 1,916 | 80,282 | 7,000 | $185,454 | 296 | 9.1 |
| 3150 | 53,901 | 6,336 | 35,504 | 170,368 | $266,109 | 398 | 11.2 |
| 3160 | 2,107 | 1,029 | 0 | 0 | $3,136 | 13 | 0.5 |
| 3170 | 43,147 | 5,110 | 5,388 | 0 | $53,646 | 137 | 2.4 |
| 3181 | 129,001 | 6,509 | 0 | 0 | $135,510 | 276 | 7.7 |
| 3182 | 36,324 | 7,606 | 4,723 | 0 | $48,653 | 191 | 6.1 |
| 3190 | 86,054 | 11,391 | 37,025 | 0 | $134,469 | 529 | 11.1 |
| 3201 | 31,449 | 22,113 | 96,212 | 0 | $149,774 | 63 | 1.2 |
| 3202 | 46,949 | 41,128 | 36,138 | 1,000 | $125,215 | 66 | 1.3 |
| 3211 | 14,467 | 57 | 46,879 | 436 | $61,839 | 22 | 0.5 |
| 3212 | 25,808 | 20,584 | 4,474 | 0 | $50,866 | 59 | 1.5 |
| 3231 | 2,091 | 1,500 | 3,083 | 0 | $6,674 | 33 | 0.9 |
| 3232 | 36,134 | 38,248 | 151,918 | 7,500 | $233,800 | 125 | 2.4 |
| 3240 | 70,586 | 34,129 | 33,004 | 0 | $137,719 | 220 | 7.3 |
| 3250 | 24,488 | 0 | (85) | 10,000 | $34,403 | 43 | 1.1 |
| 3261 | 5,261 | 0 | 30,770 | 0 | $36,031 | 6 | 0.2 |
| 3262 | 32,589 | 3,848 | 5,507 | 0 | $41,944 | 64 | 1.9 |
| 3291 | 56,471 | 1,630 | 33,250 | 0 | $91,351 | 56 | 1.6 |
| **India Total** | **1,757,811** | **339,976** | **1,709,049** | **396,911** | **$4,203,747** | **5,238** | **3.6** |
| 3220 **Sri Lanka** | 46,936 | 5,307 | 26,404 | 0 | $78,647 | 77 | 3.9 |
| 3271 **Pakistan** | 3,401 | 8,167 | 20 | 0 | $11,588 | 10 | 0.7 |
| 3272 **Pakistan** | 10,195 | 992 | 300 | 0 | $11,487 | 40 | 2.4 |
| 3281 **Bangladesh** | 82,707 | 3,100 | 83,661 | 5,000 | $174,469 | 184 | 3.2 |
| 3282 **Bangladesh** | 22,543 | 13,347 | 0 | 2,000 | $37,890 | 25 | 0.5 |
| 3292 **Nepal** | 135,661 | 12,737 | 330,223 | 0 | $478,622 | 249 | 5.3 |
| **South Asia Total** | **2,059,254** | **383,627** | **2,149,658** | **403,911** | **$4,996,450** | **5,823** | **3.5** |
| **World Total** | **59,477,837** | **16,502,650** | **12,042,178** | **22,722,129** | **$110,744,794** | | |

Source: RI South Asia Office



# TRF நன்கொடை நிறுவலைக் கட்டமைத்தல்

பழங்காலத்திலிருந்தே மக்கள் நீரைச் சுற்றிச் சமூகங்களை அமைத்து வந்துள்ளார்கள். கிராமத்தில் உள்ளவர்களால் அங்குள்ள கிணற்றிலிருந்து தூய நீரை இறைத்துப்பயன்படுத்த இயலுகிறது என்றால், அந்தக் கிராமத்திற்குத் தன்னைத்தானே காத்துக் கொள்ளும் ஆற்றல் உண்டு, கடினமான நேரங்களைத் தாங்கிக்கொள்ளும் திறமை உண்டு என்று பொருள். சிறப்பான பல பன்னாட்டு நல்கைகளின் மூலம் உலகெங்கும் நாம் பல உயிர்களைக் காத்துக்கொண்டிருக்கிறோம். இந்த நற்பணிகள் அனைத்தையும் நாம் தொடர்ந்து செய்ய வேண்டும் என்றால், நம்மை நாமே புதுப்பித்துக்கொள்ளவேண்டும். ரோட்டரி அறக்கட்டளையின் அந்தக் கிணறு, நம்முடைய நன்கொடை நிறுவல் தான்.


நாம் ஒரு மிக ஆழமான, வலுவான கிணற்றைக் கட்டுகிறோம், அடுத்து வரப்போகும் பல தலைமுறைகளுக்குப் பெரிய திட்டங்களுக்கான நிதி கிடைப்பதை இது உறுதிசெய்யும். ஒரு வலுவான நன்கொடை நிறுவலானது, தொலைநோக்கில் நம்முடைய அறக்கட்டளையின் நிதிச் சமநிலையை உறுதிப்படுத்தும், வருங்காலத்தில் மிகச்சிறந்த மனிதாபிமானச் சேவையை இன்னும் அதிகமாகச் செய்வதற்கு உதவக் கூடிய அவசியமான வளங்களை வழங்கும்.

TRF நன்கொடை நிறுவலைக் கட்டமைக்கிற நாம், உயர்ந்த இலக்கு களைக் குறிவைக்கிறோம்: 2025க்குள் 2025 என்கிற முன்னெடுப்பானது, 2025க்குள் 2.025 பில்லியன் நன்கொடை நிறுவலை அமைப்பதற்கானது. அதற்குள், அறக்கட்டளையின் நன்கொடை நிறுவலில் குறைந்தபட்சம் $1 பில்லியன் நிகரச் சொத்துகள் இருக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம், மீதமுள்ளவை எதிர்பார்ப்புகள் மற்றும் உயிலின்மூலம் கிடைக்கின்ற வகை அர்ப்பணிப்புகளாக அமையும்.

$2 பில்லியன் நன்கொடை நிறுவல் நம்மிடம் இருந்தால், நாம் எந்த அளவு நல்லவற்றைச் செய்ய இயலும் என்று கற்பனை செய்துபாருங்கள்! முதலீட்டு வருவாயின்மூலம் ஆண்டுதோறும் ரோட்டரியன்களுக்குச் சுமார் $100 மில்லியன் கிடைக்கும், இதைக்கொண்டு உலகம்முழுக்க எல்லாவிதமான திட்டங்களையும் நிறைவேற்றலாம்.


நாம் ஒன்றாகச் சேர்ந்து செயல்பட்டால், இதை நிகழ்த்திக் காட்டலாம். நம்மைச்சுற்றி உலகம் மாறிக்கொண்டேதான் இருக்கும், ஆனால், ரோட்டரி அறக்கட்டளையின் கிணறு காலத்தின் பரிசோதனையைத் தாண்டி நிற்கும், தொடர்ந்து உலகத்தில் நேர்விதமான தாக்கத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கும்.

சாதனைகள் என்றதும், ஷாங்காய் ரோட்டரி சங்கத்தின் நினைவு வருகிறது. அச்சங்கம் நிறுவப்பட்டு 100வது ஆண்டுவிழாவைக் கொண்டாடியுள்ளது. அதே நேரத்தில், அந்தச் சங்கம் இன்னொரு மிகச் சிறந்த மைல்கல்லையும் எட்டியது: அதன் முதல் AKS உறுப்பினர், ஃப்ராங்க் யிஹ். ஷாங்காயிலுள்ள நம் நண்பர்கள் அனைவருக்கும் பாராட்டுகள்!



**கேரி C K ஹுவாங்**
TRF அறங்காவலர் தலைவர்

# TRF-ம் அதன் பேரளவுத் திட்டங்களும்



1907ல், RC சிகாகோ தன்னுடைய முதல் பொதுச் சேவைத் திட்டத்தைத் தொடங்கியது: சிகாகோவில் பொதுக் கழிப்பறைகளைக் கட்டுதல். இந்தப் பணியின்மூலம், உலகின் முதல் சேவைச் சங்கமாக மாறியது ரோட்டரி. அதன்பிறகு உலகம்முழுக்க ரோட்டரியன்கள் ஆயிரக்கணக்கான சமூக சேவைத் திட்டங்களை செய்துள்ளனர்.

நம்முடைய தன்னம்பிக்கை வளர வளர, சங்கங்களும் மாவட்டங்களும் தாங்கள் எடுத்துக்கொள்ளும் திட்டங்களின் அளவை மிகுதியாக்குகிறார்கள், பல நேரங்களில், பெருநிறுவனங்கள் வழங்கும் CSR நிதியும் இதற்கு உதவுகிறது. நம்முடைய அறக்கட்டளை இதை இன்னொரு படி முன்னே எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் ‘பேரளவுத் திட்டங்களை’ அறிமுகப்படுத்துகிறது. இதுபற்றிய கூடுதல் தகவல்களுக்கு www.rotary.orgஐக் காணுங்கள்.

இப்போது, நான் பங்களிப்புகளைப்பற்றிப் பேச விரும்புகிறேன். சென்ற ஆண்டு இதே நேரத்தில் நம் மொத்தப் பங்களிப்புகள் இன்றைய நிலையைவிட அதிகமாக இருந்தன. இளம்பிள்ளைவாதத் தடுப்புக்கான நிதி திரட்டலில் நாம் ஓரளவு நன்கு செயல்பட்டு வருகிறோம், அதற்காக நம்முடைய EPNCக்கள் PDG E K சகாதேவன், PDG கேசவ் குன்வாருக்கு நன்றி. அதேசமயம், மற்ற அனைத்திலும் நாம் பின்தங்கியிருக்கிறோம்.

அறக்கட்டளைக்குப் பங்களிப்பதற்காகச் சங்கங்கள், ரோட்டரியன்களை ஊக்குவிக்க வேண்டும். 2019–20க்கு நாம் $30 மில்லியன் இலக்கைத் தீர்மானித்துள்ளோம். நாம் இந்தச் சவாலை நன்கு எதிர்கொள்வோம்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் உடல்நலமும் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த 2020 அமையவேண்டுமென வாழ்த்துகிறேன்!



**குலாம் வஹன்வதி**
TRF அறங்காவலர்

# பகுதிமயமாக்கலும் கூட்டாட்சிமுறையும்தான் எதிர்காலம்: பரத் பாண்ட்யா

ரஷீதா பகத்

ஒட்டுமொத்த உலகிலிருந்தும் இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் நீண்ட பயணத்தை ரோட்டரியும் ரோட்டரியன்களும் நிறைவுசெய்ததும், வெவ்வேறு பகுதிகளுக்கு வெவ்வேறு முக்கியத்துவங்கள் இருக்கலாம். ரோட்டரியில் நாம் ஒரு கூட்டாட்சி முறைக் கட்டமைப்பைச் சிந்திக்கிறோம். இதில் இந்தியா/ஆசியா ஒரு பகுதியாகவும், ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா வெவ்வேறு பகுதிகளாகவும் இருக்கலாம். ஆப்பிரிக்காவின் கவனம் AIDS, எழுத்தறிவாக இருக்கலாம், ஆசியாவில் அது எழுத்தறிவு, ஆரோக்கியமாக இருக்கலாம். பகுதிமயமாக்கலும் கூடடாட்சிமுறையும்தான் நம்முடைய எதிர்காலம் என்று நான் நம்புகிறேன் என்றார் RI இயக்குநர் பரத் பாண்ட்யா. ஜனவரி 1, 2020 அன்று கல்கத்தா ரோட்டரி சங்கத்தின் 100வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது நடைபெற்ற மிகப்பெரிய பாராட்டு விழாவில் அவர் இவ்வாறு பேசினார்.

வருங்காலத்தில், ரோட்டரி நான்கு முக்கியக் கொள்கைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டியிருக்கும் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்: பொருளுள்ளதாக இருக்க




*முன்னாள் சங்கத்தலைவர் PP S K சர்மா குத்துவிளக்கு ஏற்றுகிறார். PDG சோமேந்தர நந்தி, RID 1130வைச்சார்ந்த டேவிட் பாமர், PRIP ராஜேந்திர சாபூ, RC கல்கத்தா செயலாளர் அனுசுவா தாஸ், சங்கத்தலைவர் புர்னேந்து ராய் சவுத்ரி, PP நிலிமா ஜோஷி, RID பரத் பாண்டியா மற்றும் நூற்றாண்டு குழுத்தலைவர் சோமன் ரே.*

வேண்டும், கூட்டுமுயற்சிகளை உண்டாக்கவேண்டும், நிகழ்வுகள், திட்டங்கள் தொடராமலிருப்பதைச் சரிசெய்யவேண்டும், பகுதி மயமாக்கல் அல்லது ஒரு கூட்டாட்சிமுறைக் கட்டமைப்பு.

உலகில் மிகப்பெரிய பிரார்த்தனை பிறருக்கு உதவுவது தான் என்றார் பாண்ட்யா. நீங்கள் அதை 100 ஆண்டுகளாகச் செய்து வருகிறீர்கள், பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளீர்கள். உங்களுடைய சேவை இயக்குநர் என்றமுறையில், RI வாரியத்தின் சார்பாகச் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன், உங்களுக்கு நன்றிதெரிவிக்கிறேன்.''

அவர் எங்கு சென்றாலும் சரி, தங்களிடமிருந்து ரோட்டரி என்ன எதிர்பார்க்கிறது என்று ரோட்டரியன்கள் அவரைக் கேட்கிறார்கள். என்னுடைய பதில்: தூய உள்ளங்கள், அழுக்கான விரல்நகங்கள். நாம் சொல்வதிலும் செய்வதிலும் நேர்மையைப் பின் பற்றி நாம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும்.

இந்தச் சங்கத்தின் கடந்தகாலம் மிகச்சிறப்பாக அமைந்திருப்பது உறுதி; நாம் கடந்தகாலத்தை எண்ணிப் பெருமைப்படுகிறோம்; ஆனால், நாம் எதிர்காலத்துக்கு நகரவேண்டும். தலைமைச் சுடர் புர்னேந்து ராய் சௌத்ரியிடம் இருக்கிறது. அந்தச் சுடரை இன்னும் சற்று உயரமாகப் பிடித்து, அதை இன்னும் கூடுதலாக ஒளிரச்செய்யவேண்டும், வருங்காலத் தலைமுறைகளிடம் அதை ஒப்படைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அனைத்து ஆறுகளும் ஓர் எளிய இடத்திலிருந்துதான் தொடங்குகின்றன என்றார் பாண்ட்யா, மலையிலிருந்து விழும் ஆற்றில் பல சிறு ஓடைகள் இணைகின்றன, அது சமதளத்துக்கு வரும்போது, வலிமையான பேராறாகிவிடுகிறது. ரோட்டரியும் அப்படிதான். நூறு ஆண்டுகளுக்கு முன்னால், உலகில் மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. முதல் உலகப்போர் முடிந்திருந்தது, முதல் பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப் பட்டிருந்தது, இன்னும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன, இந்தியாவின் இந்த மூலையில், ஓர் இளம் ரோட்டரி சங்கம் பிறந்தது.

அந்தப் பயணம் தொடரத் தொடர, மற்ற பல சிறந்த ஆண்களும் பெண்களும் அதில் சேர்ந்தார்கள்; அவர்களுடைய எண்ணங்கள், யோசனைகள், கருத்துகள் குவிந்தன, இன்று இந்தச் சங்கம் RID 3291ல் மட்டுமின்றி, ஒட்டுமொத்த இந்தியாவிலும் முன்னணிச் சங்கமாக உள்ளது; ஒட்டு மொத்தத் தெற்கு ஆசியாவிலும் சிறந்துவிளங்குகிறது என்றுகூடச் சொல்லலாம்.


இந்தப் பயணம் பல ஏற்ற, இறக்கங்களை, சவால்களைக் கொண்ட ஒரு ரங்கராட்டினமாகதான் இருந்திருக்கும். ஆனால், அவற்றின் நிறைவில், அது ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய, மனநிறைவை வழங்கக் கூடிய, வளமாக்கக்கூடிய பயணமாக இருந்தது தன்னை மீறிய சேவையின் ஒரு பயணம் அது.''

RI இயக்குநர் தொடர்ந்து பேசியது: ரோட்டரியை இரண்டே சொற்களில் விவரிக்க வேண்டும் என்று நீங்கள் என்னிடம் கேட்டால், நான் இந்தச் சொற்களைச் சொல்வேன்: நம்பிக்கை மற்றும் வாய்ப்பு; சமூகம் ரோட்டரியின் மீது நம்பிக்கை வைத்துள்ளது, சமூகத்தை முன்னேற்ற, உலகை இன்னும் சற்று மேம்படுத்த ரோட்டரி ஏதாவது செய்யும் என்று நம்புகிறது. நம் உலகை இன்னும் சற்று மேம்பட்ட ஓர் இடமாக மாற்றும் அந்த நம்பிக்கையை நிறைவேற்றும் வாய்ப்பு உங்களுக்கும் எனக்கும் கிடைக்கிறது.''


2


3


4


5






1. PDG நந்தியுடன் RID *பரத் பாண்டியா.*
2. US *கான்சுல் ஜெனரல் பேட்டி ஹாஃப்மேனுடன் சோமன் ரே. சங்கத் தலைவர் புர்னேந்து சவுத்ரியும் செயலாளர் அனுசுவா தாஸ் அவர்களும் உடன் உள்ளார்.*
3. *சோமன் ரே, டேவிட் பாமர்,* PDG *நந்தி மற்றும்* PP *ரித்விக் குப்தா.*
4. PP *வினய் நெவாட்டியாவுடன்* PRIP *சாபூ.*
5. *பேட்டி ஹாஃப்மேன், டேவிட் பாமர் வெளிநாட்டு ரோட்டரியினருடன்.*

சென்ற நூற்றாண்டில் ரோட்டரி நிறைய சாதித்து விட்டது; ஆனால், அவற்றில் எதுவும் உலகிலிருந்து இளம் பிள்ளைவாதத்தை நீக்குவதற்கு அருகில் கூட வராது. எனினும், அது நான்கு சவால்களைச் சந்தித்தது; நம் காலத்துக்குப் பொருத்தமாக அது தொடருமா? நிகழ்ச்சிகள், திட்டங்கள் தொடர்ந்து நடப்பதை அதனால் உறுதிசெய்ய இயலுமா? (இதைச் செய்யாவிட்டால் நாம் தொடங்கிவிட்டுச் சென்றுவிடுகிற நிறுவனம் என்கிற தோற்றத்தைப் பெறுவோம்); அதிகக் கவனத்தை, கூட்டுமுயற்சி களை கொண்டுவர இயலுமா?

இச்சங்கம் பதிவு செய்யப்பட்டு 100 ஆண்டுகள் நிறை வடைவதைக் குறிப்பிட்டுப் பாராட்டிய PRIP ராஜேந்திர சாபூ, RC கல்கத்தாவுக்கு ஒருபோதும் வராத அந்த மனிதர் மீது எனக்கொரு புகார் உண்டு என்றார். அவர் குறிப்பிட்ட அந்த மனிதர், ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸ்.

இதைத் தொடர்ந்து பால் ஹாரிஸை நோக்கிப் பேசுவது போல் அவர் தன்னுடைய சொற் பொழிவை அமைத்தார். நாங்கள் உங்களுக்கு முழு அக்கறையுடன் நன்றி தெரிவிக்கிறோம்; ஏனெனில், எங்களுக்காக வாழாமல், யாருக்கு எங்கள் உதவி தேவைப்படுகிறதோ அவர்களுக்காக வாழவேண்டும் என்ற விதையை நீங்கள் எங்கள் இதயங்களில் விதைத்தீர்கள்.

சங்கத்தின் வரலாற்றைப் பற்றிச் சிறிதளவு பேசிய சாபூ, தொடக்கத்தில் RC கல்கத்தாவை உருவாக்க 45 பேரைத் திரட்டுவது கடினமாக இருந்தது என்பதை நினைவுகூர்ந்தார். சங்கத்தின் இதழாகிய ‘சக்கா’ 1925ல் தொடங்கப் பட்டது, இன்றுவரை முன்னோடி நிலையில் தொடர்கிறது. “சர் சுரேந்திர நாத் பேனர்ஜி இச்சங்கத்தின் உறுப்பினராக இருந்துள்ளார், மகாத்மா காந்தி இங்கு பேசியிருக்கிறார் என்கிற பெருமைகள் சங்கத்துக்கு உண்டு. கல்கத்தாவின் பல முக்கிய நபர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்துள்ளார்கள், அல்லது, இங்கு பேசியுள்ளார்கள். அத்துடன், உங்களுடைய சங்கத்தின் செயலாளரான முதல் இந்தியர் நிதீஷ் லஹார்ரியும் குறிப்பிடத்தக்க ஆளுமையாவார்.’’

தன்னுடைய மறைந்த தந்தையும் RC கல்கத்தா உறுப்பினர் என்பதைக் குறிப்பிட்டார் சாபூ, 1960ல் அவர் கொல்கத்தா விலிருந்து சண்டிகருக்கு மாறிய போது, ரோட்டரியில் இணைய அழைக்கப் பட்ட போது, நிறுவனத் துடன் அவருக்கு ஏற்கெனவே ஓர் இணைப்பு இருந்தது. ’’இங்கு RI தலைவராக வரும் பெருமையும் எனக்குக் கிடைத்தது, இந்தியாவிலிருந்து நான்காவது RI தலைவரும் கொல்கத்தாவின் மைந்தருமான சேகர் மேத்தா பொறுப்பேற்கிற நேரத்தில் இங்கு இருப்பதை எண்ணி நான் மகிழ்கிறேன்.’’

RI தலைவர் மார்க் மலோனி வழங்கிய வீடியோச் செய்தியில், அவர் நூறாண்டு காணும் சங்கத்தைப் பாராட்டினார்.’’ இந்தச் சங்கத்தின் வரலாறு மிகச்சிறந்தது; செப்டம்பர் 26, 1919ல் அது




*நூற்றாண்டு சிறப்பு தபால் தலை வெளியிடும் PRIP சாபூ, சங்கத்தலைவர் சவுத்ரி சோமன் ரே மற்றும் அனுசுவாதாஸ் ஆகியோரும் உடன் உள்ளனர்.*



*அமெரிக்க கண்ஃபௌண்டேஷன் தலைவர் Dr V K ராஜீவுடன் RID பாண்டியா, சவுத்ரி, சோமன் ரே, அனுசுவாதாஸ் மற்றும் இதர ரோட்டரியினர்.*

அமைக்கப்பட்ட போது, ஆங்கிலக் கால்வாய்க்கும் சீனக் கடலுக்கும் இடையிலிருந்த ஒரே ரோட்டரி சங்கம் அதுதான். ஆசியாவில் மிக நெடுங்காலமாகத் தொடரும் சங்கமும் இதுதான். லாகூர், பம்பாய், சென்னை, தில்லி, டாக்கா-வில் ரோட்டரி சங்கங்களை அமைக்க இச்சங்கம் உதவியது. நானும் கே-யும் பிப்ரவரியில் உங்களுடன் இந்த விழாவைக் கொண்டாடுவதை எண்ணி ஆவலாக உள்ளோம்'' என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

RC கல்கத்தா, RID1130ல் உள்ள சங்கங்களுடனும் UKல் வேறு இடங்களில் உள்ள சங்கங்களுடனும் கூட்டுமுயற்சிகளை உருவாக்கத் துணைநின்ற RID1130ன் டேவிட் பால்மர் தன்னுடைய நகைச்சுவை நிறைந்த உரையின்மூலம் மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். அவர் தன்னுடைய பேச்சை இவ்வாறு தொடங்கினார்: முந்தைய நாள் இரவு (ஒரு மிகப்பெரிய புத்தாண்டு இரவுக் கொண்டாட்டம்) நானும் ஒரு ரஷ்ய பெல்லி நடனக்கலைஞரும் அருகருகே



RID *பரத் பாண்டியா மற்றும் மாதவி.*



RIPN *சேகர் மேத்தாவுடன்* Rtn.*பாமர்.*





RIPN *அஜய் அகர்வால் மற்றும் அவர் மனைவி மம்தா அவர்களுடன் சோமன் ரே.*

## தி கிராண்ட் ஹோட்டலில் மேன்மை ததும்பும் பழைய நினைவுகள்

*UK, US, ஆஸ்திரேலியா, எகிப்து, பங்களாதேஷ், மற்ற நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டுப் பங்கேற்பாளர்கள் பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். ஆனால், முதன்மையாக அங்கு இருந்தவர்கள் யார் என்றால், ஸ்காட்லாந்து, RID 1130 உறுப்பினர்கள் தாம். பல ஆண்டுகளாகச் சமூக சேவைத் திட்டங்களை நிறைவேற்று வதில் இந்த RI மாவட்டமும் RC கல்கத்தாவும் வலுவான கூட்டணி அமைத்துள்ளன.*

*இந்த விழா, கொல்கத்தா ஹோட்டல் கிராண்டின் மிகச்சிறந்த பெருவிருந்துக் கூடத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. அங்கு, குழுவின் பழைய மற்றும் மூத்த உறுப்பினர்கள் பல வரலாற்று நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்கள். ஏனெனில், இந்த இடத்தில் இச்சங்கம் 40 ஆண்டுகளுக்குமேலாகத் தன் கூட்டங்களை நடத்திவந்தது. ஆனால், RC கல்கத்தா ரோட்டரி சதனைக் கட்டியபிறகு, அதன் கூட்டங்கள் அங்கு மாறின.*

*“ஆனால், பல மூத்த உறுப்பினர்கள் இந்த ஹோட்டலுக்குத் திரும்பவேண்டும் என்கிற தங்கள் ஏக்கத்தை அடிக்கடி வெளிப்படுத்தினார்கள்” என்றார் ஒரு மூத்த உறுப்பினர், “சுவையான உணவைக்கூட விட்டுவிடுங்கள், தி கிராண்ட் ஹோட்டலைப்போல பிஸ்கட்கள், பாஸ்ட்ரிகளைச் செய்யக் கொல்கத்தாவில் யாரும் இல்லை.” இன்னொரு விதமான பழைய நினைவுகளும் அங்கு பேசப்பட்டன. பேச்சாளர்கள், மூத்த ரோட்டரித் தலைவர்கள் இச்சங்கத் தின் பழைமையான வரலாற்றை நினைவுகூர்ந்தார்கள். 1920ல் இச்சங்கத்தின் உறுப்பினர்கள் எல்லாரும் வெள்ளை ஆண்களாக இருந்த போது, ராட்டையின் முக்கியத்துவத்தைப்பற்றி மகாத்மா காந்தி இங்கு பேசியுள்ளார். அவரைப் பெருமைப்படுத்தும்வகையில், அந்தக் கூட்டத்தில் சைவ உணவுமட்டுமே பரிமாறப்பட்டது. மகாத்மா காந்தி கண்களில் குறும்புடன் இவ்வாறு சொன்னதை நாம் காட்சிப்படுத்திப் பார்க்கலாம்: “இன்று, ரோட்டரியன்கள் ஒரு வங்காள விதவையின் மதிய உணவை உண்கிறார்கள்.”*

*கீஜ தலைவரான முதல் இந்தியராகிய நிதீஷ் லஹார்ரியைப்பற்றியும் பலர் பேசி னார்கள், நினைவுகூர்ந்தார்கள். அவர் 1926ன் முற்பகுதியில் இந்தச் சங்கத்தில் சேர்ந்தார், 1926–27ல் சங்கத்தின் முதல் இந்தியச் செயலாளரானார். “ஆனால், அப்போது அவர் ஓர் அமைதியான, சொல்லப்போனால், கூச்சம் நிறைந்த இளைஞராக இருந்தார்.”*

*லஹார்ரியைப்பற்றி அடுத்த இதழில் மேலும் பேசலாம்!*

நிற்கும் புகைப்படமொன்றை இந்த அறையிலிருக்கும் ரோட்டரியன்களில் ஒருவர் பதிவுசெய்தார்,” அதைப் பார்த்த என் மகள் என்னை அழைத்து,” நீங்கள் ரோட்டரி நிகழ்ச்சி யொன்றுக்காக இந்தியா சென்றிருப்பதாக நினைத்தோம்... நீங்கள் ரஷ்யாவில் என்ன செய்கிறீர்கள்?” என்று கேட்டார்.

சங்கத்தின் முன்னாள் தலைவர், நூற்றாண்டுக் குழுத் தலைவர் சௌமென்ரேயுடனான தன்னுடைய கூட்டத்தை நினைவுகூர்ந்த அவர்,” ரேயுடன் என்னுடைய சந்திப்பு கொஞ்சம் நல்ல அதிர்ஷ்டத்தாலும், கொஞ்சம் வாய்ப்பாலும் நிகழ்ந்தது, அதனால் எங்கள் மாவட்டம் RC கல்கத்தாவுடன் ஒரு சிறந்த கூட்டுறவை அமைத்துக்கொண்டது” என்றார். அவர்கள் இருவரும் முதலில் (லண்டனில் உள்ள) பாடிங்டன் ரயில்நிலையத்தில் சந்திப்பதாகத் தீர்மானித்தார்கள்;” பனிப்போர் உளவாளிகளைப்போல், அவர் தன்னுடைய சட்டைப்பையில் ஒரு கார்னேஷன் அல்லது ரோஜாவை அணியவேண்டும், நான் என் கையில் ஒரு செய்தித்தாளை வைத்திருக்கவேண்டும் என்று பேசிக்கொண்டோம். சௌமென் தன்னுடைய இயல்பினால் இதை முற்றிலும் தவறாகப் புரிந்துகொண்டார், ரோஜாவை அணிந்துகொள்ளாமல், கையில் வைத்து ஆட்டியபடி பாடிங்டன் ரயில்நிலையத்தில் அங்குமிங்கு நடந்துகொண்டிருந்தார், லண்டனில் நன்கு அறியப்பட்ட நபர்கள் சிலர் அடிக்கடி வரும் அந்த ரயில்நிலையத் தில் அப்படிச் செய்வது அறிவார்ந்த செயலே இல்லை! நான் அவரை அடையாளம் கண்டேன், அவருக்கு வந்திருக்கக்கூடிய சங்கடம் அல்லது




PDG பிரபாத் கிருஷ்ணா ரோஹத்கி மற்றும் சோமன் ரே.

கைதாகும் சூழ்நிலையிலிருந்து அவரைக் காப்பாற்றினேன்.''

நாங்கள் சிறிது நேரம் பேசினோம்,'' கல்கத்தாவிலிருக்கும் ஒரே ஒரு சங்கத்தின் ரோட்டரியன்கள் செய்கிற அறக்கட்டளைப் பணிகளுடைய அளவை அறிந்து வியந்தேன்.''

பல சங்கங்கள் அவருடன் இணைந்து பணியாற்றுவதில் நேர்வித ஆர்வம் காட்டின.'' மிகச் சமீபத்தில், அவர் தன்னுடைய மாவட்டச் சந்திப்பின் தலைவராக இருந்தபோது,'' TRF மற்றும் அதன் நிதியளித்தலுக்கான ஒரு திறந்த அணுகுமுறை எப்படி மிகச்சிறந்த பலன்களைத் தரக்கூடும்'' என்பதுபற்றி அங்கு பேசும்படி ராயை அழைத்தார். மாவட்ட உறுப்பினர்களிடையே அவருடைய பேச்சின் தாக்கம் மிகச்சிறப்பாக இருந்தது. நூற்றாண்டு மணியை வடிவமைக்க உதவும்படி ரே அவரைக் கேட்டுக்கொண்டார். இந்த மணியை PDG பிரபாத் கிருஷ்ண ரஹாத்கி ஆதரித்துள்ளார்.

சௌமென் ரோ கூட்டத்தை வழிநடத்தி, பழங்காலக் குறிப்புகள் பலவற்றை வழங்கிப் பார்வையாளர்களை மகிழ்வித்தார். இச்சங்கம் தன்னுடைய நூற்றாண்டின் போது ரூ.20 கோடி மதிப்புள்ள திட்டங்களை நிறைவேற்றத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்தார் சங்கத் தலைவர் புர்னேந்து ராய் சௌத்ரி. அன்றைய நாளில் முன்னதாக, உரிய காலத்துக்கு முன்பாகப் பிறந்த குழந்தைகளுடைய கண் பார்வையிழப்பைத் தடுக்கும் ரூ.25 லட்சம் மதிப்புள்ள கேமெரா ஒன்றை ஓர் உள்ளூர் மருத்துவமனைக்கு இச்சங்கம் வழங்கியிருந்தது. இந்த நேரத்தில் தபால் துறை ஒரு சிறப்பு உறையை வெளியிட்டது. RIPN சேகர் மேத்தா, DG அஜய் அகர்வால் மற்றும் கல்கத்தா க்கு தூதரக ஜெனரல் பட்டி ஹாஃப்மன் சங்க உறுப்பினர்களைப் பாராட்டினார்கள்.



RIPN மேத்தா மற்றும் PRIP சாபூ.



PP *ரித்விக் குப்தா, ஷஷி ரோஹத்கி,* PDGs *நந்தி மற்றும் ரோஹத்கி.*

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# ரோட்டரி மாறலாம், இன்னும் முன்னேறலாம் என்கிறார்

# ஹோல்கர் நாக்

ரோட்டரி வழங்கும் பல வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு ரோட்டரியன்கள் தங்களுடைய வாழ்க்கைகளையும் தாங்கள் சேவைபுரியும் சமூகங்களையும் வளப்படுத்தவேண்டும் என்று ஊக்கப்படுத்துகிறார் RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஹோல்கர் நாக்.

RC ஹெர்ஜோக்டம் லௌவன்பர்க்-மோல்ன், ஜெர்மனியின் உறுப்பினரான நாக், 20 ஜனவரி அன்று அமெரிக்காவின் கலிஃபோர்னியா, சான் டியாகோ-வில் நடைபெற்ற ரோட்டரி இன்டர்நேஷனல் கூட்டத்தில், உள்வரும் மாவட்ட ஆளுநர்கள்மத்தியில் 2020-21ன் தலைமைக் கருப்பொருளை அறிவித்தார்: வாய்ப்புகளைத் திறக்கும் ரோட்டரி.

ரோட்டரி என்பது, மக்கள் இணைவதற்கான சங்கம் மட்டுமில்லை, “எல்லையில்லாத வாய்ப்புகளுக்கான ஓர் அழைப்பு’’ என்றார் நாக். ஜூலை 1 அன்று தலைவராகும் இவர், சேவைத் திட்டங்களின்வழியாக உறுப்பினர்கள் தங்களுடைய வாழ்க்கைகளையும் தங்களிடம் உதவிபெறுவோருடைய வாழ்க்கைகளையும் மேம்படுத்து வதற்கான வழிகளை ரோட்டரி உருவாக்குகிறது என்று வலியுறுத்தினார்.

“நம்முடைய பெரிய, சிறிய சேவைச் செயல்பாடுகள், நம்முடைய உதவி தேவைப்படும் மக்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குகின்றன என்று நாம் நம்புகிறோம்’’ என்றார் நாக். ரோட்டரி தலைமை வாய்ப்புகளை உருவாக்குவதாகவும், உறுப்பினர்கள் உலகெங்கும் சென்று தங்களுடைய சேவை யோசனைகளைச் செயலாக்குவதற்கு, வாழ்நாள் இணைப்புகளை உருவாக்குவதற்கு வாய்ப்பளிப்பதாகவும் அவர் தொடர்ந்து கூறினார். “நாம் செய்கிற ஒவ்வொன்றும் யாருக்கோ, எங்கோ இன்னொரு வாய்ப்பைத் திறக்கிறது’’ என்றார்.

### வருங்காலத்துக்காக மாறுதல்

ரோட்டரியை விரிவாக்கிச் சிறப்பாக்குவதற்கான மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் படியும் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார் நாக். சங்கங்களும் மாவட்டங்களும் உறுப்பினர் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கான ஒரு குறிப்பிட்ட இலக்கை அமைப்பதைவிட, நீடித்திருக்கக்கூடிய, இயற்கையான முறையில் வளர்வது எப்படி என்று சிந்திப்பது நல்லது என்றார் அவர். இப்போதைய



உறுப்பினர்களுக்கு நல்ல அனுபவத்தை வழங்குவது, தங்கள் சங்கத்துக்கு நன்கு பொருந்துகிற புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது ஆகியவற்றில் சங்கங்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

''புதிய உறுப்பினர்களை வெறும் புள்ளிவிவரங்களாகப் பார்ப்பதையும், அவர்கள் சங்கத்தில் இணைந்தவுடன் அவர்களைக் கண்டுகொள்ளாமலிருப்பதையும் நாம் நிறுத்தவேண்டும்'' என்றார் நாக்.



''ஒவ்வொரு புதிய உறுப்பினரும் நம்மைச் சிறிதளவு மாற்றுகிறார். அவர் புதிய பார்வைகளை, புதிய அனுபவங்களைக் கொண்டுவருகிறார். நாம் இந்தத் தொடர்ந்த புதுப்பிப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். புதிய உறுப்பினர்களிடமிருந்து கற்றுக்கொண்டால், நாம் இன்னும் வலுவாவோம்.''

ரோட்டரியின் செயல் திட்டமானது சங்கங்களுடைய வளர்ச்சியின் போது அவற்றுக்கு வழிகாட்டும் என்றார் நாக். ஒவ்வொரு சங்கமும் ஆண்டுக்கு ஒருமுறையாவது வியூகத் திட்டமிடல் கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று பரிந்துரைத்தார் அவர். அக்கூட்டத்தில், ஐந்தாண்டுகளில் தாங்கள் எங்கு இருக்க விரும்புகிறோம், தங்கள் உறுப்பினர்களுக்கு அதிக மதிப்பைக் கொண்டுவருவது எப்படி என்பவைபற்றிச் சங்கத்தினர் பேசவேண்டும்.

பெண்கள் தலைமைப் பொறுப்புகளுக்கு வருவதையும், புதிய சங்கங்கள் உருவாவது, இயங்குவதில் ரோடராக்டர்கள் ஒரு முக்கியப் பங்களிப்பதையும் நாக் காண விரும்புகிறார். மாவட்டத் தலைவர்கள் புதிய சங்க மாதிரிகளை உருவாக்கவேண்டும், ரோட்டரியில் இருப்பது என்றால் என்ன என்பதை மீண்டும் சிந்திக்கவேண்டும், இளைஞர்களை இந்தப் புதிய சங்கங்களின் கட்டமைப்பாளர்களாக இருக்க அனுமதிக்கவேண்டும் என்றும் அவர் ஊக்குவித்தார்.

''நாம் புதிய அணுகுமுறைகளுக்கு மனத்தைத் திறந்து வைத்திருக்க வேண்டும், இளைஞர்களுக்கான தனித்துவமான சங்கங்களை உருவாக்குவது தீர்வின் ஒரு பகுதி மட்டும் தான்'' என்றார் நாக். ''தங்களுக்கு எந்தவிதமான ரோட்டரி அனுபவம் ஒத்துப்போகிறது என்பதை ரோடராக்டர்களே தீர்மானிக்கட்டும். இந்த இளைஞர்கள் அறிவாளிகள், ஆற்றல் உள்ளவர்கள், சாதிக்கக் கூடியவர்கள்.''

ரோட்டரி உறுப்பினர்கள் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய தேவையை வலியுறுத்திய நாக், ரோட்டரிக்காக நேரம் மெதுவாக இயங்காது என்றார்: ''விரைவான மாற்றம் நம்மைத் தோற்கடிக்க நாம் அனுமதிக்கமாட்டோம். இந்தக் கணத்தைப் பயன்படுத்திக்கொண்டு ரோட்டரியை இன்னும் வலுவாக, இன்னும் மாறக்கூடியதாக, நம் மைய மதிப்பீடுகளுடன் இன்னும் அதிகம் பொருந்தியதாக ஆக்குவோம்.''

© rotary.org

# அரசு செய்யும் பணிகளில் 10% சேவைத் திட்டங்களை நாம் நிறைவேற்றுவோம்: சேகர் மேத்தா

ரஷீதா பகத்

இந்தியாவில் ரோட்டரியன்கள் பலவிதமான எழுத்தறிவுத் திட்டங்களை வெற்றிகரமாக நடத்திவருகிறார்கள். மகிழ்ச்சிப் பள்ளிகள், ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், மின் கற்றலைப் பரப்புதல் உள்ளிட்ட இந்தத் திட்டங்களின் வெற்றியால், ஆர்வத்துடன் மனமார உழைத்தால் நிறைய சாதிக்கலாம் என்பது புரிகிறது என்றார் RIPN சேகர் மேத்தா. சென்னையில் RI மாவட்டம் 3232 நடத்திய ஒரு பாராட்டு விழாவில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதைப்பற்றிச் சிந்திக்கும் போது எனக்கு ஒரு புது எண்ணம்; அரசாங்கம் செய்யக்கூடிய பணிகளில் 10 சதவிகிதத்தை ரோட்டரி செய்யவேண்டும். மின்கற்றலில் நாம் ஏற்கெனவே 30%க்கு மேல் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்திய அரசு ஒரு கோடிக் கழிப்பறைகளைக் கட்டினால், நாம் 10 லட்சம் கழிப்பறைகளைக் கட்டவேண்டும். அது சாத்தியம்தான். என்னுடைய சொந்த



*DG G சந்திரமோகன் மற்றும் அவர் மனைவி மஞ்சுளா, RIPN சேகர் மேத்தா மற்றும் அவர் மனைவி ராஷி அவர்களுக்கு மலர் கொத்து வழங்குகிறார். PDG ISAK நாசர், DGE S முத்துபழனியப்பன், PRID P T பிரபாகர், RIDN A S வெங்கடேஷ், DGN J ஸ்ரீதர், A G பாலசுப்ரமணியன் மற்றும் Dr சங்கரன் ஆகியோரும் உடன் உள்ளனர்.*

சங்கம்(RC கல்கத்தா மகாநகர்) மட்டுமே 10,000 கிராமப்புறக் கழிப்பறைகளை அமைத்துவருகிறது.

100,000 தடுப்பணைகளைக் கட்டவேண்டும் என்று GoI இலக்கு அமைத்தால், நாம் 10,000 தடுப்பணை களைக் கட்டுவோம். 40 மாவட்டங்கள் சேர்ந்தால் இதைச் செய்துவிடலாம். உங்கள் பணியில் 10% நாங்கள் செய்வோம் என்று சொல்லும் துணிவு எத்தனை அமைப்புகளுக்கு உண்டு?

இந்நிகழ்ச்சிக்குமுன் தான் பார்த்த சிறந்த திட்டங்களையும் அவர் விவரித்தார்: RC மெட்ராஸ் நடத்திய மிகச்சிறந்த ஏரி மீட்புத் திட்டம் மற்றும் ஒரு மகிழ்ச்சிப் பள்ளி.

ரோட்டரியன்கள் இன்னும் பெரிய திட்டங்களை அதிகத் துணிவோடு நிறைவேற்றவேண்டும் என்ற அவர், ரோட்டரி இதைச் செய்யத் தொடங்கிவிட்டால், பல சேவைப் பகுதிகளில் அரசு ரோட்டரியோடு விரும்பி இணையும் என்றார். அதேபோல், பிற கூட்டு முயற்சி களிலும் ரோட்டரி இறங்கவேண்டும். எடுத்துக்காட்டாக, எழுத்தறிவுத் திட்டம் பிரம்மகுமாரிகளுடன் ஒரு மிகப்பெரிய கூட்டுமுயற்சியைத் தொடங்கியுள்ளது. கூட்டணியில் மிகப்பெரிய வலிமை உள்ளது என்றார் அவர்.

நம் நாட்டின் தேவைகள் மிகப்பெரியவை. பெரிய இலக்குகளை முன்வைத்தால், மக்கள் உங்களைப் பார்த்துச் சிரிப்பார்கள். அதன் பொருள், நீங்கள் சரியான பாதையில் உள்ளீர்கள். யாரைப்பார்த்து ஊர் நம்பாமல் சிரிக்கிறதோ, அவர்கள்தான் வரலாறு படைப்பார்கள்.

ரோட்டரியன்களைப் பெரிய அளவில் கனவு காணும்படி ஊக்குவித்த மேத்தா, 30 ஆண்டுகளுக்குமுன் 'நாம் இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவோம்' என்று சொன்ன மனிதருடைய துணிவைச் சுட்டிக்காட்டினார்.

உலகின் பெரும்பகுதியிலிருந்து இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் பணியில் ரோட்டரி தனியாகச் செயல்படவில்லை, பலருடைய மிகச் சிறந்த கூட்டுமுயற்சிதான் அது.

ரோட்டரியன்கள், ரோட்டரி சங்கங்கள் ஆயிரக்கணக்கான கண் அறுவைச்சிகிச்சைகளைச் செய்துள்ளார்கள், ஏராளமான கழிப்பறைகளைக் கட்டியுள்ளார்கள், நீர்நிலைகளை மீட்டுள்ளார்கள் இதற்கெல்லாம் காரணம், ரோட்டரியன்கள் இதயத்திலிருந்து சிந்திக்கிறோம்.''

அதேசமயம், ரோட்டரியின் வலைப்பின்னல், திறமைகளும் மிகச் சிறந்தவை. அத்துடன், இங்குள்ள ஒவ்வொருவரும் உங்கள் சமூகத்தில் ஒரு தலைவர் ஒரு முன்னணி மருத்துவர், வழக்கறிஞர், தொழிலதிபர் நம் பகுதிகளில் 1.5 லட்சம் ரோட்டரி குடும்பங்கள் உள்ளன. நாம் சமூகத் தலைவர்கள், நமக்கு 100 வயதாகிறது, ஆகவே, நாம் சிறு விஷயங்களைச் செய்ய இயலாது.

அதேசமயம், உங்கள் திட்டங்கள் கட்டமைப்புடன் இருக்கட்டும், எழுத்தறிவுத் திட்டத்தைப்போல. அவற்றில் ஒரு சீரமைப்பும் தரநிலைகளும் இருக்கட்டும். அப்போது நீங்கள் எல்லாக் கனவுகளையும் நனவாக்கலாம்.''

RID 3232ன் மூத்த தலைவர்களைப் பாராட்டிய மேத்தா, இது ஒரு மிகச் சிறந்த மாவட்டம் என்றார், 5-7 ஆண்டுகளில் உங்கள் உறுப்பினர் எண்ணிக்கை இருமடங்காகியுள்ளது. TRF வழங்கலிலும், கடந்த பல ஆண்டு களாக நீங்கள் $1 மில்லியனுக்குமேல் வழங்கியுள்ளீர்கள். இத்துடன், உங்களுடைய சேவைத் திட்டங்கள் மிகச்சிறந்தவை. இன்று காலை நான் பார்த்த RC மெட்ராஸின் இரு திட்டங்களும் அதற்கு நல்ல எடுத்துக் காட்டுகள்.

நிகழ்ச்சிக்கு ஏற்பாடுசெய்த PDG



ISAK நஜார், DG G சந்திரமோகனுக்கு நன்றிதெரிவித்த மேத்தா, RID 3232 ரோட்டரியன்கள் தன் மீதும் ராஷி மீதும் பொழிந்த அன்பைக் கண்டு திகைத்து நிற்பதாகச் சொன்னார். வியாழன் மதியத்தில் இந்தக் கூடம் நிரம்பி வழிவதே இதற்குச் சான்று. உங்களைப்போலவே நாடுமுழுவதுமுள்ள ரோட்டரியன்கள் விருந்தோம்பலை வெளிப்படுத்தி யுள்ளார்கள். எங்கள்மீது நீங்கள் பொழியும் அன்பைத் திருப்பித்தர எங்களால் இயலாது. அதேசமயம், இதைக் காணும்போது என்மீது கூடுதல் பொறுப்பு உண்டாகிறது.

தான் RI இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில், நான் அதற்குத் தகுதியானவன் இல்லை என்று உணர்ந்தேன், அதேசமயம், அதற்குத் தகுதியாகவேண்டும் என்றும் உணர்ந்தேன். ஆகவே, என்னைப்பற்றிச் சொல்லப்படும் நல்ல விஷயங்களுக்கெல்லாம் தகுதியுள்ளவனாக நான் என்ன செய்யவேண்டும் என்பதை அன்று இரவே எழுதிவைத்தேன். இப்போதும் நான் அதைத்தான் செய்கிறேன்,

*இந்திய அரசு ஒரு கோடிக் கழிப்பறைகளைக் கட்டினால், நாம் 10 லட்சம் கழிப்பறைகளைக் கட்டவேண்டும். அது சாத்தியம்தான்.*

RIPN சேகர் மேத்தா

இந்நிகழ்ச்சிகளில் என்னைப்பற்றி நீங்கள் சொல்கிறவற்றை நெருங்க நான் முயற்சியாவது செய்யவேண்டுமில்லையா?

RID 3232ன் RIDN A S வெங்கடேஷ் மேத்தாவுடனான தன்னுடைய நீண்ட உறவை நினைவு கூர்ந்தார். 9 ஆண்டுகளுக்கு முன் எழுத்தறிவுத் திட்டம் உருவானபோது, சுமார் 2 ஆண்டுகளுக்கு வாரந்தோறும் நான் கொல்கத்தா சென்றேன் விளை யாட்டுக்குச் சொல்லவில்லை, அவர் கண்டிப்பாக வேலை வாங்குபவர் என்பது அப்போதே தெரிந்துவிட்டது. அவரோடு பணிபுரிவதில் ஒரு சிறப்பு, அவர் கிட்டத்தட்ட சாத்தியமில்லாத இலக்குகளை அமைப்பார், அவற்றை எட்டலாம் என்று நம்மை நம்பவைப்பார், அவற்றை எட்டுவதற்கு நமக்கு வழிகாட்டுவார். அதுதான் அவருடைய தலைமைப்பண்பு.''

மேத்தா கடின உழைப்பாளி. இதை வெங்கடேஷ் உணர்ந்தது எப்போதென்றால், ஒரு நாள் அதிகாலை 1.45க்கு அவருக்கு சேகரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது, வெங்கி, தூங்கிக்கொண்டிருக்கிறீர்களா?''

ஆனால், நீங்கள் அவரோடு பணியாற்றும்போது, அவர் பெரிதாகச் சிந்திப்பதைக் காண்பீர்கள், உங்களால் எவ்வளவு தொலைவு செல்ல இயலும் என்பதை அவர் காண்பார், அதை உறுதிசெய்வார் என்பதை உணர்வீர்கள்.

அவருடைய கடின உழைப்புடன், அவருடன் பணிபுரிகிறவர்கள்மீது அவரும் ராஷியும் காட்டுகிற தனிப்பட்ட அக்கறையும் முக்கியமானது. கொல்கத்தா செல்லும் போதெல்லாம் அவர்கள் எல்லாருக்கும் மேத்தாவின் வீட்டிலிருந்து உணவு



PDG ISAK *நாசர்*, DGE S *முத்துபழனியப்பன், மஹாவீர் போத்ரா*, PRID P T *பிரபாகர்*, DG G *சந்திரமோகன்*, RIDN A S *வெங்கடேஷ் மற்றும்* DGN R *ஸ்ரீதர்*, RIPN *மேத்தா மற்றும் ராஷியை கௌரவிக்கின்றனர்.*




RIPN *மேத்தா, ராஷி,* RIDN A S *வெங்கடேஷ் மற்றும்* DGN R *ஸ்ரீதர்.*

வரும். அவர்கள் இருவரும் தங்கள் குடும்ப உறுப்பினர்களைப்போல் நம்மை உணரச்செய்வார்கள்.''

எப்போதாவது விமானம் தாமதமாக வந்தால், மதிய உணவு சாப்பிட நேரமில்லாவிட்டால், மசாலா தோசைப் பொட்டலங்கள் தன்னை வரவேற்கும் என்றார் அவர். இப்போது அவர் உலகத் தலைவராகிவிட்டார், அது ரோட்டரி உலகத்துடைய அதிர்ஷ்டம். அவரோடு RI வாரியத்தில் பணிபுரிவது என்னுடைய இரட்டை அதிர்ஷ்டம்.

அதன்பிறகு, சிறிது கிண்டலாக அவர் சொன்னது, வாரியத்தில் அவருக்குக் கீழே இயக்குநராகப் பணியாற்றுவது மிகவும் வசதியான பணியாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.''

RIPN தேர்ந்தெடுத்தல் குழுவில் இருந்த PRID P T பிரபாகர் மேத்தாவைப் பாராட்டும்போது, மேத்தா சந்தித்த போட்டி மிகக் கடுமையானது என்றார். RI தலைவர் பொறுப்புக்கான இறுதிச்சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நால்வரும் உலகத்தரத்திலான, மிகச்சிறந்த தலைவர்கள். ஆனால், நேர்முகத் தேர்வில் மேத்தாவின் பதில்கள் மிகச் சிறப்பாக இருந்தன, அதனால் அவர் வென்றார்.

உலகில் இளம்பிள்ளைவாதத்தை நாம் முற்றிலுமாக அகற்றுமுன்பே ரோட்டரி நோபல் பரிசு பெறும் என்று எதிர்பார்ப்பதாக அவர் சொன்னார். காரணம், முந்தைய 30 ஆண்டுகளில் உலகின் பெரும்பகுதியிலிருந்து இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதில் நாம் செய்துள்ள பெரிய பணிதான்.

மாவட்டம் 3232ன் முக்கியத் திட்டங்களை DG சந்திரமோகன் விரைவாக நினைவுகூர்ந்தார். எடுத்துக் காட்டாக, பெண்கள் மூன்று சக்கர வண்டிகளைச் சொந்தமாக வாங்கி ஓட்ட உதவும் 'பிங்க் ஆட்டோ'த் திட்டம் பரபரப்பாகப் பேசப்படுகிறது. இது பெண்களுக்கு வாழ்வாதாரம் வழங்கி ஆற்றலளிக்கிறது, இதன்மூலம் மொத்தம் 200 பெண்கள் பலன்பெறுவார்கள்.

தான் தொடங்கியுள்ள இன்னொரு லட்சியவாதத் திட்டத்தையும் DG விவரித்தார்: மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு ரோட்டரியனும் 2 டாலர் நன்கொடையளிக்கவேண்டும், பிறகு, தங்கள் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் என 100 பேரை அணுகி, ஒவ்வொருவரையும் 2 டாலர் வழங்கச் செய்யவேண்டும். இந்த ரோட்டரி ஆண்டின் நிறைவில், நம்மிடமுள்ள 5000 ரோட்டரியன்கள் 1மில்லியன் திரட்டுவார்கள் என எதிர்பார்க்கிறோம், அதை நாங்கள் உங்களுக்கு (மேத்தாவுக்கு) வழங்கி, TRF இடம் சேரச் செய்வோம்.

பின்னர், இந்தப் பணம் TRF மூலம் வளரும், பன்னாட்டு நல்கைகளுடன் இன்னும் அதிகத் தொகை இன்னும் மேம்பட்ட, இன்னும் பெரிய சமூகத் திட்டங்களைச் செய்யப் பயன்படுத்தப்படும் என்று RIPNக்கு வாக்களித்தார் அவர்.

அங்கு கூடியிருந்த DGகள், TRFக்கு நிதி திரட்டுவதற்காக இத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதாகச் சந்திரமோகனுக்கு வாக்களித்தார்கள்.

PDG நாசர் வந்திருந்தோரை வரவேற்றார். மேத்தாவை ரோட்டரியின் தலைமை நிலைக்கு உயர்த்தியிருப்பது, அவருடைய தலைமைப்பண்புகளும் மிகுந்த கடின உழைப்பும்தான் என்றார்.

DGE S முத்து பழனியப்பன் RIPNஐப் பாராட்டினார், பின்னர் அவருக்குப் பாரம்பரியமுறையில் பாராட்டு அளிக்கப்பட்டது.

*யாரைப்பார்த்து ஊர் நம்பாமல் சிரிக்கிறதோ, அவர்கள் தான் வரலாறு படைப்பார்கள்.*

RIPN சேகர் மேத்தா

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# RIPN சேகர் மேத்தா விடியல் திட்டத்தை துவக்கினார்

V முத்துக்குமாரன்



பெண்களுக்கு கல்லூரி மேம் படிப்புக்கான பண உதவி செய்யும் விடியல் திட்டத்தை RC Madras North, RID 3232,வில் துவக்கிவைக்கும் போது நம்முடைய சமுதாயத்தில் ஏராளமான பிர்சசினைகள் இருப்பதால் நாம் செய்யும் நன்மைகளால் பெரிய மாற்றங்கள் ஏற்படுவதில்லை என்று RIPN சேகர் மேத்தா கூறினார்.

ரோட்டரியர்களை பெரிதாக சிந்திக்கவும், தங்களின் இலக்குகளை உயர்த்தவும், பயனுள்ள திட்டங்களை செயலாக்க நிதி திரட்டும்படியும் அவர் கேட்டுக்கொண்டார். 10 சிறுமிகளின் கல்லூரி கல்விக்கு நிதியளிக்கும் இந்த திட்டத்தை மேற்கொண்டதற்காக 50 வயதான, சென்னையின் நான்காவது பெரிய கிளப்பைப் பாராட்டினார், ஆனால், அடுத்த ஆண்டின் இலக்கு இதைவிட பத்து மடங்காக 100 பயனாளிகளாக இருக்க வேண்டும்'', என்றார். அவரது சொந்த கிளப்பான RC கொல்கத்தா மகாநகர் சுமார் 150 குழந்தைகளின் பள்ளி கல்விக்கு நிதியுதவி அளித்துள்ளது. அடுத்த ஆண்டு 250 பயனாளிகளாக அதிகரிக்கும் திட்டத்தை கொண்டுள்ளது.



*RIPN சேகர் மேத்தா மற்றும் அவர் மனைவி ராஷி, DG G சந்திரமோகன் ஆகியோர் 'விஷயல்' திட்டத்தின் பயனாளியான ஒரு கல்லூரி மாணவியுடன்.*

ரோட்டரி நம்மை சிறந்த மனிதர்களாக ஆக்குகிறது என்றவர்'' "2,500க்கும் மேற்பட்ட குழந்தைகளின் இதய அறுவை சிகிச்சைகளுக்கு என்னால் இயன்ற உதவியை செய்தது மகிழ்ச்சியளித்தது. புதிய கிளப்பான RC Chennai Legendsல் சேர்க்கப்படும் புதிய உறுப்பினர்களுக்கு சமூக திட்டங்களை மேற்கொள்ள பரந்த வாய்ப்புகள் உள்ளன,'' என்றும் அவர் கூறினார். இந்த புதிய கிளப்பின் சாசனத்தையும் அவர் சார்ட்டர் தலைவர் வி இளஞ்செஷியனுக்கு வழங்கினார்.

சிந்தனையாளர் ராபின் ஷர்மாவின் நிகழ்ச்சியை கொல்கத்தாவில் நடத்தியதை மேற்கோள் காட்டி, மேத்தா ஒவ்வொரு டிக்கெட்டும் 5,000 ரூபாய் என்று விற்று மிகப் பெரிய கூட்டத்தையும் நிதியையும் திரட்டிக் கொடுத்ததை குறிப்பிட்டார்.கிளப்பின் ஆலோசகரான PDG ஒளிவண்ணன், இதேபோன்று நிதி திரட்ட உதவும்



RIPN *சேகர் மேத்தா கல்லூரி படிப்பிற்கான காசோலையை ஒரு மாணவியிடம் அளிக்கிறார்.* PRID P T *பிரபாகர்,* DG *சந்திரமோகன்,* DGE S *முத்துபழநியப்பன்,* DGN D *நந்தக்குமார் மற்றும்* RC *மெட்ராஸ் நார்த் தலைவர்* M *கணபதி ஆகியோரும் உள்ளனர்.*

வகையில் புகழ்பெற்ற நபர்களை பேச அழைக்க வேண்டும் என்று கூறினார். பல தசாப்தங்களுக்கு முன்னர் ரோட்டரியில் ஒரு புதிய நபராக, அவர் ஒரு நினைவு பரிசுத் திட்டத்திற்கு தலைமை தாங்கிய போது அதில் ரூ.1.5 லட்சம் பணம் ஈட்டியதில் துவங்கி இதுவரையில் தனது பயணம் உற்சாகமாக இருந்ததாகவும் கூறினார்.

"ஒரு கிளப் தலைவரின் பணி அதன் உறுப்பினர்களின் ஈகோக்களை சரிகட்டுவதாகும்'' என்று கூறிய அவர் புதிய ரோட்டேரியன்களை நன்கு கவனித்துக் கொள்ளுமாறு சார்ட்டர் பிரிசெடிடென்டிடம் தெரிவித்தார். இந்த நிகழ்வில் சேர்க்கப்பட்ட RC Chennai Legendsஸின் இருபத்தைந்து உறுப்பினர்களிடமும்'' உங்கள் கிளப் அளிக்கும் வாய்ப்பை பயன்படுத்தி சமுதாயத்திற்கு தொண்டாற்றுங்கள்'' என்றார்.

மேத்தா இந்தியாவில் மொத்த கல்வியறிவை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட RILMஐ வழிநடத்தியதால் திட்ட விடியலைத் தொடங்க மேத்தாவே சரியான நபர் என்று டி.ஜி.சந்திரமோகன் கூறினார். RID 3232 TRF கொடுப்பதற்காக 1 மில்லியன் டாலர் இலக்கை நிர்ணயித்து 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளார் என்றார் கவர்னர். முன்னதாக, கிளப் தலைவர் எம் கணபதி சமூகத்தின் முன்னேற்றத்திற்காக பெண்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற மகாத்மா காந்தியின் வார்த்தைகளை நினைவு கூர்ந்தார். நிதி திரட்டல் மூலம் ரூ.1 கோடி சேமிப்பு தொகையை சேகரித்த திட்ட தலைவர் என் வெங்கடேஷுக்கு நன்றி கூறினார்.

### தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் கூட்டணி

விடியல் திட்டத்தை செயல்படுத்த புரிந்துணர்வு திட்டம் போட்டு அதோடு ஆனந்தம் அறக்கட்டளை என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு ரூ.2 லட்சம் காசோலை வழங்கப்பட்டது.'' இந்த தன்னார்வ தொண்டு நிறுவனத்தை நாங்கள் தேர்ந்தெக்க காரணம், இது தமிழ்நாடு முழுவதும் 500க்கும் மேற்பட்ட பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பதில் நிபுணத்துவம் பெற்றது. இந்த திட்டத்திற்காக இசை நிகழ்ச்சி மூலம் ரூ.1 கோடி நிதி திரட்டினோம். இந்த தொகையின் வட்டி விடியல் திட்டத்தின் வருடாந்திர செலவுகளுக்கு பயன்படுத்தப்படும், என்று கிளப்பின் இணை செயலாளர் ஆனந்த் சரவண ராஜ் கூறினார்.

ஜூன் 30ம் தேதியுடன் முடிவடையும் ஆண்டில் RID 3232 எட்டு புதிய கிளப்புகளைக் கொண்டிருக்கும் என்று உறுப்பினர் மாவட்டத் தலைவர் பி தாக்ஷாயினி கூறினார். RCக்கள் Chennai Amethyst (அன்னெட்டுகளுக்கு) மற்றும் Chennai Legendண் இரண்டு கிளப்புகள் வரை உருவாக்கப்பட்டுள்ளன. ஆண்டு இறுதிக்குள் கிளப் உறுப்பினர்களை குறைந்தபட்சம் 40ஆக உயர்த்த முயற்சிப்பேன் என்று சார்ட்டர் தலைவர் இளஞ்செழியன் கூறினார். இந்நிகழ்வை, PDG ஒளிவண்ணன் காலத்தில் அப்போதைய தலைவர் என் வெங்கடேஷ் வழிகாட்டிய திட்டத்தின் தோற்றத்தை நினைவு கூர்ந்தார். துவக்க விழாவில் PRID P T பிரபாகர், PDGகளான அபிராமி ராமநாதன் (RID 3231), பி கோபாலகிருஷ்ணன் (RID 3000), ஜான் டேனியல் (RID 3211), DGES முத்துபலனியாப்பன், DGN டாக்டர் நந்தகுமார் மற்றும் RPIC ராஜதுரை மைக்கேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

# சொந்த மண்ணில்





PDG R *ரகுநாத் மற்றும் சுனில் சக்காரியா*
RIDN A S *வெங்கடேஷ் மற்றும்*
*அவர் மனைவி வினிதாவுடன்.*

# ஒரு விழா



RIDN A S வெங்கடேஷ் மற்றும் அவர் மனைவி வினிதாவிற்கு சிறப்பான வரவேற்பு.



வினிதா தன் சங்கமான RC சென்னை டவர்ஸ் உறுப்பினர்களுடன்.







*மேலிருந்து:*

RIDN A S *வெங்கடேஷ் மற்றும் வினிதா.*

PDGs ISAK *நாசர்,* R *ஸ்ரீனிவாசன் மற்றும்* DGE S*முத்துபழனியப்பன்.*



RIDN A S *வெங்கடேஷ்*
DG G *சந்திரமோகனுடன்.*



வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# தொண்டின் ஆற்றலைத் தொகுத்துப் பயன்படுத்துவோம்: RIDN வெங்கடேஷ்

ரஷீதா பகத்

என் கனவு, ரோட்டரியின் பிராண்டைக் கவனம் செலுத்தி உருவாக்குவது தான். நாம் ரோட்டரியை மக்களிடம் தள்ளவேண்டியதில்லை, ரோட்டரிக்கு மக்களை இழுக்கலாம். நம்முடன் இணையவேண்டும் என்று மக்கள் விரும்பும்படி நம்முடைய பிராண்டை வளர்ப்போம் அவர்கள் ரோட்டரியில் சேருவதற்காக வரிசையில் நிற்கும்படி செய்வோம், 'என்னைச் சேர்த்துக் கொள்வீர்களா?' என்று ஏங்கும்படி செய்வோம் என்றார் RI இயக்குநர் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட A S வெங்கடேஷ். சென்னையில் பல மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பாராட்டு நிகழ்வொன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்திய ரோட்டரியில் மூன்று லட்சம் உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்கிற RIPN சேகர் மேத்தாவின் கனவு இதே நிகழ்ச்சியில் முன்னதாகக் குறிப்பிடப்பட்டது. இதைச் சுட்டிக்காட்டிய அவர், உறுப்பினர்களைச் சேர்க்கும் பொறுப்பு சங்கத் தலைவர் அல்லது அலுவலர்களிடம் மட்டும் இல்லாமல் பலதரப்பட்டவர்களிடம் இருந்தால், இதை ஓர் அறிவியல் முறைப்படி கையாண்டால் இந்தக் கனவைச் சாத்தியமாக்கலாம் என்றார். இங்குதான் பெரும்பாலான பிரச்னைகள் உருவாகின்றன. மக்கள் தங்களுடைய நண்பர்களைதான் அழைத்து வருவார்கள். அந்த ரோட்டரியன்கள் தங்களுடைய உறுப்பினர் காலம் முடிந்ததும் வெளியேறிவிடுவார்கள்.''

பெருநிறுவனங்களில் புதிய ஊழியர்கள் சேரும்போது, அவர்களை அந்நிறுவனத்துடன் இணைப்பதற்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறும். ரோட்டரியின் புதிய உறுப்பினர்களுக்கும் இதுபோன்ற



RIPN *சேகர் மேத்தா,* RIDN A S *வெங்கடேஷ் மற்றும் வினிதா அவர்களை வாழ்த்துகிறார்.* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி,* TRF *அறங்காவலர் தலைவர் - தேர்வு* K R *ரவீந்திரன், மாவட்ட செயலாளர் கணபதி சுரேஷ்,* DG G *சந்திரமோகன் மற்றும்* DGE S *முத்துபழனியப்பன் ஆகியோரும் உடன் உள்ளனர்.*

வகுப்புகளை நடத்தவேண்டும். இது இன்னும் வலுவான அடித்தளத்தை வழங்கும்.''

அடுத்து அவர் சொன்ன புள்ளி விவரம் பலரைத் திடுக்கிடவைத்தது, கடந்த ஐந்தாண்டுகளுக்கான பிராந்தியம் 5ன் உறுப்பினர் தரவுகளை நான் ஆராய்ந்தபோது, இப்போது நம்மிடம் எத்தனை உறுப்பினர்கள் உள்ளார்களோ அத்தனை உறுப்பினர்களைக் கடந்த ஏழு ஆண்டுகளில் நாம் இழந்திருக்கிறோம் என்று தெரியவந்தது. அதாவது, கடந்த ஏழாண்டுகளில் யாரும் ரோட்டரியிலிருந்து விலகாவிட்டால், பிராந்தியம் 5ன் உறுப்பினர் எண்ணிக்கை இருமடங்காகியிருக்கும்.''

இந்தத் தரவை நம்முடைய பிற மாவட்டங்களுக்குப் பொருத்திப்பார்த்தால், கடந்த ஏழாண்டுகளில் எந்த ரோட்டரியனும்



## துணைவரின் ஆற்றல்




*இந்தப் பாராட்டுவிழாவில் பெரும்பாலான பேச்சாளர்கள் வினிதாவின் சாதனைகளைப்பற்றிப் பேசினார்கள். அவர் தன்னளவில் ஒரு சிறந்த பெருநிறுவனத் தலைவராகப் பெயர் வாங்கியுள்ளார். இவரும் IIM, அகமதாபாதில் பட்டம்பெற்றவர்தான். அங்குதான் அவர் தன் கணவரைச் சந்தித்தார். வெங்கடேஷுக்கு வினிதா ஒரு சிறந்த சொத்தாக அமைவார், அவருடைய பார்வைகள், ஆலோசனையைக் கேட்டு நடப்பது வெங்கடேஷுக்கு நன்மை தரும் என்று அனைத்து மூத்த தலைவர்களும் ஆலோசனை வழங்கினார்கள்.*

*சேகர் மேத்தா முதல் முயற்சியிலேயே RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரகசியத்தைச் சமீபத்திய விழாவொன்றில் PRID மனோஜ் தேசாய் பகிர்ந்து கொண்டதாக PRID பாஸ்கர் பேசினார்: எவான்ஸ்டனில் நடைபெற்ற நேர்முகத்தேர்வுக்கு அவர் ராஷியையும் தன்னுடன் அழைத்துச்சென்றிருந்தார்.*

*இந்த ஆண்டு, முதன்முறையாக, RI இயக்குநர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தவர்களை ஒரு நேர்முகத்தேர்வுக்கு அழைத்திருந்தது பரிந்துரைக்கும் குழு. நான் வெங்கடேஷிடம் "நீங்கள் வினிதாவை உங்களுடன் அழைத்துச் சென்றீர்களா?" என்று கேட்டேன். "ஆமாம்" என்றார் அவர். சேகருடைய எடுத்துக்காட்டை அவரும் பின்பற்றியிருக்கிறார்.*

*இதனால் நமக்குத் தெரியவரும் உண்மை, எந்தவொரு முக்கியமான நேரத்திலும், உங்கள் துணைவர் உங்களுடன் இருக்கவேண்டும். அப்போது, வெற்றி உறுதி.''* ■

விலகியிருக்காவிட்டால், இந்தியாவில் ரோட்டரிக்கு மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்திருப்பார்கள். ஆனால், உறுப்பினர்களை இழப்பதை விட மோசமான விஷயம், சமூகத்தில் நாம் மோசமான பிராண்ட் தூதுவர்களை உண்டாக்குகிறோம். விலகியவர்கள் ரோட்டரியின் சிறப்பற்ற பக்கத்தைப் பற்றிப் பேசப்போகிறார்கள்; இதை நாம் தடுக்கவேண்டும் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் வெங்கடேஷ்.

ரோட்டரியன்கள் அனைவரும், ரோட்டரியை அனைவரும் விரும்பும் NGOவாக ஆக்குவதற்குப் பணிபுரியவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். உறுப்பினராகச் சேர்வது அல்லது நன்கொடையளிப்பது என அனைத்திலும் மக்களுக்கு ரோட்டரிதான் முதலில் நினைவுக்கு வரவேண்டும் என்றார். என்னால் ஐந்து பேருக்குப் பள்ளிக் கட்டணம்



செலுத்தமுடியும், இன்னொருவராலும் அது முடியும் என்றால், ரோட்டரியில் சேர்ந்தபிறகு நாங்கள் அதைமட்டும் தொடரக்கூடாது. அதை நாங்கள் வெளியிலிருந்தே செய்திருக்கலாமே. ரோட்டரியில் சேர்ந்தபின் நாங்கள் ஒரு பள்ளியைக் கட்டவேண்டும். ஒன்றும் ஒன்றும் இரண்டு இல்லை, 11 என்பதுதான் ரோட்டரியின் ஆற்றலாக இருக்கவேண்டும்.''

தொகுக்கப்பட்ட தொண்டுப் பணியின் ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டிய தேவையை வலியுறுத்திய அவர், இன்னும் பெரிய அளவில் செயல்பாடுகளை உருவாக்குவதில் கவனம் செலுத்து வோம், அதன்மூலம், அனைவரும் அடையாளம் காண்கிற, தேடி வருகிற ஒரு பிராண்டை வளர்ப்போம். நாம் எல்லாரும் நம்முடைய தொழிலில் இதைத்தான் செய்கிறோம்: நம் பிராண்ட்களை, சந்தைகளை வளர்க்கிறோம். ரோட்டரிக்கும் அதையே செய்வோம்'' என்றார்.

தான் இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றப்போகும் இரண்டு ஆண்டுகளில் இதில் கவனம் செலுத்தப்போவதாகக் குறிப்பிட்ட அவர், அதிகாரம் அல்லது பொறுப்பின் அடையாளமாகத் தான் இந்தப் பதவியைக் கருதவில்லை என்றார். இந்தப் பதவி, மாற்றத்தை

PDG ISAK *நாசர்*, PRID C *பாஸ்கர்* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி*, TRF *அறங்காவலர் தலைவர் -தேர்வு* K R *ரவீந்திரன்*, PRID P T *பிரபாகர்*, RIPN *சேகர் மேத்தா*, RIDN *வெங்கடேஷ், வினிதா*, DG *சந்திரமோகன்*, DGE S *முத்துபழனியப்பன்*, DGN *ஸ்ரீதர்*, DGND *நந்தக்குமார்*, AG *பாலசுப்ரமணியன்*, Dr *சங்கரன் மற்றும் கணபதி சுரேஷ்.*





PDG *நாசர்,* DG *சந்திரமோகன்,* RIDN *வெங்கடேஷ்,* RIPN *மேத்தா,* PRID *பாஸ்கர்,*
TRF *அறங்காவலர் தலைவர் - தேர்வு* K R *ரவீந்திரன் மற்றும் மாலா பாஸ்கர்.*

உருவாக்குவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. நான் எதையும் செய்யாவிட்டால் யாரும் என்னைக் கேள்வி கேட்கப்போவதில்லை. 2023ல் நான் ஒரு முன்னாள் இயக்குநராகத் தொடர்வேன். என்னிடம் மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதைவிட, என்னிடம் நான் எதை எதிர்பார்க்கிறேன் என்பது முக்கியம். மாற்றத்தை உருவாக்க ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. இது தொடக்கமோ நிறைவோ இல்லை, இது ஒரு பயணம். இந்தப் பயணத்தில் நீங்கள் எல்லாரும் என்னுடன் வரவேண்டும் என்று கோருகிறேன். இதை நாம் ஒன்றாக அனுபவிப்போம், நாம் விரும்பிய இலக்கை எட்டுவோம்.

வெங்கடேஷைப் பாராட்டிய RIPN சேகர் மேத்தா, RI இயக்குநர் பொறுப்புக்கு மிகவும் தகுதிவாய்ந்த ஒருவரை இந்தியா தேர்ந்தெடுத்துள்ளது; வெங்கி திறமையானவர், அறிவாளி, நன்கு படித்தவர்; IIM மற்றும் IITயைவிடச் சிறந்த ஒரு கூட்டணி உங்களுக்குக் கிடைத்துவிடாது. அவருடைய துணைவி வினிதாவும் IIMAலிருந்து வருகிறார். அவர் ஒரு கூர்மையான, அறிவார்ந்த, சிந்திக்கிற மனிதர், நன்கு உழைப்பவர்களைவிட, நன்கு சிந்திக்கிறவர்கள்தான் இயக்குநர் குழுவில் இருக்கவேண்டும் என்று நான் எப்போதும் நம்புகிறேன் என்றார்.




எந்தவொரு முயற்சியிலும், சிந்தனைதான் மிக முக்கியமானது. வெங்கியின் சிந்தனையை நான் அருகிலிருந்து பார்த்துள்ளேன், அதனால் பலன் பெற்றுள்ளேன். TEACHக்காக எல்லாரும் என்னைப் பாராட்டுகிறீர்கள், அதில் நான் பல விஷயங்களைச் செய்தது உண்மை தான். ஆனால், அதற்காக நான் மிகவும் பாராட்டவேண்டிய ஒருவர், வெங்கி.

தான் எழுத்தறிவுப் பணியைத் தொடங்கியபோது, எனக்கு ஆலோசனை வழங்கக்கூடிய ஒருவர் தேவைப்பட்டார் என்று ஒப்புக்கொண்டார் அவர். நான் சொல்வதற்கெல்லாம் 'ஆமாம்' சொல்லக்கூடியவராக இல்லாமல், சொந்தக் கருத்துள்ள, அறிவார்ந்த ஒருவர் எனக்குத் தேவைப்பட்டார்.

வெங்கி அந்தப் பொறுப்பை நிறைவேற்றினார். நாங்கள் தொலைபேசியில் பேசாத நாள் இல்லை. நான் எதை உரையாட விரும்பினாலும் அவரிடம் அதற்குச் சரியான பதில் இருக்கும்.

தன்னுடைய சொந்தப் பெருநிறுவன அடையாளத்தைக் கொண்ட வினிதா இந்தப் பயணத்தில் மிக முக்கியமான ஒரு பொறுப்பை ஆற்றுவார், உங்களுக்கு மிகப் பொருளுள்ள கருத்துகளை வழங்குவார், பிற வாரிய உறுப்பினர்களுடன் உரையாடுவதற்கு இது மிகச்சிறந்த உதவியாக இருக்கும் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் மேத்தா.

2021–22ல் RI வாரியத்தில் வெங்கடேஷ் தன்னுடன் பணியாற்றுவது பெரிய அதிர்ஷ்டம் என்று கருதுவதாகக் குறிப்பிட்ட அவர், அதற்கான காரணங்களையும் விளக்கினார். நாங்கள் ஆறாண்டுகள் நெருக்கமாகப் பணியாற்றியுள்ளோம், எங்களுடைய அலைவரிசை ஒத்துப் போகிறது.

ரோட்டரி மகுடத்தில் ரோட்டரி இந்தியா ஒரு சிறந்த இடத்தை வகிக்கிறது என்று மீண்டும் வலியுறுத்தினார் அவர், உறுப்பினர் எண்ணிக்கை, TRF பங்களிப்பு, திட்டங்கள் என அனைத்திலும் நம் பணி, பங்களிப்பு மிகச்சிறப்பானது.

நம் பகுதிகளில் உள்ள ரோட்டரியன்களைப்போல் வேறு எந்த நாட்டிலும் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில்லை என்று தொடர்ந்து குறிப்பிட்டார் மேத்தா. இந்திய ரோட்டரியன்கள் தங்களுடைய திட்டங்களுக்காக TRF நிதியில் வெறும் 12 சதவிகிதத்தைதான் பயன்படுத்துகிறார்கள் என்று மதிப்பிட்டார் அவர். புதிய RIDNக்கு அவர் சொன்னது: நாம் சிறந்த காலகட்டத்தில் இருக்கிறோம், மேலெழப்போகும் தளத்தில் இருக்கிறோம், நீங்கள் இரண்டு ஆண்டுகள் அங்கு இருக்கப்போவதால், ஒரு முக்கியப் பங்கை ஆற்றுவீர்கள். நானோ ஓராண்டுதான் இருப்பேன், இந்தியாவில் ரோட்டரி இயங்கும் விதத்தை நீங்கள் மாற்றிச் சிறப்பாக்கலாம்.''

வீடியோச் செய்தியொன்றின் வழியாக வெங்கடேஷை வாழ்த்திய PRIP ராஜேந்திர சாபூ, அவரை ஒரு மிகச்சிறந்த ரோட்டரியன் என்றார். RI வாரியத்தில் அவர் தன்னுடைய அறிவை, அனுபவத்தை, அறிவாற்றலைப் பயன்படுத்தித் தனக்கும் இந்தியாவுக்கும் ரோட்டரிக்கும் சிறப்பைச் சேர்ப்பார் என்று நம்புவதாகத் தெரிவித்தார்.

ஓர் RI இயக்குநருக்குத் தேவையான அனைத்துக் குணங்களும் வெங்கடேஷிடம் இருப்பதாகத் தெரிவித்தார் PRIP K R ரவீந்திரன். அவருடைய துறைசார்ந்த அறிவு மிகச்சிறந்தது, நல்ல நேர்மை, நாணயம், மாறாத அர்ப்பணிப்பு, பணியின்மீது தடையற்ற பேரார்வம், மிகுந்த சுறுசுறுப்பு, ஆற்றல், விரைந்து பணியாற்றும் மனம், பணியைச் சிறப்பாகச் செய்வதற்கான அறிவு என அனைத்தும் அவரிடம் உள்ளன.

ஆனால், இவை அனைத்துக்கும் மேலாக, வினிதா அவருக்குத் துணைநிற்கிறார் தன்னளவில் அவர் மிகப்பெரிய வெற்றியடைந்துள்ள ஒரு நிர்வாகி, அசாதாரணத் திறமை கொண்டவர், பல இடங்களைச் சென்றுபார்த்தவர், பொருள்



PDG C R *ராஜீ,* RIDN *வெங்கடேஷ், வினிதா மற்றும்* TRF *அறங்காவலர் தலைவர் -தேர்வு* K R *ரவீந்திரன்.*

## அவரை வடிவமைத்தவர்கள்

*RIDN A S வெங்கடேஷ், சென்னையில் நடைபெற்ற பாராட்டுவிழாவில் வழங்கப்பட்ட வாழ்த்துகளுக்குப் பதிலளித்தார். RIPN சேகர் மேத்தாவைப்போல் என்னால் குல்ஜார் அல்லது காலிப்-ஐ மேற்கோள் காட்ட இயலாது. அதற்குப்பதிலாக, நான் திருவள்ளுவருடைய ஒரு திருக்குறளைக் குறிப்பிடுகிறேன் என்றார் அவர். தனக்கு உதவியவர்களை மறக்கிற ஒருவர் எப்போதும் நன்கு வாழ இயலாது.*

*நான் இன்று இருக்கிற இந்த இடத்துக்கு வருவதற்காகக் கடந்த பல ஆண்டுகளாகத் தன்னை ஆதரித்த வெவ்வேறு நபர்களைக் குறிப்பிட்ட அவர், தன்னுடைய சங்கத் தலைவருக்கு (உமேஷ், என் பாஸ்) நன்றிதெரிவித்தார். அத்துடன், கடந்த பல ஆண்டு களாகத் தான் சங்க நடவடிக்கைகளில் தொடர்ந்து கலந்துகொள்ளாவிட்டாலும் தன்னைப் பொறுத்துக் கொண்டிருக்கும் RC சென்னை மாம்பலத்தின் பிற உறுப்பினர்களுக்கும் நன்றிதெரிவித்தார்.*

*அடுத்து, என்மீது நம்பிக்கை வைத்து எனக்கு வாய்ப்புகளை வழங்கிய இம்மாவட்டத்தின் பல ஆளுநர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.*

*அவ்வாறு வாய்ப்பு வழங்கிய முதல் மனிதர், PDG பெஞ்சமின் செரியன். நான் சங்கத் தலைவராகி இரண்டாண்டுகளுக்குப் பிறகு, அவர் தான் முதன் முறையாக எனக்கு ஒரு பெரிய பொறுப்பை வழங்கினார்; PETS மற்றும் கருத்தரங்கத் தலைவராக என்னைப் பணியாற்றச்சொன்னார்.*

*மாவட்ட அளவைத் தாண்டியபின், அப்போது RI இயக்குநராக இருந்த PRIP K R ரவீந்திரன் அவரை ஒரு ரோட்டரி ஒருங்கிணைப்பாளராகத் தேர்ந்தெடுத்தார். தொடக்கத்தில் அவரோடு பணியாற்ற நான் மிகவும் அஞ்சினேன், ஏனெனில், அவர் எதையும் நேரடியாகப் பேசு கிறவர் என்று தெரியும். இப்போது, நான் அவரைக் கண்டு அந்த அளவு அஞ்சுவதில்லை என்று சிரித்தார் வெங்கடேஷ்.*

*அவர் கடினமான இலக்குகளை நிர்ணயித்தார், கடினமான கேள்விகளைக் கேட்டார். ஆனால், அவருக்கு என் மீது நம்பிக்கை இருந்தது, அந்த ஆண்டுமுழுவதும் என்னை வழிநடத்தினார். இப்போது, வானதியும் அவரும் எங்களுடைய குடும்ப உறுப்பினர்களைப் போலாகி விட்டார்கள்.*

*ரவீந்திரனிடம் அவர் கற்றுக்கொண்ட விஷயங்கள், பெருநிறுவனப் பாணியிலான நிர்வாகத்தை ரோட்டரியில் செயல்திறனோடு அமல்படுத்துவது எப்படி, ஒருவரை வெறுக்காமல், எதிரியாக நினைக்காமல் அவரோடு முரண்படுவது எப்படி.*

*மாவட்டத்தைத் தாண்டிய ஒரு மூத்த தலைவருடன் அவர் முதன்முதலாகப் பழகியது, அறங்காவலர் வஹன்வதியுடன் பணிபுரிந்தபோது. சான் டியாகோ-வில் அவர் வெங்கடேஷுடைய பயிற்சித் தலைவராக இருந்தார். ஹசீனா (அவருடைய மறைந்த மனைவி) மற்றும் அவருடன் வினிதாவும் நானும் மகிழ்ச்சியான, அழுத்தமில்லாத நேரங்களைச் செலவிட்டோம். அவர் ஒரு மிகச்சிறந்த மனிதர், 100க்கு 110 மதிப்பெண் பெறக்கூடியவர்.''*

*PRID P T பிரபாகரிடமிருந்து அவர் நிறையக் கற்றுக்கொண்டுள்ளார். அவருக்கு விடாமுயற்சி மனநிலை உண்டு; சில இலக்குகளை அவர் குறிவைத்துவிட்டார் என்றால், எப்படியும் அவற்றை அடைந்துவிடுவார். PRID C பாஸ்கரை பாஸ் என்று அழைப்பதுதான் சரி, ஏனெனில், அவர் ஒரு பிறவித் தலைவர் என்று பாராட்டிய வெங்கடேஷ், பிரச்னைகள், சவால்கள் வந்தாலும் அமைதியாக இருப்பது எப்படி, அவற்றைத் தன்னம்பிக்கையோடு தீர்ப்பது எப்படி என்று அவரிடம் நான் கற்றுக்கொண்டேன் என்றார்.*

*மேத்தாவுடன் அவர் சுமார் எட்டாண்டுகள் பணியாற்றியுள்ளார். அவருடனான தொலைபேசி அழைப்புகள் எப்போதும் நள்ளிரவுக்குப்பிறகுதான் நிகழும். தொடக்கத்தில், வினிதா வேறுவிதமாக நினைத்து விடுவாரோ என்று நினைத்து நான் அந்தத் தொலைபேசி அழைப்புகளை ஒலிபெருக்கியில் நிகழ்த்துவேன். அவர் அதைப் புரிந்துகொண்டு, ''சேகர்தானே? தயவுசெய்து வேறு அறைக்குச் சென்று பேசுங்கள், நான் தூங்கவேண்டும்'' என்று சொல்லிவிடுவார் என்றார் அவர்.*

*அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்ட விஷயம், ஒருவருக்கு என்னதான் திறமைகள் இருந்தாலும், வேலையைச் சிறப்பாகச் செய்யக் கடின உழைப்பு தேவை. அவர் வரம்வாங்கி வந்தவர், திறமையாளர், அறிவாளி, ஆனால், கடின உழைப்புதான் அவரைப் பிறரிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது. எனக்குத் தெரிந்து அவர் நாள்தோறும் 18 மணிநேரம் பணியாற்றுகிறார்.*

அனுப்புதல் தொழில்துறையில் பணியாற்றுகிறவர் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

ஒரு சிறந்த தலைவருக்குத் தேவையான அனைத்து உட்பொருள்களும் சாத்தியமும் வெங்கடேஷிடம் உள்ளன; RI வாரியத்தில் அவர் பெரிய வெற்றியடைவார் என்பதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை என்ற அவர், நிறுவனப்பணிகளில் அவர் முழுக் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இவை அனைத்தையும் சாதிக்கும் திறமை RIDNக்கு உண்டு, ஆனால், அவர் தன்னை மறந்து, குழு, நிறுவனத்தில்மட்டும் கவனம் செலுத்தினால் நன்கு வழிநடத்துவார். தலைமைக்குணம் வெங்கிக்குப் புதியதில்லை.

வெங்கடேஷ் ஒரு மிகச் சிறந்த RI வாரியத்தில் இணைவார் என்றார் ரவீந்திரன் இந்த வாரியத்தில் எட்டு பெண்கள் இருப்பார்கள்! அத்துடன், அந்த வாரியத்தை வழிநடத்தும் ஒரு சிறந்த தலைவரும் இருப்பார். அவர்தான், சேகர் மேத்தா.

வெங்கடேஷைப் பாராட்டிப்பேசிய TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி, IAல் வெங்கடேஷ் இடம்பெற்ற



DG *சந்திரமோகன், மாவட்ட செயலாளர் கணபதி சுரேஷ்,* RIPN *மேத்தா,*
PRID *பாஸ்கர் மற்றும்* DGE *முத்துபழனியப்பன்.*

DGEக்கள் குழுவுக்கான பயிற்சித் தலைவர் என்றமுறையில் வெங்கி, வினிதாவுடன் நான் நன்கு பழகினேன், அவர்கள் IIMAலிருந்து வருகிறவர்கள், நான் IIM கொல்கத்தாவிலிருந்து வருகிறேன் என்பதும் இதற்கு ஒரு காரணம். அவருடைய தூண்டலும் ஆற்றலும் மிகச்சிறந்தவை.

வெங்கடேஷை வாழ்த்திய PRID C பாஸ்கர், முந்தைய 10 ஆண்டுகளில் இந்திய ரோட்டரி முற்றிலும் மாறிவிட்டது. உறுப்பினர் எண்ணிக்கை, TRF பங்களிப்புகள், பெரிய திட்டங்களைச் செய்வது என அனைத்திலும் நம் செயல்திறன் பாராட்டப்படுகிறது என்றார்.

இந்தியாவில் ரோட்டரிக்குக் கவலைதரும் சில பிரச்னைகள் உள்ளன, ஆனால், அவற்றைச் சரிசெய்துவிடலாம் என்றார் அவர். புதிதாக நியமிக்கப்பட்ட RIDN, ரோட்டரி சங்கங்களிலிருந்து மாவட்டத்துக்கு மாறியுள்ள கவனத்தைத் திரும்பக் கொண்டுவரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். பெரும்பாலான DGக்கள் மாவட்டத்தில் கவனம் செலுத்துகிறார்கள், மாவட்ட இலக்குகளுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள். ஆனால், ரோட்டரி சங்கம்தான் RIன் உறுப்பினராக உள்ளது, சமூகத்தின் கவலைகளைச் சரிசெய்வதற்காகச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நான் இரண்டு ஆண்டு DGக்களுடன் பணியாற்றியுள்ளேன்; சங்கங்களில் கவனம் செலுத்துங்கள், மாவட்டங்களில் கவனம் செலுத்தாதீர்கள், சங்கங்களை ஆதரிப்பதற்காக தான் மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன, ஆகவே அவர்கள் சங்கங்களைத் துள்ளலுடன் செயல்படச்செய்வதில்தான் கவனம் செலுத்தவேண்டும் என்று சொல்லி வந்துள்ளேன் என்றார் அவர். உங்கள் தலைமையின் கீழ் சங்கங்கள் அதிகபட்சக் கவனம் பெறும், உங்கள் அனுபவம், அறிவாற்றலால் உங்கள் பதவிக்காலம் மிகச்சிறப்பாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

கூட்டத்தினர் மத்தியில் பேசிய PRID P T பிரபாகர், இந்திய ரோட்டரியை அதன் மிகச்சிறந்த எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்லும் சாத்தியம் உங்களுக்கு உண்டு என்று தொடர்ந்து குறிப்பிட்டார்.

வெங்கடேஷ், வினிதாவுடைய மகள்கள் வர்ஷா, வருணாவால் இந்நிகழ்வில் கலந்துகொள்ள இயலவில்லை. ஆகவே, அவர்கள் ஒரு வீடியோச் செய்தியில் தங்கள் பெற்றோருடைய ரோட்டரிப் பேரார்வத்தைப்பற்றிப் பேசினார்கள்.

RC சென்னை மாம்பலம் உறுப்பினராக ரோட்டரிமீது தங்கள் தந்தை கொண்டிருந்த பேரார்வத்தை அவர்கள் சிறுவயதிலிருந்தே கண்டுள்ளார்கள். அவர்களில் ஒருவர் இவ்வாறு குறிப்பிட்டார்: ரோட்டரியில் அவருடைய வளர்ச்சியின் மிகச்சிறந்த அம்சம், அவர் அடிக்கடி சிகாகோ சென்றது தான். ஏனெனில், நாங்களும் அவரோடு அங்கு சென்றோம். இந்தக் காலகட்டத்தில் எங்கள் தாய் அவருக்கு வலிமையை, ஆதரவை, தன்னுடைய அறிவார்ந்த கோணத்தை வழங்கிவந்தார். நீங்கள் மிகப்பெரிய உயரத்தை எட்டுவீர்கள் என்பதில் எங்களுக்கு எந்த ஐயமும் இல்லை, அப்பா! நீங்கள் உண்டாக்கப்போகும் மாற்றத்தைக் காண நாங்கள் மிகவும் ஆவலாக உள்ளோம்.

RIDNஐப் பாராட்டிய RID 3232 DG G சந்திரமோகன், அவர் இந்த நிலைக்கு வளர்ந்துள்ளதைக் காணும்போது, மக்களில் 99 சதவிகிதப் பேர் செய்வதையே நாமும் செய்தால் வெற்றி கிடைக்காது என்பது புரிகிறது. வெங்கி அனைத்தையும் தன்னுடைய தனித்துவமான பாணியில் செய்கிறவர், எங்கள் மாவட்டத்தைச் (3232) சேர்ந்த 127 தலைவர்கள் உங்களுக்கு மிகச் சிறந்த வெற்றி கிடைக்கவேண்டும் என்று வாழ்த்துகிறார்கள் என்றார்.

வெங்கடேஷ் நட்பானவர், எளிதில் அணுகக்கூடியவர், அத்துடன், எந்தவொரு ரோட்டரித் தலைப்பைப்பற்றியும் மிகச் சிறந்த தெளிவு, உறுதியுடன் பேசக் கூடியவர். மக்களைக் கையாள்வது எப்படி என்று அவருக்குத் தெரியும், என்றார் DGN எஸ் முத்துபழனியப்பன்.

இந்நிகழ்வின் தலைவர் PDG ISAK நாசர், RIDN வெங்கடேஷை வாழ்த்தினார். DGN J ஸ்ரீதர் நன்றியுரை வழங்கினார்.■

# மூளை பாதிப்பு குழந்தைகளுக்கான சிறப்பு RYLA

ரோட்டரி செய்திக்குழு



*PRIP ராஜேந்திர சாபூ மற்றும் RC சண்டிகர் மிட் டவுன் ரோட்டரியினர் மாற்று திறனாளிகளுடன்.*

சண்டிகர் மிட் டவுன், RID 3080 நடத்திய RYLA விஷேஷ் 2019, 124 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.'' இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பிரத்யேக குணங்களை வெளிப்படுத்துவதாகும்,'' என்றார் தலைவர் சலீல் தேவ் சிங் பாலி. பஞ்சாபின் சமூக பாதுகாப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் அருணா சவுத்ரி பாதிக்கப் பட்ட குழந்தைகளுக்காக ஒரு தனி RYLAவை ஏற்பாடு செய்ததை பாராட்டினார். நிகழ்ச்சிகள் குழந்தைகளுக்கு உற்சாகமளித்தன.'' சாரு குப்தாவின் கலை சிகிச்சை பட்டறையை அனைவரும் ரசித்தனர்'' என்றார் பாலி. சிறந்த கலைஞர்களுக்கு விருதுகள் சான்றிதழ்களும் அனைத்து குழந்தைகளுக்கும் RYLA சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

PRIP ராஜேந்திர சாபூ சக்கர நாற்காலிகள், முச்சக்கர வண்டி, தையல் இயந்திரத்தை உடல் மற்றும் மனநலம் பாதித்த சில மாணவர்களுக்கு வழங்கினார். DG ஜிதேந்திர திங்க்ராவின் மனைவி ரிது திங்க்ரா இந்த நிகழ்விற்கு ரூ.70,000 வழங்கப் படுவதாக கூறினார். தொடர்ந்து கிரிக்கெட்டுடன் பிற விளையாட்டுகளும் நடத்தப்பட்டன.■

# கோட்லா மக்களுக்கு மருத்துவ முகாம் பயனளிக்கிறது



RC டெல்லி சவுதெக்ஸ், RID 3011, டெல்லியின் கோட்லாவில் நடந்த மருத்துவ முகாமினால் 1,800 நபர்கள் கண், பல், தோல், பெண்ணோயியல், போன்ற பல நோய்களுக்கு பரிசோதிக்கப்பட்டனர். ரோட்டேரியர்கள் 1,000 பேக் சானிட்டரி நாப்கின்கள் மற்றும் 500 ஹேண்ட் சானிடிசர்களோடு 800 நபர்களுக்கு கண்ணாடிகளை வழங்கினர். DG சுரேஷ் பாசின் மனைவி ரிது, DGE சஞ்சீவ் ராய் மெஹ்ரா, DGN அனுப் மிட்டல் முகாமுக்கு வந்தனர். விரிவான பிரச் சாரம் நிறைய நபர்களின் வருகைக்கு உதவியதாக செயலாளர் மதுயுகர் கெம்கா கூறினார்.■

# சான் டியாகோவில் இந்திய



RIPN சேகர் மேத்தா, ராஷி, RIDs கமல் சங்வி, பரத் பாண்டியா, மாதவி, சோனல் மற்றும் இந்திய DGEக்கள்.



சுசேன் நாக்-குடன் TRF அறங்காவலர்-தேர்வு K R ரவீந்திரன், வானதி, மாதவி பாண்டியா, சோனல் சங்வி மற்றும் RID பரத் பாண்டியா.



வெளிநாட்டு ரோட்டரியினருடன் ஜீமானா (DGE ஷபீர் ஷக்கீரின் மனைவி) மற்றும் உத்கர்ஷா (DGE சங்க்ராம் பாட்டிலின் மனைவி).

# ரோட்டரி









RID பாண்டியா,
RIPN மேத்தா
மற்றும் RID சங்வி.



RID சங்வி மற்றும்
அவர் மனைவி சோனல்.






RI தலைவர் மார்க் மலோனி
மற்றும் RIPE ஹோல்கர் நாக்.



சங்கீதா பன்சல், மாதவி பாண்டியா, சோனல் சங்வி,
வானதி ரவீந்திரன் மற்றும் DGEக்களின் மனைவியர்.




**மேலே:** RIPN *மேத்தா மற்றும் ராஷியுடன்* DGE S *முத்துபழனியப்பன், அவர் மனைவி கமலா மற்றும்* RI *பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ மற்றும் அவர் மனைவி மார்கரீட்டா.*

**வலது:** DGEs *மனிஷ் சார்தா, தவீந்தர் சிங் மற்றும் அவர் மனைவி டாலி.*

**கீழே:** *சோனல் சங்வியுடன் மஹாலாஷ்மி* (DGE *சின்னப்ப ரெட்டியின் மனைவி*).







*மாதவி, சோனல், கேய் மலோனி,* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி மற்றும்* RID *பாண்டியா.*



சோனல், சுசேன் நாக் மற்றும் மாதவி.



ராஷி மேத்தா DGEக்களின் மனைவியருக்கான கூட்டத்தில் உரையாற்றுகிறார்.




கேய் மலோனி, மாதவி, சோனல் மற்றும் இதர RI இயக்குனர்களின் மனைவியர்.




*மைக்ரோசாஃப்ட் ஃபௌண்டேஷன் நிறுவனர் பில் கேட்ஸ் போலியோ ஒழிப்பிற்கு ரோட்டரியுடன் மீண்டும் ஒரு கூட்டுப் பங்காண்மை அறிவிப்பினை கொண்டாடும் வகையில்* TRF *அறங்காவலர் தலைவர் தேர்வு* K R *ரவீந்திரன்,* IPPC *தலைவர் மைக் மெக்கவர்ன்,* RI *போலியோ ப்ளஸ் இயக்குனர் கேரல் பன்டாக்,* RIPE *ஹோல்கர் நாக்,* WHO *போலியோ ஒழிப்பு இயக்குனர் மைக்கெல் ஜஃப்ரான்,* TRF *அறங்காவலர் ஜெனிஃபர் ஜோன்ஸ்,* PRIP *ஜான் ஜேர்ம், ஜோன்ஸின் துணைவர்* Rtn *நிக் க்ரயாசிக் மற்றும்* RIDE *ரோஜர் லோர்ஸ்.*



RIPN *மேத்தா மற்றும் ராஷி.*



DRRs *மனுஜ் மிட்டல்* (RID 3011) *மற்றும் செந்தில் மணி* (RID 3232)

புகைப்படங்கள்: rotary.org, RID பரத் பாண்டியா மற்றும் DGEக்கள்.
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# உங்கள் மனத்தில் அறக்கட்டளையை முதன்மையாக நிறுத்துங்கள்: K R ரவீந்திரன்

ரோட்டரி செய்திக்குழு



TRF *அறங்காவலர் தலைவர்-தேர்வு* K R *ரவீந்திரன் தன் சிறு வயதில் தன் தாயாருடன்.*

பன்னாட்டுச் சந்திப்பின்போது, ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்மத்தியில், அறக் கட்டளையின் புதிய திட்டங்கள், முக்கியத்துவங்களைப்பற்றிப் பேசினார் TRF அறங்காவலர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள K R ரவீந்திரன். அளவுத் திட்டங்கள் என்ற ஒரு புதிய, பிரமாண்டமான திட்டம் அடுத்த ஆண்டு அமலுக்கு வரும் என்றார் அவர். இந்த நல்கைகள் ரோட்டரி சங்கங்களைப் பெரிதாகச் சிந்திக்கத் தூண்டும், முக்கியப் பிரச்னைகளுக்கு முழுமையான தீர்வுகளைக் கண்டறிந்து, இன்னும் பல மக்களைச் சென்றடைந்து பலன் தருவதற்காகத் தங்களுடன் இணையக் கூடிய சக-நிறுவனங்கள் மற்றும் ஆதரவாளர்களை அணுகத் தூண்டும்.''

இதைப்பற்றி மேலும் விளக்கிய அவர், தடுப்பூசியின்மூலம் தடுக்கக் கூடிய ஒரே புற்றுநோயாகிய கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு மருந்துத் திட்டத்தைச் சுட்டிக்காட்டினார். இந்தத் திட்டத்தின்கீழ், 8–10 வயதுள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் தடுப்பு மருந்து அளிக்கவேண்டும், 35–45 வயதுள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் பரிசோதனைகள் நடத்தவேண்டும். இதன்மூலம், கருப்பை வாய்ப் புற்றுநோயை நீக்குவது சாத்தியம்தான்.

ஆனால், எந்தவொரு நிறுவனத்தாலும் இதைத் தனியாகச் செய்ய இயலாது; பல அமைப்புகளின் ஆதரவு இதற்குத் தேவை. அளவுத் திட்டங்கள் நல்கைகள் என்பவை, ஒவ்வோராண்டும் 2 மில்லியன் என்கிற ஒரே நல்கையின்மூலம் இது போன்ற அளவிலான திட்டங்களை ஆதரிக்கும்.

முக்கியத்துவங்களைப்பற்றிப் பேசும்போது, நம்முடைய முதல் முக்கியத்துவம் இளம்பிள்ளை வாதத்தை அகற்றுவதுதான் என்று வலியுறுத்தினார் ரவீந்திரன். போலியோ நிகழ்வுகளின் எண்ணிக்கையை நாம் ஏற்கெனவே 99.9 சதவிகிதத்துக்குக் குறைத்துவிட்டோம். வைல்ட் போலியோவைரஸ் கொண்ட நாடு களின் எண்ணிக்கையை இரண்டாகக் குறைத்துவிட்டோம்: பாகிஸ்தான் மற்றும் ஆஃப்கானிஸ்தான். இந்தப் பணியை நாம் நிறைவுசெய்வோம் என்றார் அவர்.

இரண்டாவது முக்கியத்துவம், ஆண்டு நிதியை மற்றும் போலியோப்ளஸ்ஸைப் பெருக்குவது, 2025க்குள் நன்கொடை நிறுவல் நிதியை 2.025 பில்லியனாக ஆக்குவது ஆகும். அடுத்த ஆண்டுக்கான மொத்த நிதி திரட்டல் இலக்கு, $410 மில்லியன்.

கிட்டத்தட்ட 20 சதவிகிதச் சங்கங்கள் அறக்கட்டளையின் ஆண்டு நிதிக்குப் பங்களிப்பதில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்,

அடுத்த முக்கியத்துவம், நல்கைகளுடைய அளவிடக்கூடிய தாக்கத்தை மேம்படுத்துதல். நம் திட்டங்கள் வாழ்க்கைகளை மாற்றவேண்டும். இது வெறும் டாலர் கணக்கு இல்லை, வாழ்க்கை விஷயம்!

ரவீந்திரனுடைய சங்கம் TRF ஆதரவுடன் இலங்கையில் ஒரு மகப்பேறு மருத்துவமனையை அமைத்தது. இந்த மருத்துவமனை தாயாகப்போகும் பெண்களுக்கும் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கும் ஒரு பெரிய வரமாக அமைந்தது என்பதை அவர் நினைவுகூர்ந்தார்.

அப்போதைய அறக்கட்டளைத் தலைவர் D K லீ இலங்கைக்கு வந்திருந்தபோது, அவரை அந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருந்தார். புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான ICUவை இவர்கள் பார்த்துக் கொண்டிருந்த போது, தன்னுடைய உள்ளங்கை அளவேயுள்ள ஒரு சிறு குழந்தையைக் கண்டார், அந்தக் குழந்தையின் உடல் முழுவதும் குழாய்கள் ஓடின, ஒவ்வொரு மூச்சுக்கும் அந்தக் குழந்தை போராடியது.

இரண்டாண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் அதே மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். அப்போது, ரோட்டரி மருத்துவமனையைக் கட்டியதிலிருந்து 140,000 குழந்தைகள் அங்கு பிறந்திருப்பதாகத் தெரியவந்தது.

அங்கு ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு அவர் சிறிது தூரம் நடந்தார். அப்போது, மருத்துவர்கள் அவருக்குச் சொன்னார்கள், சென்ற முறை நீங்கள் இங்கு வந்திருந்தபோது ஒரு குழந்தையை எண்ணிப் பதற்றப் பட்டீர்களே, அந்தக் குழந்தைதான் இந்தக் குழந்தை.

பின்னர், DGEக்களிடம் சொல்லி அவர் தன்னுடைய உரையை நிறைவுசெய்தார், நீங்கள் வீட்டுக்குச் செல்லும்போது, உங்கள் சங்கங்களுக்குச் செல்லும் போது, அடுத்த ஆண்டுக்கான திட்டங்களைத் தயாரிக்கும்போது, நம் அறக் கட்டளையை முதலாவதாக மனத்தில் வையுங்கள். நாம் ரோட்டரி உறுப்பினராக இருப்பதை அது தான் பொருளுள்ளதாக்குகிறது. அது வாழ்க்கைகளை மாற்றியமைக்கிறது.''■

# ராஹத் மருத்துவ முகாம்களை வியந்து பாராட்டிய கமல்நாத்

ரஷீதா பகத்

பல ஆண்டுகளுக்குமுன்னால், RC கல்கத்தா மிட்-டவுனின் உறுப்பினராக நான் இருந்தேன் என்றார் மத்தியப்பிரதேச முதலமைச்சர் கமல்நாத். ஆனால், நான் இன்னொரு பணிக்கு மாறியபோது, நான் ரோட்டரியிலிருந்து விலக வேண்டியதாகி விட்டது.

வேகமாக மாறிவருகிற இன்றைய உலகில் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு சவால்களுடன் போராடிக்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்ட கமல்நாத், இந்தச் சூழ்நிலையில் பன்முகத்தன்மையுள்ள உறுப்பினர்களைக் கொண்ட பன்னாட்டு அமைப்பான ரோட்டரி ஒரு முக்கியப் பங்கை ஆற்றும் என்றார்.

ஒருகாலத்தில் ரோட்டரியனாக இருந்த அனுபவத்தால், ரோட்டரியின் சிந்தனை, பணி மற்றும் பல்வேறு அனுபவங்களைப்பற்றி எனக்குத் தெரியும் என்று கமல்நாத் குறிப்பிட்டார். ரோட்டரி நடத்தும் ராஹத் மருத்துவ முகாம்களை கமல்நாத் நேரடியாக அறிந்திருந்தார். சமீபத்தில் மத்தியப்பிரதேசத்திலுள்ள மான்ட்லாவில் நடைபெற்ற ராஹத் மருத்துவ முகாமில் 106,000 மக்கள் பலன்பெற்றார்கள். இது போன்ற முகாம்களை வேறு யாரால் நடத்த இயலும்? இப்படிப்பட்ட முகாம்களை நடத்தும்போது ரோட்டரி உறுப்பினர்களிடம் வெளிப்படுகிற தன்னலமற்ற அர்ப்பணிப்புணர்வை வேறு யாரிடம் காண இயலும்? இதை எண்ணும்போது, இங்கு வந்ததில் எனக்கு மகிழ்ச்சியோடு பெருமையும் பொங்குகிறது.''

ரோட்டரியின் வீச்சையும் பன்முகத் தன்மையையும் பாராட்டிய அவர், ரோட்டரியைப்போலவே சமூகத்தின் எல்லாப் பிரிவினரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும், அதற்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளவேண்டும் என்றார். பின்னர், நான் ஒரு சிறிய, பின்தங்கிய மாவட்டத்திலிருந்து வருகிறேன்; அங்கு இரண்டு ரோட்டரி சங்கங்கள் உள்ளன என்றார். நான் அந்தக் கூட்டங்களில் கலந்துகொள்கிறேன்; 10 வருடங்களுக்கு முந்தைய நிலையுடன் ஒப்பிடும்போது, வேறுவிதமான ரோட்டரியன்களின் தொகுப்பைக் காண்கிறேன்.''



RI *தலைவர் மார்க் மலோனி மற்றும் மத்தியப்பிரதேச முதல் மந்திரி கமல் நாத்* PDG *விவேக் தன்காவிற்கு மரியாதை செய்கிறார்கள்.* RID *பரத் பாண்டியா மற்றும் இன்ஸ்டிட்யூட் தலைவர்* TN *சுப்ரமணியனும் உடன் உள்ளனர்.*

உலகின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பண்பாடுகள் இருக்கலாம், வெவ்வேறு சவால்கள் இருக்கலாம், ஆனால், மக்களுடைய கனவுகளில் ஒரு பொதுவான அம்சம் எப்போதும் இருந்து வந்துள்ளது: அவர்கள் இன்னும் மேம்பட்ட வாழ்க்கையை, இன்னும் மேம்பட்ட உலகத்தைத்தான் விரும்பி வந்துள்ளார்கள்.

இங்குதான், சமூகத்தின் எல்லாப் பிரிவுகளுடனும் இணைந்து செயல்படுகிற கொள்கையைக் கொண்ட ரோட்டரியின் பங்கு இன்னும் பெரிதாகிறது. சேவைத் திட்டங்களைச் செய்வதானாலும் சரி, மக்கள் கற்றுக்கொள்கிற அல்லது புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகிற விதத்தைப் பாதிக்கும் மிகப்பெரிய தொழில் நுட்ப மாற்றங்களுக்கேற்ப மக்கள் மாறுவதற்கு உதவுவதானாலும் சரி, ரோட்டரியின் பங்கு முக்கியமானது.

விழாவுக்கு வந்திருந்த PDG விவேக் தன்கா, மத்தியப்பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சரான திக்விஜய் சிங், தன்னுடைய அமைச்சரவைத் தோழர்கள் ஆகியோரையும் அவர் வரவேற்றுப் பேசினார்.

புகைப்படம்: ரஷீதா பகத்

# உறுதியான மனம் கொண்ட சாதனையாளர்களுக்கு விருது

ஜெய்ஸ்ரீ மற்றும் V முத்துகுமரன்

இந்தூர் நிறுவனத்தில் டேர் டு ட்ரீம் விருதுகளைப் பெற்றவர்களில் விபத்தில் தன் ஒரு காலை இழந்த பாரா-பூப்பந்து உலக சாம்பியன் மானசி ஜோஷியும் ஒருவர். இவர் 2020 பாரா ஒலிம்பிக்கிற்கு தயாராகி வருகிறார். சமீபத்தில் சுவிட்சர் லாந்தில் நடைபெற்ற சர்வதேச பாரா-பூப்பந்து சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற அவர்'' சர்வதேச மட்டத்தில் விளையாடுவேன் என்று நான் கனவிலும் நினைத்ததில்லை. எனது மறுவாழ்வுக்காகவே நான் விளையாடத் தொடங்கினேன், என்று கூறும் அவர், விளையாட்டே தன்னை சுறுசுறுப்பாக வைத்திருப்பதாக தெரிவித்தார்.

"புரோஸ்தெடிக் நிறுவனங்கள் பேட்மிண்டனுக்கு ஏற்றவாறு செயற்கை கால்களை வடிவமைக்க வேண்டும் என்று விரும்புகிறேன்'' என்று அவர் கூறினார். தடகளத் தில் தேவைப்படும் முன்னோக்கி அதாவது நடப்பதற்கு அல்லது ஓடும் இயக்கத்திற்காக பெரும்பாலான புரோஸ்தடீஸ்கள் கண்டுபிடிக் கப்படுகின்றன. பூப்பந்துக்கு பக்கவாட்டாகவும் பின்தங்கிய இயக்கங்களும் தேவை.'' பூப்பந்துக்கு ஏற்ற இயக்கத்திற்கு ஏற்ப என் தசை களுக்கு நான் பயிற்சி அளிக்க வேண்டும்,'' என்றார் அவர். பாரா விளையாட்டு இந்தியாவில் விளையாட்டுப் பிரிவில் சேர்க்கப்படவில்லை, மாறாக அவை நடுப்பகுதியில் சிறப்பிக்கப்பட்டு ஊக்கமளிப்பதாகக் கருதப்படுகின்றன. இந்த அணுகுமுறை மாற வேண்டும்.'' எங்கள் சவால்களைப் பொருட்படுத்தாமல் நாங்கள் சாதிப்பது, சரியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நம் அனைவருக்கும் சவால்கள் உள்ளன. சில தெரியும், சில இல்லை, என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தூரைச் சேர்ந்த விக்ரம் அக்னிஹோத்ரி, இரு கைகளையும் இழந்தவர். இந்தியாவிலேயே இந்நிலையில் ஓட்டுநர் உரிமம் பெற்ற முதல் நபர் இவர்தான்; இவருக்காக இந்திய மோட்டார் வண்டிச் சட்டமே திருத்தப்பட்டது. உண்மையில், இந்த 48-வயதுத் தன்னம்பிக்கைப் பேச்சாளர், கார்ப் பந்தய வல்லுனருடைய கதை, மனஉறுதி

*மத்திய அமைச்சர் ஸ்மிரிதி இரானி, ரெஸ்க்யூ ஃபௌண்டேஷன் நிறுவனர் த்ரிவேணி ஆச்சார்யா மற்றும் மானசி ஜோஷி.*



மற்றும் எந்தத் துன்பம் வந்தாலும் விடாமுயற்சியுடன் போராடுவதற்கான அடையாளமாகும்.

விக்ரமுக்கு ஏழு வயதான போது, அவருடைய கைகள் எரிந்து போயின. அதன் பிறகு, அவருடைய வாழ்க்கையைக் கட்டமைத்தவர், சமீபத்தில் இறந்த அவருடைய தாய்தான். “சுபெரிதாகக் கனவுகாணவேண்டும், அந்தக் கனவுகளை நனவாக்குவதற்காக மற்றவர்களைவிடக் கடினமாக உழைக்கவேண்டும், உடல்சார்ந்த குறைபாடு அந்தக் கனவுகளைப் பாதிக்க அனுமதிக்கக்கூடாது என்று அவர் என்னை ஊக்கப்படுத்தினார்.’’

இந்தக் குறைபாடு இருந்தபோதும், விக்ரம் எந்தச் சிறப்புப் பள்ளிக்கும் செல்லவில்லை, ஒரு வழக்கமான பள்ளிக்குதான் சென்றார். “தொடக்கத் திலிருந்தே எனக்கு ஓர் உள்ளடக்கிய கல்வி கிடைத்தது; பின்னர் நான் ஓர் அமெரிக்கப் பல்கலைக்கழகத் திலிருந்து பட்டம் பெற்றேன், பொருளாதாரத்துறையில் முதுகலைப் பட்டம் பெற்றேன்; 23 ஆண்டு இடைவெளிக்குப்பிறகு, ஃஃஆ படித்தேன்.’’



அடுத்த பல ஆண்டுகளில், ஓட்டுதல், எழுதுதல், தட்டச்சு செய்தல், சவரம் செய்தல், பல் தேய்த்தல் என அனைத்தையும் தன்னுடைய வலக்காலின்மூலம் செய்யப் பயிற்சி பெற்றார் இவர். “சுமற்றவர்கள் கைகளால் செய்வதை நான் என் கால்களால் செய்கிறேன்.’’

2017 மால்வா அட்வெஞ்சர் என்ற புகழ்பெற்ற கார்ப் பந்தயத்தில் கலந்துகொண்டு வெற்றிபெற்றார் அக்னிஹோத்ரி. “எனக்கு அந்த வெற்றி பெரிய மகிழ்ச்சியளித்தது.’’

பாரிஸ்-டகார் கார்ப் பந்தயத்தின் இந்திய வடிவமான புகழ்பெற்ற டெசர்ட் ஸ்டார்ம் போட்டியில் தொழில்முறை வல்லுநர் பிரிவில் கலந்துகொண்ட இவர், தனிப்பட்டமுறையில் வடிவமைக்கப்பட்ட தன்னுடைய மாருதி செலெரியோ-வை ஓட்டி மூன்றாவது இடத்தை வென்றார். இதுவரை இதைப்போல் நான்கு போட்டிகளில் முன்னணி இடம் பிடித்திருக்கிறார் இவர்.

“பெரிதாகக் கனவுகாண்பதற்கு வயது ஒரு தடையே இல்லை. இப்போது எனக்குக் கிட்டத்தட்ட 50 வயதாகிறது, இன்னும் நான் கனவு காண்பதை நிறுத்தவில்லை. இனிமேல்தான் நான் நிறைய சாதிக்கவிருக்கிறேன். வாழ்க்கை மிக மதிப்புமிக்கது, அதைச் சிறு விஷயங்களில் வீணாக்கக்கூடாது.

சமதா பள்ளிக் குழுவின் நிறுவனர் உத்தம் சஞ்செல், 2001ல், நேபாளத்தைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்குக் கல்வி வழங்குவதற்காக முதல் “மூங்கில் பள்ளி”யை அமைத்தபோது தான் சந்தித்த சவால்கள், பிரச்னைகளை நினைவுகூர்ந்தார். அப்போது அவரிடம் ஒரு பள்ளியை நடத்தும் அளவுக்குப் பணமோ கல்வித் துறை அனுபவமோ இல்லை. ஆனால், ஏழை மாணவர்களுடன் உரையாடியபோது, “அவர்களுக்கு ஆற்றல் அளிப்பதற்கான ஒரே வழி, அவர்களுக்கு நல்ல, தரமான கல்வியை வழங்கி அவர்களைச் சுதந்தரமாக இயங்கச்செய்வதுதான்’’ என்று தெரிந்துகொண்டார் அவர்.

இப்போது, நேபாளத்தின் பல மாவட்டங்களில் 80 சமதா பள்ளிகளை நடத்துகிறார் இவர். இதற்காக ஒவ்வொரு மாணவரிடமும் இவர் வசூலிக்கும் தொகை, வெறும் ₹100 தான்.

இந்தியா, பங்களாதேஷ், இலங்கை, மியன்மாரிலும் இந்தப் பள்ளிகள் பரவத்தொடங்கியுள்ளன. சமதா மருத்துவமனையில் ஏழைகளுக்கு இலவசச் சிகிச்சை வழங்கப்படுகிறது.

அடுத்த 3-5 ஆண்டுகளில், தன்னுடைய நலம்விரும்பிகள் மற்றும் ரோட்டரி நண்பர்களுடைய ஆதரவுடன் 50 நாடுகளில் பள்ளிகளைத் திறக்கலாம் என்று நம்புகிறார் சஞ்செல். “நாம் தீவிர வாதத்தை நிறுத்த விரும்பினால், சமூகத்தில் நடக்கும் அனைத்துக் கெட்ட விஷயங்களையும் முடித்து வைக்க விரும்பினால், நம் குழந்தைகளுடைய கல்வியில் முதலீடு செய்யவேண்டும்’’ என்கிறார் இவர். இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளும் பெரும் எண்ணிக்கையிலான ரோட்டரித் தலைவர்கள் SAARC பகுதிகளில் தன்னுடைய கல்வி முயற்சிகளை ஆதரிக்கவேண்டும், அதன்மூலம் ஓர் அமைதியான, மேம்பட்ட உலகை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரிவேணி ஆச்சார்யா, தன்னுடைய மறைந்த கணவர் பால்கிருஷ்ணா ஆச்சார்யா வுடன் இணைந்து ஒரு மீட்பு அறக்கட்டளையை நிறுவியுள்ளார், இதன் மூலம், நாடுமுழுக்கப் பாலியல் கடத்தலில் சிக்கியிருந்த 5,000க்கும் மேற்பட்ட பெண்களை மீட்டுள்ளார்.

இவை அனைத்தின் தொடக்கம், புலனாய்வு இதழாளரான திரிவேணி ஒரு பணிக்காக மும்பையிலுள்ள காமாத்திபுராவுக்குச் சென்றிருந்தார், அங்கு, ஒரு விபச்சார விடுதிக்கு வெளியில் அமர்ந்திருந்த ஒரு பெண்ணைப் பார்த்தார். தான் நேபாளத்திலிருந்து அழைத்து வரப் பட்டதாகவும், விபச்சாரம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதாகவும் அந்தப் பெண் சொன்னார்.

“அன்று இரவு, நான் மிகவும் ஆழமான துன்பத்தை அனுபவித்தேன். இந்தக் குழந்தைகளைக் காப்பாற்ற

நாம் ஏதாவது செய்யவேண்டும் என்று என் கணவரிடம் சொன்னேன்'' என்கிறார் திரிவேணி.

இதையடுத்து, காவல் துறையினருடைய உதவியுடன் அந்த நேபாளப் பெண்ணையும் மற்றவர்களையும் அந்த விபச்சார விடுதியிலிருந்து இந்தத் தம்பதியர் மீட்டார்கள். "ஒவ்வொருவரிடமும் ஒரு கதை இருந்தது. சிலர் கடத்தப் பட்டவர்கள்; சிலர் தீவிர வறுமையில் வாழ்ந்தவர்கள், நல்ல வேலை, மேம்பட்ட வாழ்க்கை கிடைக்கும் என்று ஆசைகாட்டித் தூண்டப் பட்டவர்கள்.''

உறவினர்கள் இல்லாதவர்கள், மாற்றுத்திறனாளிகள், முதியோர் களுக்குப் பணியாற்றப் பல அமைப்புகள் இருக்கின்றன; ஆனால், இந்த இளம் பெண்களுக்கு உதவுவதற்கு அதிக அமைப்புகள் இல்லை என்பதை இந்தத் தம்பதியர் கண்டார்கள். "இதற்காக நாங்கள் ஏதேனும் செய்யவேண்டும் என்று நாங்கள் உணர்ந்தோம். 1996ல் மீட்பு அறக்கட்டளை உருவானது இப்படி தான்'' என்கிறார் இவர்.

இந்தப் பாதுகாப்பகம் மீட்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வளிக்கிறது. இதற்காக நல முகாம்கள், ஆலோசனை மையங்கள், ஊட்டச்சத்து மற்றும் சட்ட உதவிகளை வழங்குகிறார்கள்.



RID *பரத் பாண்டியா மற்றும்* TRF *அறங்காவலர் செய்ஜி கிட்டா விவேக் அக்னிஹோத்ரியிற்கு விருது வழங்கி கௌரவிக்கின்றனர்.*

விபச்சாரத்துக்கான தேவை இருக்கும்வரை கடத்தல் தொடரும் என்கிறார் திரிவேணி. "இது போதைப் பழக்கத்தைப் போன்றது தான். அதன் விலை அதிகரித்தாலும், அது ஆபத்தாக இருந்தாலும், அதற்கு அடிமையானவர்கள் எப்படியாவது அதைப் பெற முயல்வார்கள். விபச் சாரமும் அப்படிதான். அதனால்தான், வாடிக்கையாளர்களைத் தடுக்கவும் சட்டத்தின்முன் நிறுத்தவும் நாங்கள் அரசுடன் பணியாற்றிவருகிறோம். அதன்மூலம், மக்கள் இப்படிப்பட்ட பகுதிகளில் நுழைய அஞ்சுவார்கள்.''

அப்போலோ மருத்துவ மனையின் துணைத் தலைமை அலுவலரான டாக்டர் ப்ரீதா ரெட்டி, நாட்டிலுள்ள தொற்றாத நோய்களுக் கெதிரான போரில் நாம் ஒருங்கிணைய வேண்டும் என்றார். "இது ஒரு மிகப்பெரிய பிரச்னை; நம்முடைய வாழ்க்கை முறையில் மிகப்பெரிய மாற்றம் நிகழ்ந்தாலன்றி, எல்லாருக்கும் மேம்பட்ட நலப் பராமரிப்பை வழங்க நம்மால் இயலாது.''

இன்று, மருத்துவமனைப் படுக்கை களுக்கு ஒரு தீவிரப் பற்றாக்குறை உள்ளது. "ஆகவே, நாம் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றி, மக்கள் மருத்துவ மனைக்கு வரும் தேவை ஏற்படாதபடி செய்யவேண்டும். ரோட்டரியன்களாகிய நீங்கள் அனைவரும் சமூகத்தில் நல்ல தாக்கத்தை உண்டாக்குகிறவர்கள். மக்களை நலத்துடன் பார்த்துக் கொள்வதும் நம் பொறுப்புதான். ரோட்டரி ஆளுநர்கள் தங்களிடம் உள்ள நல்ல சூழமைப்பை நன்கு பயன்படுத்தி, நலத்துடன் இருக்கவே ண்டிய தேவையை மக்களுக்கு உணர்த்தலாம்.''

நம்முடைய முன்னோர்கள் இயற்கை நலன் மிகுந்த ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார்கள். "ஆனால், நலமாக வாழக் கற்றுத்தரும் அந்தப் பழைமையான அமைப்பிலிருந்து நாம் எப்படியோ விலகிவந்துவிட்டோம்'' என்ற அவர், ரோட்டரியன்கள் "முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும், சமூகங்களில் நலன் மிகுந்த வாழ்க்கைக்கான தகவல் தொடர்பு வசதிகளை வளர்க்கவேண்டும், அவற்றை இன்னும் நெடுந்தொலைவு வெற்றிகரமாகக் கொண்டுசெல்ல வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.



TRF *அறங்காவலர் ஜெனிஃபர் ஜோன்ஸ் உத்தம் சஞ்சலுக்கு விருது வழங்குகிறார்.* RID *பரத் பாண்டியாவும் உடன் உள்ளார்.*

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

# மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கான எளிய முறைகள்

V முத்துகுமரன்

பள்ளிகளில் Basic Life Support (BLS) கற்றுக் கொடுப்பதால் இதய நோய் மற்றும் உயிருக்கு ஆபத்தான நோய்கள் ஏற்படும் போது மருத்துவரின் வருகைக்கு முன் முதலுதவி செய்ய முடியும் என்று இந்தூரின் இதய மருத்துவர் டாக்டர் சரிதா ராவ் தெரிவித்தார்.

இந்தூரில் நடந்த DRCAB விளக்கத்தில் கார்டியக் அரெஸ்ட் என்னும் இதய நோய் ஏற்பட்டதும் சரியான நேரத்தில் cardiopulmonary resuscitation (CPR) அளிக்கப்பட்டால் நோயாளி பிழைக்கும் வாய்ப்பு 60% அதிகரிக்கும் அதே நேரம் அளிக்காவிட்டால் பிழைக்கும் வாய்ப்பு 5% குறைவதோடு இதய நோய் ஏற்பட்ட 10வது நிமிடமே நோயாளி இறக்க கூடும் என்றார்.

ஐந்து படிகளை கொண்ட ஆபத்தை கடக்கும் செயலான DRCAB என்பது Danger, Response, Chest compression, Airway and Breathingஇன் முதல் கட்டமாக நோய் தாக்கியவரை ஒரு தரை மட்டமான இடத்தில் கிடத்த வேண்டும். அமெரிக்காவின் ஹார்ட் அசோசியேஷனால் அறிமுக மான இந்த படிகள் ஆம்புலென்ஸ் வரும் வரை நோயாளியை உயிரோடு வைத்திருக்க உதவும். சமதரையான இடத்தில் கிடத்தப் பட்ட பின் அவருடைய நாடித் துடிப்பையும் மூச்சு விடும் விதத்தையும் அவர் வாயருகே சென்று கவனிக்கவும் என்று டாக்டர் சரிதா விளக்கினார்.

பின் இதயத்தின் மீது கைகளை வைத்து இதயத்தை அழுத்தவும். இந்த அழுத்தத்தின் வேகம் குறைந்தது நிமிடத்திற்கு 100-120 தடவைகள் இருக்க வேண்டும் CPR point இதயத்தின் மையத்தில் இருக்க வேண்டும். உங்கள் கைகளால் நீங்கள் கொடுக்கும் அழுத்தம் மூலம் இதயச் சுவற்றின் மூன்றில் ஒரு பகுதியாவது அழுத்தப்பட்டிருக்க வேண்டும்.

நோயாளியின் வாயில் எதையும் போடாமல் வாய் மூலம் அவரை மூச்சு விட வைக்க முயற்சியுங்கள் என்றார் டாக்டர் சரிதா. தலையையும் மோவாயையும் சரித்து காற்று செல்ல வழி செய்யுங்கள் என்றவர் இதே பணியை ஆம்புலன்ஸ் வரும் வரை செய்யவேண்டும், என்றார்.■



*இந்தூரில் இதய மருத்துவர் சரிதா ராவ் CPR அளிக்கும் செயல்முறையை விவரிக்கிறார்.*

V முத்துகுமரன்

# மனநலக் குறைபாடுள்ள குழந்தைகளுக்குக் கிறிஸ்துமஸ் தாத்தாவாகி மகிழ்ச்சி தந்த RC நாக்பூர்

ரஷீதா பகத்

டிசம்பர் 13 அன்று, நாக்பூர் ரோட்டரி சங்கம் தன்னுடைய 75வது ஆண்டுவிழாவைக் கொண்டாடியது. அந்தப் பிளாட்டினம் விழாக் கொண்டாட்டங்களின் முக்கியமான அம்சங்களில் ஒன்று, இந்தச் சங்கம் கிறிஸ்துமஸ் தாத்தாவாக மாறியதுதான்.

'மாத்ரு சேவா சங்' என்பது, மனநலன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஒரு பள்ளி. கடந்த பல ஆண்டுகளாகவே நாக்பூர் ரோட்டரி சங்கம் இந்தப் பள்ளியுடன் இணைந்து செயல்பட்டுவருகிறது.

இந்த ஆண்டு, இந்தப் பள்ளியில் தங்கிப் பயிலும் 55 குழந்தைகளிடம் ரோட்டரியன்கள் ஒரு கேள்வி கேட்டார்கள், 'இந்தமுறை கிறிஸ்துமஸுக்கு உங்களுக்கு என்ன வேண்டும்?'

'ஆசை மரம்' என்று பெயர் சூட்டப்பட்ட இந்த முன்னெடுப்பைக் கடந்த மூன்றாண்டுகளாகச் செய்து வருகிறது இந்தச் சங்கம். இதன்படி, குழந்தைகள் தங்களுடைய கோரிக்கைகளைச் சொன்னார்கள்; இவை சங்கத்தின் வாட்ஸாப் குழுமத்தில் பதிவுசெய்யப்பட்டன.

இந்தச் சங்கத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை சுமார் 250. அதில் சுமார் 150 பேர் இந்த வாட்ஸாப் குழுமத்தில் இருக்கிறார்கள்.

வியப்பான விஷயம், அடுத்த இரண்டுமணி நேரத்துக்குள், குழந்தைகளுடைய விருப்பங்கள் அனைத்தும் வெவ்வேறு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டன என்கிறார் சங்கத்தின் செயலாளர் நமீதா ஷர்மா. உண்மையில், இன்னும் பல உறுப்பினர்கள் கிறிஸ்துமஸ் தாத்தாவாக விரும்பினார்கள்;





*DG ராஜேந்திர பாம்ரே RC நாக்பூர் தலைவர் பராக் பரஞ்பே மற்றும் செயலாளர் நமிதா ஷர்மா ஆகியோரை கௌரவிக்கிறார்.*

*AG அருண் மிட்டல், DG பாம்ரே மற்றும் சங்கத்தலைவர் பரஞ்பே மாத்ரு சேவா சங் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி மகிழ்விக்கின்றனர்.*



ஆனால், ஏற்கெனவே எல்லாக் குழந்தைகளின் விருப்பங்களும் மற்ற உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டதால், இந்த உறுப்பினர்கள் ஏமாந்துபோனார்கள்.''

குழந்தைகள் அனைவருக்கும் அழகாக வடிவமைக்கப்பட்ட இலைகள் வழங்கப்பட்டன. அதில் அவர்கள் தங்களுடைய ஆசைகளை எழுதினார்கள். இவை ஒரு மரத்தின் கட்-அவுட்டில் பொருத்தப்பட்டன.

இவர்களுடைய ஆசைகள் மிக எளிமையாகவே இருந்தன; அவற்றில் முதலிடத்தில் இருந்தது ஒரு 'சோட்டா பீம் வண்ணம் தீட்டும் புத்தகம்'. மூன்று குழந்தைகள் இதைக் கேட்டிருந்தார்கள். இந்தப் புத்தகங்கள் ஒவ்வொன்றின் விலை, ரூ 45தான். ஆகவே, ரோட்டரியன்கள் இதை வாங்கித்தருவது மிக எளிதாக இருந்தது!

பதின்பருவத்திலிருந்த ஒரு பெண் ஒப்பனைப் பொருட்களைக் கேட்டிருந்தார்; இன்னொருவர் இளஞ்சிவப்பு வண்ணத்தில் ஒரு ஃப்ராக் வேண்டும் என்று கேட்டிருந்தார். மின்கலனில் (பேட்டரி) இயங்கும் ஒரு கார், கடிகாரங்கள், ஒரு கேரம்போர்ட் இப்படி இன்னும் பலப்பல பரிசுகளைக் குழந்தைகள் விரும்பியிருந்தார்கள்.

இந்தப் பரிசுகள் அனைத்தும் அந்தந்தக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன; ரோட்டரியன்களே கிறிஸ்துமஸ் தாத்தாவாக வேடமணிந்து அவற்றை வழங்கினார்கள். DG ராஜேந்திர பாம்ரே-யும் சில பரிசுகளை வழங்கினார்.

இந்தச் சேவா சங்கத்துடன் RC நாக்பூர் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்துவருகிறது என்று அவர் விளக்கினார். எடுத்துக்காட்டாக, சில ஆண்டுகளுக்குமுன்னால் இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் இந்தப் பள்ளிக்குச் சென்றிருந்தபோது சில குழந்தைகள் கை, கால்களால் தவழ்ந்துசெல்வதைக் கண்டார்கள்; அவர்கள் அவ்வாறு தவழ்ந்து சென்ற தரை சொரசொரப்பாகவும், பல இடங்களில் உடைந்தும் காணப்பட்டது; இதனால், அவர்களுடைய கை, கால்களில் காயங்கள் ஏற்பட்டு ரத்தம் சிந்தியது.''

உடனே, இந்தச் சங்கம் ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியது. இதன்படி, பள்ளியின் தரைமுழுவதும் காங்க்ரீட் ஓடுகளால் சமதளமாக்கப்பட்டது, வழவழப்பாக்கப்பட்டது, பக்கங்களில் பிடித்துக்கொள்வதற்கான ஒரு கம்பி பொருத்தப்பட்டது. இதனால், நடக்கச் சிரமப்படும் குழந்தைகள் சற்று அதிகக் கண்ணியத்துடன் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குச் செல்ல இயன்றது.

டிசம்பரில் இந்தச் சங்கம் இன்னொரு சாதனையையும் கொண்டாடியது: இச்சங்கத்தின் ஆதரவுடன் 17 ரோட்டராக்ட் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன, இவற்றில் ஒன்று, ஒரு சமூகச் சங்கமாகும்.

சங்கத் தலைவர் பராக் பராஞ்பெ இதுபற்றிப் பேசியபோது, தன்னுடைய குழு உறுப்பினர்கள் மிகவும் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிற இன்டராக்டர்கள் மற்றும் ரோடராக்டர்களைச் சந்திப்பதிலும்

அவர்களுடன் பணியாற்று வதிலும் மிகவும் மகிழ்கிறார்கள் என்றார்.

இந்த இளைஞர்கள் சமூக சேவையின்மீது இவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதைக் கேட்ட போது, எங்களுடைய நெஞ்சங்கள் நெகிழ்ந்தன. இவர்கள் சுறுசுறுப்பாகப் பங்கேற்றுவரும் திட்டங்களில் சில: மருத்துவ முகாம்களுக்கு ஏற்பாடு செய்தல், தங்களுடைய வீட்டிலுள்ள வேலைக்காரர்களுக்குக் கல்வி பயிற்றுவித்தல், முதியோர் இல்லங்களுக்குச் செல்லுதல், நகரில் ஒரு தூய்மைத் திட்டத்தைப் பொறுப்பேற்று நடத்துதல் போன்றவை.

இவ்வாறு ரோட்டராக்டர்கள் நடத்திவரும் ஒரு திட்டம், கெவல்ரமணி பெண்கள் கல்லூரிக்கு ஒரு கணினி ஆய்வகத்தை வழங்குதல். இந்தக் கல்லூரியில் சுமார் 3,000 மாணவர்கள் உள்ளார்கள், இவர்களில் பெரும்பாலானோர் மிகவும் ஏழைமையான நிதிப் பின்னணியிலிருந்து வருகிறவர்கள். இந்தக் கல்லூரியில் கணினி ஆய்வகம் ஏதுமில்லை.

இன்றைய காலகட்டத்தில் இது ஒரு முக்கியமான தேவை என்பதை உணர்ந்த ரோடராக்ட் குழுவினர், அந்தக் கல்லூரியில் ஒரு கணினி ஆய்வகத்தை அமைத்துத்தரத் தீர்மானித்தார்கள்; அத்துடன், தங்களுடைய ஓய்வுநேரத்தில் மாணவர்களுக்குப் பாடம் கற்றுத்தரவும் முன்வந்தார்கள்.'' இந்த வளாகத்தில் ஒரு நான்குவழித் தேர்வுப் பலகையும் கணினி ஆய்வகமும் DG பாம்ரெயால் தொடங்கிவைக்கப்பட்டது.

சங்க உறுப்பினர்களுடைய இதயத்துக்கு நெருக்கமான ஒரு திட்டம், இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள சேரிகளில் வாழும் 1-6 வயது கொண்ட குழந்தைகளைப் பார்த்துக்



கொள்கிற உள்ளூர்ப் பகல்நேரப் பராமரிப்பு மையமான அந்தர் பார்தி பள்ளியிலிருக்கும் 108 குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துமிக்க உணவளிப்பது.

இந்தப் பள்ளியிலிருக்கும் குழந்தைகளுக்கு ஆண்டுமுழுக்க ஒவ்வொரு நாளும் பால், ஊட்டச்சத்துமிக்க ஒருவேளை உணவை வழங்குவதாக நாங்கள் உறுதியளித்துள்ளோம், நான்காண்டுகளாக இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திவருகிறோம் என்கிறார் நமிதா.

கடந்த சில ஆண்டுகளில், இந்தச் சங்கம் இந்தப் பள்ளியின் சமையலறையை மேம்படுத்தியுள்ளது, அவர்களுக்கு ஓர் LPG இணைப்பு, ஓர் எரிவாயு அடுப்பு, பாத்திரங்களை வழங்கியுள்ளது; இந்த வருடம் அவர்களுக்கு ஒரு நீர் வடிகட்டியையும் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டம், உறுப்பினர் களுடைய நன்கொடைகளின்மூலம் நடைபெறுகிறது. ரூ.8,000 நன்கொடையைக் கொண்டு ஒரு மாதம்முழுவதற்குமான உணவை வழங்க இயலுகிறது. வளரும் குழந்தைகளுக்குப் பொருத்தமான ஓர் உணவுத் திட்டத்தை உருவாக்குவதற்கு எங்கள் சங்கத்தைச் சேர்ந்த ஊட்டச் சத்து வல்லுனர்கள் அவர்களுக்கு உதவியுள்ளார்கள்.

சங்கத்தின் இன்னொரு சிறிய திட்டம், குறுங்கடன் வழங்குதல். சங்கம் பட்டியலிடப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, இரு சேரிப்பகுதிகளைச் சேர்ந்த 10 பெண்களுக்குத் தலா ரூ.10,000 கடன் வழங்கியுள்ளார்கள். இந்தத் தொகை சிறுதொழில் முயற்சிகளைத் தொடங்கப் பயன்படுத்தப்படும். இந்த ஆண்டு, இந்தத் திட்டத்தின்மூலம் 41 பெண்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

RC நாக்பூரின் 75ம் ஆண்டு விழா, DG தலைமையிலான ஒரு கூட்டத்துடன் தொடங்கியது. இதில் சங்கத்தின் வரலாறு நினைவுகூரப் பட்டது; இந்தச் சங்கத்தைத் துடிப்பான ஒரு சங்கமாக ஆக்குவதற்காகக் கடினமாக உழைத்த முன்னாள் தலைவர்களுக்கு நன்றிதெரிவிக்கப் பட்டது.



கடந்த சில பத்தாண்டுகளில் இந்தச் சங்கம் செய்துள்ள புகழ்பெற்ற சில திட்டங்கள் நினைவுகூரப் பட்டன. அவற்றில் ஒன்று, ஹெமல்கல்சா அறுவைச்சி கிச்சை முகாம். 33 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இந்தத் திட்டத்தால், பழங்குடியினருக்கு 5,000க்கும் மேற்பட்ட பெரிய அறுவைச்சிகிச்சை கள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 19 ஆண்டுகளாக, நாக்பூரிலிருக்கும் பல நீர் நிலைகளை இந்தச் சங்கம் பாதுகாத்து வருகிறது. இரண்டாண்டுகளாக ஓர் ஆற்றுப்பள்ளத்தாக்குத் திட்டமும் நடைபெற்றுவருகிறது, இதன்மூலம் 700 ஏக்கர் நிலப்பரப்பு விவசாயத் துக்குத் தகுதியுள்ளதாகியிருக்கிறது. இதன்மூலம் 5,500 கிராமவாசிகள், 10,000 கால்நடைகள் வாழ்கிற எட்டு கிராமங்கள் பலன்பெற்றுள்ளன.

இச்சங்கத்தின் ஒரு சிறப்புத் திட்டம், உடான். கடந்த ஒன்பது ஆண்டுகளாக, ‘காதலர் தின’த்தன்று சுமார் 8,000 சிறப்புக் குழந்தைகளுக்குச் சிறப்பு விருந்தொன்றை அளித்துவருகிறார்கள்.

இவ்விழாவில் சங்கத்தின் இருபத்தொன்பது முன்னாள் தலைவர்கள் பெருமைப்படுத்தப் பட்டார்கள்.■

# சென்னையில் ஏரிகளை மீட்கும் RC மெட்ராஸ்

ரஷீதா பகத்



நீர் பதுமராகம் நிறைந்த புதுச்சேரி ஏரி.

சென்னையிலுள்ள தாம்பரத்தில், சுமார் 30 ஏக்கர்களுக்குப் பரந்து விரிந்த புதுத்தாங்கல் ஏரி உள்ளது. மெட்ராஸ் ரோட்டரி சங்கம், RID 3232, ஒரு பெருநிறுவனத்துடன் இணைந்து இந்த ஏரியை மீட்டுள்ளது.

சமீபத்தில், RIPN சேகர் மேத்தா இந்த ஏரியைச் சுற்றிப்பார்த்தார். அதில் நிறைந்திருக்கும் நீரைக் கண்டார். இந்தத் திட்டத்தால் எங்கள் கிணறுகளெல்லாம் நிறைந்துவிட்டன என்று மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்த உள்ளூர்வாசி ஒருவருடைய பேச்சைக் கேட்டு மகிழ்ந்தார். உங்களுடைய சங்கம் 100 ஏரிகளை இதுபோல் மீட்கவேண்டும் என்று பாராட்டினார்!அவர் இப்படிச் சொன்னபோது, சரி, செய்துவிடலாம் என்றுதான் நான் உடனடியாகச் சொன்னேன் என்று சிரிக்கிறார் இச்சங்கத்தின் முன்னாள் தலைவர் பி என் மோகன். 2017ல் இந்தச் சங்கத்தின் தலைவராக அவர் இருந்தபோதுதான் இந்த ஏரியை மீட்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

சென்ற ஆண்டு 90 ஆண்டுகளை நிறைவுசெய்திருந்த பழமைவாய்ந்த இந்தச் சங்கமும் வேறு சில சங்கங்களும் சேர்ந்து, அன்று மாலை மேத்தாவுக்கு ஒரு வரவேற்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தன. அதில் பேசிய மோகன், மேத்தா சொன்னதுபோல் 100 ஏரிகளை மீட்கவேண்டுமென்றால், எனக்கு உங்களுடைய ஆதரவு தேவை என்று மற்ற சங்கங்களின் உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

அதேசமயம், ரோட்டரியன்கள் ஏரிகளின் எண்ணிக்கையில் கவனம் செலுத்துவதைவிட, அவற்றின் பரப்பளவில் கவனம் செலுத்துவது இன்னும் நல்ல நோக்கமாக இருக்கும் என்று சுட்டிக்காட்டுகிறார் அவர். எடுத்துக்காட்டாக, RC மெட்ராஸ் மீட்கவிருக்கும் அடுத்த ஏரி மிகப்பெரியது; அதன் பரப்பளவு 250 ஏக்கர்கள் என்கிறார் அவர்.

இந்த முயற்சிகள் அனைத்தும் 2017ல் தொடங்கின. அப்போது சென்னை ஒரு தீவிர நீர்ப்பஞ்சத்தில் தவித்துக்கொண்டிருந்தது. ஆகவே, நீர்நிலைகளை மீட்கும் பணியைத் தொடங்கலாம் என்று இந்த ரோட்டரி சங்கம் தீர்மானித்தது.

இதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த முதல் ஏரி, சோளிங்கநல்லூர் அருகில் 10 ஏக்கர்களுக்குமேல் பரந்து விரிந்திருந்த புதுச்சேரி கேணி ஏரி.


அப்போது இந்த ஏரி முழுவதும் ஆகாயத்தாமரையின்கீழ் மறைந்திருந்தது. இதனால், தூய்மைப்படுத்தப்படாத சாக்கடை நீர் நேரடியாக ஏரிக்குள் விடப்பட்டுக்கொண்டிருந்தது என்று நினைவுகூர்கிறார் மோகன்.

கிட்டத்தட்ட இதே நேரத்தில் தான், கேர் எர்த் அறக்கட்டளை என்ற NGOவைச் சேர்ந்த ஜெய்ஸ்ரீ வெங்கடேசனைச் சந்தித்தார் மோகன். இந்த அமைப்பினருக்கு ஏரிகளை மீட்கும் பணியில் மிக நல்ல அனுபவம் இருந்தது.

இதனால், ஜெய்ஸ்ரீயின் சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தது இந்த ரோட்டரி சங்கம். ஏரியை மீட்கும் பணிகள் தொடங்கின.

முதலில், நீர்நிலையிலிருந்த ஆகாயத்தாமரை நீக்கப்பட்டது; பின்னர், ஏரியைத் தூர்வாரி ஆழமாக்கினார்கள்.

நீர்நிலையிலிருந்து ஆகாயத் தாமரையை நீக்குவதற்கே சுமார் ஐந்து மாதங்கள் ஆகின. தூர்வாரும் பணிகள் நிறைவடைந்தவுடன், உயிரியல் திருத்தப் (bioremediation)



*புதுச்சேரி ஏரி சுத்தம் செய்யப்பட்டபின்.*



புதுத்தாங்கல் ஏரி சுத்தம் செய்யப்பட்டபின்.

பணி தொடங்கியது. இதற்காக ஓர் என்சைம் திரவமும் பனை வெல்லமும் கலந்து பயன்படுத்தப்பட்டது. ஏரியை எட்டாகப் பிரித்துக்கொண்டார்கள்; இந்தத் திரவத்தை ஒவ்வொரு பகுதியிலும் தெளித்தார்கள்; இவ்வாறு தெளிப்பதன்மூலம் ஆகாயத்தாமரை மீண்டும் வராமல் தடுக்கலாம் என்று விளக்குகிறார் அவர்.

இச்செயல்முறை நிறைவடைந்ததும், ஏரியிலிருந்து நீர் மாதிரிகள் திரட்டப் பட்டுப் பரிசோதிக்கப்பட்டன. இதில், நீரின் தரம் முன்னேறியிருப்பது தெரியவந்தது. மெதுவாக, பறவைகள் நீர்நிலைக்கு வரத்தொடங்கின. முதலில் நாரைகள் வந்தன. பின்னர், கம்புள் கோழி, ஊதாச் சதுப்புக் கோழி, நாமக்கோழி, சிறு எக்ரெட், குளத்துக் கொக்கு, கேட்டில் எக்ரெட், சிறு முக்குளிப்பான், கார்வெண் மீன்கொத்தி, இன்னும் பலப்பல பறவைகள் வந்தன.

இப்போது, இந்த ஏரியில் நன்னீர் நிரம்பி வழிந்தது; இது இந்த ஏரியைச் சுற்றி வாழும் சுமார் 7,000 பேருடைய குடிநீர் மற்றும் பிற நீர்த்தேவைகளை நிறைவுசெய்தது.

NGOஐப் பணியமர்த்துவதற்கும் இந்தப் பணியை நிறைவுசெய்வதற்கும் ரூ.15 லட்சம் செலவானது; இதற்காக நான் என்னுடைய நன்கொடை கோரும் தொப்பியை எடுத்துக்கொண்டேன், சென்னையிலுள்ள தொழில்துறை நிறுவனமான ரானெயிடமிருந்து இந்தப் பணத்தைப் பெற்றேன் என்கிறார் மோகன்.

புதுச்சேரி ஏரியைப் புதுப்பித்த வுடன், ஆகஸ்ட் 2019ல் தன்னுடைய அடுத்த திட்டத்தைத் தொடங்கியது இந்தச் சங்கம்: சென்னையிலுள்ள தாம்பரத்தில் 30 ஏக்கர்களுக்குப் பரந்து விரிந்திருக்கும் புதுத்தாங்கல் ஏரியை மீட்டுப் புதுப்பித்தல்.

இந்தப் புதுப்பித்தல் பணி ஆகஸ்ட் 2019ல் தொடங்கியது; ஜனவரி மாத நிறைவில் இப்பணி முழுமையடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 50,000 மக்கள் பலன்பெறுவார்கள்.

நாங்கள் RIPN மேத்தாவை இங்கு அழைத்துவந்தோம்; இங்குள்ள நன்னீரைப் பார்த்தும், உள்ளூர்ச் சமூகம் ரோட்டரிக்கு நன்றிதெரிவிப்பதைக் கண்டும் அவர் மிகவும் மகிழ்ந்தார்.

அவர்களுடைய கிணறுகள் நிரம்பியுள்ளன; போதுமான குடிநீர் அவர்களுக்குக் கிடைக்கிறது; இந்த ஏரிக்கு மழை நீர் வருவதால், அருகிலுள்ள உயர்மட்டப் பகுதிகளிலிருந்து குழாய்மூலம் நீரை இங்கு கொண்டுவருவதற்கும் ரோட்டரியன்கள் வசதி செய்துள்ளார்கள்.

ஏரியின் பராமரிப்பைப் பொறுத்த வரை, இதில் குப்பை கொட்டப் படாமலிருப்பதையும், சாக்கடை நீர் வந்து கலக்காமலிருப்பதையும் சரிபார்ப்பதற்காக நாங்கள் ஒருவரை மாதச் சம்பளத்துக்கு நியமித்திருக்கிறோம் என்கிறார்.

இங்குள்ள சமூகத்தினர் ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளார்கள், ஏரியைப் பராமரிப்பது, இடத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வது ஆகியவற்றுக்காக அந்த அமைப்புக் கும் சங்கத்துக்குமிடையே ஓர் MoU கையெழுத்திடப்பட்டுள்ளது.

ஏரிகள் இரண்டு நிலைகளில் மீட்கப்படுகின்றன என்று விளக்குகிறார் மோகன்; முதல் நிலையில், மீட்பதற்குத் தேவையான விரைவான மதிப்பிடல் நிகழ்கிறது. அடுத்து, உண்மையான புதுப்பித்தல் பணி தொடங்குகிறது.

இந்த ஏரியை மீட்பதற்குச் சுமார் ரூ 45 லட்சம் செலவானது; இந்தமுறை இதற்குத் தேவையான நிதியை வழங்கி உதவிய நிறுவனம், சன் அறக்கட்டளை.

எங்களுடன் இணைந்து செயல் படும் பெருநிறுவனங்களுடைய தாராளமான ஆதரவால்தான் இது போன்ற திட்டங்களை எங்களால் நிறைவேற்ற இயலுகிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று தொடர்ந்து கூறுகிறார் மோகன்.

சங்கத்தின் முன்னாள், இந்நாள் மற்றும் வரப்போகும் தலைவர்களுடைய ஆதரவு இந்தத் திட்டத்துக்கு இருப்பதால், இது தொடர்ந்து நிறைவேறுவது உறுதி. எங்கள் சங்கத்தில் எப்போதும் முன்னாள், இந்நாள் மற்றும் வருங்காலத் தலைவர்களுடைய சிந்தனைகள் ஒத்துப்போகவேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் தருவோம், அது இல்லாவிட்டால், எந்தத் திட்டத்தையும் செய்வதில் பொருளில்லை என்கிறார் அவர்.

இப்போது, மூன்றாவது ஏரியும் அடையாளம் காணப்பட்டுவிட்டது: சென்னையிலுள்ள மிகப்பெரிய (250 ஏக்கர்கள் பரப்பைக் கொண்ட) மாதம்பாக்கம் ஏரி. இந்தத் திட்டத்து க்கான செலவு, ரூ 1.5 கோடி. இதை ஒரு பன்னாட்டு நல்கையின்மூலம் திரட்டவுள்ளார்கள். இதற்கான விண்ணப்பம் ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுப் பரிசீலனையில் உள்ளது. ■

# சுகாதாரத்தை மேம்படுத்த பாதுகாப்பு உடைகள்

ரோட்டரி செய்திக்குழு



RC *பனாஜி ரிவியரா தலைவர் யோகிஷ் குல்கர்ணி குப்பை சேகரிப்பாளர்களுடன்.*

பனாஜி ரிவியரா கிளப், RID 3170, நகர மாநகராட்சியின் 100 குப்பை சேகரிப் பாளர்களுக்கு ஜாக்கெட்டுகள், கையுறை களை நகரை சுத்தமாக்கும் போது தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக விநியோகித்தது.

நகரின் மீன் சந்தையில் 50 மீன் வெட்டுபவர்களுக்கு ஏப்ரன்களை வழங்கிய யோகிஷ் குல்கர்னி "ஆடைகள் கறை படிந்து அசுத்தமாக இருப்பதால் அவர்களுக்கு கௌரவமான தோற்றத்தை வழங்கவே ஏப்ரன்களை வழங்கினோம் என்றார்.

மஞ்சள் ஜாக்கெட்டு களில் உள்ள ரோட்டரி சின்னம், ரோட்டரியின் இமேஜை மேம்படுத்த உதவும். ■

# மான்சாவில் சுகாதார முகாம்



RC மான்சா ராயல், RID 3090, புதிய ஆண்டை ரூ.40,000 செலவில் மருத்துவ முகாமுடன் சுகாதார திட்டத்துடன் தொடங்கியது. துவக்க விழாவில், DG ராஜீவ் கார்க் உப்பு, சர்க்கரை, எண்ணெயை குறைவாக உட்கொள்ளவும், நடைபயிற்சியை மேற்கொள்ளவும வலியுறுத்தினார்.

முகாமுக்கு 200 பேர் பதிவு செய்து உள்ளதாக தலைவர் அமித் கோயல் தெரிவித்தார். பதிந்தாவின் மேக்ஸ் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவ துறை சர்க்கரை, நரம்பியல், தைராய்டு சோதனைகளை செய்தது. மருத்துவ மனையும் மெடிலார்ட் நிறுவனமும் மருந்துகள், மருத்துவ குழு செலவை ஏற்க, கூடுதல் சிகிச்சைக்கு நோயாளிகள் மருத்துவ மனைக்கு பரிந்துரைக்கப்பட்டனர்.

20 ஆண்டுகளாக மாணவர்கள், இளைஞர்களுடன் மருத்துவ, இரத்த தான முகாம்களை கிளப் நடத்துவதாக PDG பிரேம் அகர்வால் தெரிவித்தார். ■

# RID 3211ல் டயாலிசிஸ் மையத்தை அமைக்க ரோட்டரி கிளப்புகள் கூட்டாளர் முடிவு

V முத்துகுமரன்

25 லட்சம் ரூபாய் செலவில் திருவனந்தபுரத்தில், RC திருவனந்தபுரம் சென்ட்ரலில், அதன் கூட்டாளர் RC கழகூட்டாம் RID 3211 வுடன் இணைந்து நான்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களை சிறுநீரக நோயாளிகளுக்காக நிறுவினார்.

PDG சுரேஷ் மேத்யூ, RID 3211, “நல்ல செயல்களை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் கடின உழைப்பு இருந்தால் போதும்'' என்றார். பெரிய கனவுகளை நினைவாக்க அதிக பணத்தைவிட அதை அடையும் வழியை தெரிந்திருக்க வேண்டும் என்று கூறினார். K ஜனார்தனன் நாயர், டாக்டர் S V லெட்சுமி ஒரு சுத்திகரிப்பு இயந்திரத்தை தானமாக கொடுக்க முன் வந்துள்ளதாகவும் மேலும் மூன்று இயந்திரங்களை வாங்க உலக நிதி திரட்டப் போவதாகவும் RC திருவனந்தபுரம் சென்டரலில் தலைவர் V பாலகோபால் நாயர் கூறினார்.

1939 இல் ராமகிருஷ்ண மருத்துவ மனையை துவங்கியதிலிருந்து 1996வரை மகப்பேறு மருத்துவராக பணியாற்றிய டாக்டர் கோச்சு கேசவன் நாயரின் வாரிசுகளான இவர்களுடன் இவர்கள் சகோதரிகள் ஷியாமலா தேவி, ராதா தேவி - இயந்திரம் ஒன்று “₹6.45 லட்சம் விலையில் நான்காவது மெஷினை அளித்துள்ளனர்.

இரண்டு கிளப்களும் இணைந்து ஒரு டயாலிஸிஸ் மையத்தை உருவாக்க நிலத்தை அடையாளம் கண்டுள்ளனர். ரோட்டரி மூலம் ஆண்டுக்கு 1,200 நோயாளிகளுக்காக கூப்பன் வழங்கும் ஒப்பந்தம் கையெழுத்தானது. சாதாரண பிரிவில் ₹1,600–2,000 செலவுக்கு எதிராக, மானியத் திட்டத்தின் கீழ் ரோட்டரி மையம் ₹400–500 வரை வசூலிக்கும்.

“நாங்கள் திட்ட விவாதத்தை ஆகஸ்ட் 2019ல் தொடங்கி, செப்டம்பர் மாதத்தில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, மூன்று மாதங்களில் இந்த வசதியைத் தொடங்கினோம்'' என்றார் பாலகோபால். இம்மையத்திற்கு வாரத்திற்கு மூன்று முறை ஒரு நெப்ராலஜிஸ்ட் வருவார்.

உலகளாவிய மானியத்திற்கு செல்லவில்லை என்று மகிழும் PDG மேத்யூ, “உலகளவில் நிதி திரட்டி திட்டங்களை செயல்படுத்த 18-24 மாதங்கள் ஆகும். கிளப் தலைவர்கள் தங்கள் திட்டங்களை தங்கள் காலப்பகுதியில் செயல்படுத்த விரும்புகிறார்கள். ஒரு நிலையான கால அட்டவணையுடன் வரையறுக்கப் பட்ட அளவிலான திட்டத்தை



*PDG சுரேஷ் மேத்யூ, மேஜர் டோனர் கொச்சு ஜனார்தன் நாயர், RC கழக்கூட்டோம் தலைவர் ஷியாம் ஸ்டாரி பெரிரா, RC திருவனந்தபுரம் சென்ட்ரல் செயலாளர் B S வேணுகோபால், ரத்த சுத்திகரிப்பு மையத்தில்.*

“திட்டமிடும் கிளப்புகளுக்கு உலக மானியம் சரியான தேர்வு அல்ல.

RC திருவனந்தபுரம் பொருளாளர் G N நாயர், தான் தலைவராக இருந்த காலத்தில் சென்ட்ரலின் அரசு மருத்துவக் கல்லூரியில் ரோட்டரி மேமோகிராம் மையத்தை கற்பனை செய்ததை நினைவு கூர்ந்து. மாநில நிதி மந்திரி டாக்டர் தாமஸ் ஐசக்குடன் பேசி அவர் மூலம் பொதுத்துறை நிறுவனமான KSFE வழியாக., மேமோகிராம் வசதியை அமைக்க 25 லட்சம் ரூபாய் அனுமதி அளிக்கப்பட்டதையும் கூறினார். இந்த CSR கூட்டாண்மை கிளப்புகளுக்கு பெரிய திட்டங்களைப் பற்றி சிந்திக்க வழி வகுத்தது.

வரவிருக்கும் ஆண்டில், RC கழகுட்டாம் முழுமையான டயாலிசிஸ் மையத்தை உருவாக்கும் திட்டத்தின் பண உதவிக்கு ஒரு சர்வதேச கூட்டாளரை அடையாளம் கண்டுள்ளதாக கிளப் பிரிசிடெண்ட் ஷியாம் ஸ்டார்ரி பெர்ரெரா கூறினார். இந்த மெகா டயாலிசிஸ் மையத்திற்கு DDF ₹10,000 ஒதுக்க DG ஷிரிஷ் கேசவன் ஒப்புக் கொண்டார்.




*PDG சுரேஷ் மேத்யு, RC திருவனந்தபுரம் சென்ட்ரல் தலைவர் V பாலகோபாலன் நாயர், DG ஷிரிஷ் கேசவன் மற்றும் டயாலிசிஸ் நோயாளி சுகந்தி தன் குடும்பத்தாருடன்.*

### மகிழ்ச்சியான முகங்கள்

சிரமங்கள் மற்றும் பணத்தட்டுபாடு இருந்தபோதிலும், CKD நோயாளியான சுகந்தி (31), தனது வீட்டிலிருந்து 30 கி.மீ தூரம் பயணித்து அரசு மருத்துவக் கல்லூரிக்கு செல்ல வேண்டும், ஒரு தனியார் மருத்துவக் கல்லூரியிலும் வாராந்திர அமர்வுகளுக்கு ₹1,800 வசூலிக்கப்பட்டது. இந்த நிலையில் நோயாளிகள் தங்கள் வீட்டிற்கு அருகிலேயே இந்த வசதி இருப்பது தங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதாகக் கூறினர்.

ராமகிருஷ்ணா மிஷன் ரோட்டரி மையத்திற்காக 15 லட்சம் ரூபாய் செலவழித்தாலும், இரு கிளப்களும் 25 லட்சத்துக்கு மேல் நிதி திரட்டின.

### குறிப்பிடத்தக்க திட்டங்கள்

₹10 லட்சம் செலவில் பாலோடில் உள்ள ஒரு சமூக சுகாதார மையம் (CHC)–cum–PHCயை RC திருவனந்தபுரம் சென்ட்ரல் தத்து எடுத்துக் கொண்டது. “இது பழங்குடியினரின் தேவைகளுக்கு உதவுகிறது’’ என்று மேத்யூ கூறுகிறார்.

மற்றொரு பழங்குடியினர் வசிப்பான கோட்டூருக்கு உள்ள 25 ஏழைக் குடும்பங்களுக்கு 1.5 லட்சம் ரூபாய் செலவில் கிளப் மின்சாரம் வழங்குவதோடு 30 பழங்குடி குழந்தைகள். 300 குடும்பங்களுக்கு பயன்படும் வகையில் மொத்தம் 2 லட்சம் செலவில் ஒரு கிணறு மற்றும் இரண்டு கழிப்பறைத் தொகுதிகள் கட்டப்பட்டுள்ளதாக பலகோபால் தெரிவித்தார்.

புளியந்தோப்பு CHCயில் RC கழகுட்டாமினால் ஒரு குழந்தை மற்றும் மகப்பேறு தொகுதி ₹6-7 லட்சத்தில் புதுப்பிக்கப்பட்டதோடு அவர்களின் மருத்துவ தேவைகளும் கவனிக்கப்படுகின்றன என்றார் பெரெரா. கடந்த இரண்டு ஆண்டுகளில் கேரளாவில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ள இடங்களில், கிணறுகள் புத்துயிர்க்கப்பட்டு தூர்வாரப்பட்டதோடு இந்த ஆண்டு கோழிக்கோட்டில் மேலும் 200 கிணறுகள் தூர்வாரப்படும் என்று கூறினார்.

## மோசமாகும் நிலை

*2010, கேரளாவில் வெறும் 300 டயாலிசிஸ் இயந்திரங்களும் திருவனந்தபுரத்தில் 80 இருந்த நிலை மாறி இப்போது, மாநிலத்தில் சுமார் 3,300 இயந்திரங்களும் தலைநகரில் 800ம் உள்ளன. ‘’அரசு மருத்துவமனைகளில் டயாலிசிஸ் மெஷினிகள் இருந்தாலும், CKD நோயாளிகள் அதிகரித்து தேவை விநியோகத்தை விட அதிகமாக உள்ளது’’ என்று RC திருவனந்தபுரம் சென்ட்ரலின். தலைவர் V.பாலகோபால் நாயர் RID 3211 கூறினார்.*

*ரோட்டரி டயாலிசிஸ் மையத்தின் துவக்க விழாவில் பேசிய DG ஷிரிஷ் கேசவன், ரோட்டரி தலைவர்கள் உற்பத்தியாளர்களுடன் 5,000 டயாலிசிஸ் இயந்திரங்களை மொத்தமாக 25 சதவீத தள்ளுபடியில் வாங்குவதற்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளதால், இச்சலுகையை பயன்படுத்திக் கொள்ளுமாறு கிளப்களை வலியுறுத்தியதாகவும் கூறினார்.*

*சாஸ்தமங்கலம் கவுன்சிலர் பிந்து ஸ்ரீகுமார் முன்னிலையில் ரோட்டரி டயாலிசிஸ் மையத்தை சட்டமன்ற உறுப்பினர் O ராஜகோபால் திறந்து வைத்தார். மருத்துவமனை தலைவர் சுவாமி மோக்ஷவ்ரதானந்தா ரோட்டரி தலைவர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோரை வரவேற்று துவக்க விழாவை நிகழ்த்தினார்.*

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

# Zones 4, 5 and 6A உறுப்பினர் சேர்க்கை மற்றும்

| Zone 4 | | |
|---|---|---|
| **Award Category** | **IPDG** | **District** |
| Highest Membership Growth | Shashi Kumar Sharma | 3141 |
| Highest % of Membership Growth | Deepak Jain | 3100 |
| Highest growth in women members | Subhash Jain | 3012 |

| Zone 5 | | |
|---|---|---|
| **Award Category** | **IPDG** | **District** |
| Highest Membership Growth | Babu Peram | 3232 |
| Highest % of Membership Growth | C R Chandra Bob | 3231 |
| Highest % of Membership Growth | Babu Peram | 3232 |
| Highest growth in women members | Babu Peram | 3232 |

| Zone 6A | | |
|---|---|---|
| **Award Category** | **IPDG** | **District** |
| Highest Membership Growth | Chintamani Bhattarai | 3292 |
| Highest % of Membership Growth | Chintamani Bhattarai | 3292 |
| Highest growth in women members | Chintamani Bhattarai | 3292 |



RI தலைவர் மார்க் மலோனியிடமிருந்து PDG அபினந்தன் ஷெட்டி விருது பெறுகிறார். RIDs பாண்டியா, கமல் சங்வி PRID C பாஸ்கர் மற்றும் RPIC ராஜதுரை மைக்கெல் அவர்களும் உடன் உள்ளனர்.



PDG பாபு பேரம் மற்றும் அவர் மனைவி அனிதா அவர்கள் RI தலைவர் மலோனியிடமிருந்து விருது பெறுகின்றனர். PRID C பாஸ்கர் மற்றும் RC ராஜேந்திர ராய் அவர்களும் உள்ளனர்.



PDG C R சந்திர பாப் மற்றும் அவர் மனைவி சுஜாதா, RI தலைவர் மலோனியிடமிருந்து விருது பெறுகின்றார். PRID பாஸ்கர் மற்றும் RC ராஜேந்திர ராய் ஆகியோரும் உள்ளனர்.



PDG சிந்தாமணி பட்டாராயிற்கான விருதை RI தலைவர் மலோனி, RID பாண்டியா, PRID பாஸ்கர் மற்றும் RC ராஜேந்திர ராய் அவர்களின் முன்னிலையில் அளிக்கிறார்.

# ரோட்டரியை பிரபலப்படுத்துதலிற்கான விருதுகள்

| Zone 4 | | |
|---|---|---|
| **Award Category** | **IPDG** | **District** |
| Public Image Award - 1 | Shashi Sharma | 3141 |
| Public Image Award - 2 | Dr Shailesh Palekar | 3131 |
| Social Media Award | Priyesh Bhandari | 3053 |
| Print Media Award | Subhash Jain | 3012 |
| Two Sustainable Projects | Rajiv Sharma | 3030 |

| Zone 5 | |
|---|---|
| **IPDG** | **District** |
| Dushan Soza | 3220 |
| K Rajagopalan | 3212 |
| A V Pathy | 3201 |
| Suresh Hari | 3190 |
| Abhinandan Shetty | 3182 |
| Muni Girish | 3160 |
| S Piraiyon | 2981 |

| Zone 6A | | |
|---|---|---|
| **Award Category** | **IPDG** | **District** |
| Public Image Award | Chintamani Bhattarai | 3292 |
| AV Media Award | Mukul Sinha | 3291 |
| Print Media Award | Mukul Sinha | 3291 |



RI தலைவர் மலோனி, RID பரத் பாரத் பாண்டியா, PRID பாஸ்கர், PDG குர்ஜீத் சிகான் முன்னிலையில் PDG ராஜீவ் ஷர்மா மற்றும் அவர் மனைவி ராஷ்மி அவர்களுக்கு விருது வழங்குகிறார்.



RI தலைவர் மலோனி, PDG ப்ரியேஷ் பண்டாரி மற்றும் PRID பாஸ்கர்.



PDG K ராஜகோபாலன் RI தலைவர் மலோனியிடமிருந்து விருது பெறுகிறார். RID சங்வி மற்றும் RPIC ராஜா மைக்கெல் அவர்களும் உள்ளனர்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

Wordsworld

# நம் காலத்துக்கான ஒரு புத்தகம்

சந்தியா ராவ்

*மிகுதியான, பொருந்தாத உணர்வுகளால் மனம் குழம்பும்போது, எப்போதும் புத்தகங்களை நாடலாம். அவை நமக்குப் பல உண்மைகளைப் புரியவைத்து உதவும். அப்படி ஒரு புத்தகம் இதோ.*

இந்தப் புத்தகம் நெடுங்காலமாக என்னுடைய நூல் அலமாரியில் அமர்ந்திருக்கிறது: கார்லா பவர் எழுதிய If The oceans Were Ink (பெருங்கடல்கள் மையாக இருந்தால்). புலிட்சர் பரிசுக்கான இறுதிச்சுற்றில் பங்கேற்ற இந்த நூல், “ஓ, தி ஓபரா பத்திரிகை”யில், “இப்போதே படிக்கவேண்டிய 10 புத்தகங்கள்” பட்டியலில் இடம்பெற்றது.

இந்த நூலைப் பரிசுக்குப் பரிந்துரைத்தவர்கள், “சமூகத்தின் எல்லாவிதமான மக்களும் வாசிக்கவேண்டிய நூல்” என்று பாராட்டியுள்ளார்கள். இதன் துணைத்தலைப்பு, “இந்தப் புத்தகம் சாத்தியமாகாத ஒரு நட்பைப்பற்றியது, குரானின் இதயத்துக்குச் செல்லும் ஒரு பயணத்தைப்பற்றியது.”

இங்கு சொல்லப்படும் நண்பர்கள், ஆசிரியர் கார்லா பவர் மற்றும் இஸ்லாமிய அறிஞர் ஷேக் முகம்மது அக்ரம் நத்வி. இந்தப் பயணத்தில் அவர்கள் இருவருக்கும் சம பங்கு உள்ளது.

ஒருபக்கம், கார்லா பவருக்கு இஸ்லாம் உலகத்தின்மீது ஆர்வம், காரணம், அவர் வளர்ந்தது பெரும்பாலும் டெஹ்ரான், காபூல், தில்லி, கெய்ரோவில்தான். இன்னொரு காரணம், அவர் பத்திரிகையாளராகப் பணியாற்றியவர்.

இன்னொருபக்கம், ஷேக் மிகச்சிறந்த அறிஞர், சிந்தனையாளர். உத்தரப்பிரதேசத்தில் ஒரு சிறு கிராமத்திலுள்ள மதராசாவில் படித்துக் கொண்டிருந்த அவர், அங்கிருந்து லக்னோவின் மதிப்புக்குரிய நத்வத் அல்-உலாமா-வுக்குச் சென்று படித்தார், கற்பித்தார், அங்கிருந்து ஆக்ஸ்ஃபோர்ட் சென்று ஆராய்ச்சியில் ஈடுபட்டார், ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

இஸ்லாமிய உலகைப் புரிந்துகொள்ளவேண்டும் என்ற கார்லாவின் தேடல், 9/11க்குப் பிறகு இன்னும் வலுவாகிறது. அதற்கான விடைகளைக் குரானிலேயே தேடவேண்டும் என்று ஷேக் தொடர்ந்து சொல்கிறார்.

அதேசமயம், குரான் மிகவும் வளமான நூல், சில சமயம் அது மிகச் சிக்கலாகவும் அமைந்துவிடுகிறது, ஆகவே, நாம் பல நேரங்களில் மொழிபெயர்ப்பாளர்களை நம்ப வேண்டியிருக்கிறது என்றும் அவர் சொல்கிறார்.


அதேசமயம், நம்முடைய புரிந்துகொள்ளலுக்கு வெளிச்சம் சேர்க்கக்கூடிய பல பொருத்தமான, பகிரக்கூடிய கணங்கள் இதில் உள்ளன.

எடுத்துக்காட்டாக, தங்களுடைய ஆய்வைத் தொடங்குவதற்காகக் கார்லாவும் ஷேக்கும் அதிகாரப்பூர்வமாக முதன்முறை சந்திக்கிறார்கள். ஆக்ஸ்ஃபோர்டின் முதன்மை ஷாப்பிங் தெருவின் அருகிலுள்ள நோஸ்பாக் கஃபேயில் நிகழும் அந்தச் சந்திப்பின்போது, தான் குரானைப் படித்ததே இல்லை என்று ஒப்புக்கொள்கிறார் கார்லா. அதற்கு ஷேக் சொல்கிறார், பெரும்பாலான முஸ்லீம்களும் குரானைப் படித்ததில்லை. ஒருவேளை படித்திருந்தாலும், அவர்கள் அதைப் புரிந்துகொண்டதில்லை.

இஸ்லாம் சொல்லும் கருத்துகளாகப் பொதுவில் நம்பப்படுகிறவர்களும் பெரிம்பாலானவை, இறைதூதருக்குப் பிறகு வந்த அறிஞர்கள் உருவாக்கிய சட்ட, தத்துவ அமைப்புகளாகும். இவர்கள் குரானுடைய புரிந்து கொள்ளல்களின் அடிப்படையில் ஒரு விரிவான fiqh அல்லது சட்டவியலை உருவாக்கினார்கள். அவர்கள் மூலத்திலிருந்து விலகியே சென்றார்கள் என்று கார்லாவுக்குச் சொல்கிறார் ஷேக்.

எடுத்துக்காட்டாக, பெண் அறிஞர்களைப்பற்றிப் பேசுவோம். கார்லாவும் ஷேக்கும் குரானைப் படிக்கத் தொடங்கும் நேரத்தில், இறைதூதருடைய கருத்துகளைக் கொண்ட ஹடித்-ல் உள்ள பெண் அறிஞர்களைப்பற்றி ஆராயத் தொடங்குகிறார் ஷேக். அதில் சுமார் 30 பேர் வருவார்கள் என்று எண்ணிய அவர், சுமார் 8,000 பேரைக் காண்கிறார்! “முஹாட்டிதட்” என்று அழைக்கப்பட்ட இந்தப் பெண் அறிஞர்களைப்பற்றி அரபு மொழியில் 40-தொகுதிகளைக் கொண்ட வாழ்க்கை வரலாற்று அகரமுதலியொன்றைத் தொகுக்கிறார்.

தற்போது கேம்பிரிட்ஜ் இஸ்லாமியக் கல்லூரியின் தலைவராக உள்ள ஷேக், டமாஸ்கஸைச் சேர்ந்த ஏழாம் நூற்றாண்டு நீதிபதி உம்ம் அல்-டர்டாவைப்பற்றிப் பேசுகிறார், அவர் இளம்பெண்ணாக இருந்தபோது, மசூதிகளில் ஆண் அறிஞர்களுடன் அமர்ந்து இறையியலை விவாதித்தார் என்பதை அக்ரம் கண்டறிந்தார். “நான் எல்லா வழிகளிலும் அல்லாவை வழிபட முயன்றுள்ளேன்” என்று



எழுதுகிறார் அவர், ''ஆனால், பிற அறிஞர்களுடன் விவாதிப்பதுதான் அதற்குச் சிறந்த வழி.''

கார்லா தொடர்ந்து சொல்கிறார், அக்ரமின் ஆராய்ச்சிப்படி, அவர் சுயமாக வாழ்ந்த பெண். அனாதையாகிய அவர் தலையை மூடாமல் மசூதிக்குச் செல்வார், ஒரு காலகட்டத்தில் பெண்கள் வரிசையில் தொழாமல் ஆண்கள் வரிசையில் தொழுவார். டமாஸ்கஸ், ஜெருசலத்தில் அவருடைய வகுப்புகளில் ஆண்கள், பெண்கள், அவ்வளவு ஏன், ஒரு கலீஃப்கூட மாணவராக இடம்பெற்றிருந்தார்.

உண்மையில், இறைதூதருடைய காலத்தில், ஆண்களும் பெண்களும் மசூதிகளில் ஒன்றாகவே தொழுதார்கள். ஆனால், காலப் போக்கில், பல பண்பாடுகள் பெண்களுக்குத் தடை விதித்தன. அடுத்த சில நூற்றாண்டுகளில், வீடு, குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும் பெண்கள் தொழுவதற்காக மசூதிக்குச் செல்லவேண்டியதில்லை என்று அறிஞர்கள் ஒப்புக்கொண்டார்கள், அவர்கள் மசூதிக்குச் செல்லவே கூடாது என்கிற பண்பாடாக அது மாறிவிட்டது.

ஒரு வழக்கம் அல்லது பண்பாட்டு வழிமுறைக்கும் நம்பிக்கைக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ளக் கார்லாவுக்கு உதவுகிறார் ஷேக். எடுத்துக்காட்டாக, தலையில் தொப்பி அணிவது வழக்கம்தான், இஸ்லாமின் தேவை இல்லை. இந்தத் தெற்காசியப் பழக்கம் நன்கு பரவிவிட்டது. ஒருவர் ஹிஜாப் அணிவது தடுக்கப்பட்டாலும் பரவாயில்லை, உங்கள் நம்பிக்கையை யாரும் எடுத்துச்சென்றுவிடமுடியாது, அதுதான் முக்கியம்.

மேற்கத்தியப் பெண்கள்தான் தலைமுடியை வெட்டுவார்கள். ஆகவே, நம் பெண்கள் தலைமுடியை வெட்டக்கூடாது என்று சிலர் நினைக்கிறார்கள் என்கிறார் அவர். நான் ஒரு தாராளவாதி என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் நான் இறைதூதருடைய சுன்னா-வுக்குத் திரும்பச்செல்கிறேன்.

இறைதூதர் இறந்தபிறகு, அவருடைய மனைவியர் அனைவரும் தங்களுடைய முடியை வெட்டிக் கொண்டார்கள் என்று பதிவுசெய்கிற ஹடித்-ஐ அவர் சுட்டிக்காட்டுகிறார்.

சர்ச்சைக்குரிய இன்னோர் இடத்தில், திருமணமாகாத ஒரு பெண் கர்ப்பமாகிவிடுகிறார். அவருடைய பெற்றோர் ஷேக்கை அழைத்து இதுபற்றிப் பேசுகிறார்கள். அவருக்கு உதவுங்கள், ஆதரியுங்கள் என்கிறார் அவர். இந்த உலகில் அவரைப்பற்றித் தீர்ப்புச் சொல்லாதீர்கள். ஏனெனில், அவர் ஏற்கெனவே தவறு செய்து விட்டார், மறுவுலகில் அதற்கான விளைவுகளை அவர் சந்திப்பார்.

கார்லா தொடர்ந்து எழுதுகிறார், அக்ரமுடைய சகிப்புத்தன்மை ஒரு நம்பிக்கையிலிருந்து வருகிறது கடவுளை மையமாகக் கொண்ட பிரபஞ்சத்தில், பிறரைப்பற்றித் தீர்ப்புச்சொல்லும் சுதந்தரம், உரிமை யாருக்கும் இல்லை. அது கடவுளுடைய பணி. குரான் வெறும் வழிகாட்டி இல்லை, அது மனத்தை விரிவாக்கும் ஒரு வழி.

1991ல் அக்ரம் முதன்முறையாக ஆக்ஸ்ஃபோர்ட் இஸ்லாமியக் கல்வி மையத்துக்கு வந்தபோது, அதன் இயக்குநர் அவரிடம் கேட்கிறார், சாத்தானிக் வெர்ஸஸ்பற்றி என்ன செய்யவேண்டும்? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சல்மான் ரஷ்டியின் அந்த நாவல் அப்போது பெரும் பரபரப்பை உண்டாக்கியிருந்தது. அந்த நாவலின் ஆசிரியரைக் கொல்லவேண்டும் என்று ''ஃபத்வா'' விதித்திருந்தார் அயத்துல்லா கொமேனி.

ஆனால், அக்ரம் அந்த இயக்குநருக்குச் சொன்ன பதில், அந்த நாவலை அலட்சியப்படுத்துங்கள்.

இதுபற்றிப் போராட்டம் நடத்தினால் இஸ்லாமியர்களுக்கு தான் பாதிப்பு என்று சுட்டிக் காட்டினார் அவர். சாத்தானிக் வெர்ஸஸ் நெருப்புப்புயலால் கடவுளுக்கோ இறைதூதருக்கோ பாதிப்பு இல்லை, அவர்களை யாரும் காப்பாற்றவேண்டியதில்லை. ஆனால், உலகம் இஸ்லாமை எப்படிப் பார்க்கிறது என்பதை அது பெரிதும் சேதப்படுத்திவிட்டது.

அவர் தொடர்ந்து கூறியது, கொமேனி முஸ்லீம் நாடுகளில் மிகவும் விரும்பப்படவில்லை. முஸ்லீம்களின் இதயங்களில் மதிப்பைத் திரும்பப்பெறுவதற்கான கொமேனியின் முயற்சிதான் இது.

பிரிந்துகிடக்கும் உலகத்துக்கு அக்ரமுடைய எதிர்வினையாகக் கார்லா காண்பது, வழிபாடும் ஏற்றுக்கொள்ளலும்தான்: பொறுமையையும் நம்பிக்கையையும் உணர்ந்து பின்பற்றினால், வீட்டிலிருந்து தொலைவில் இருக்கும் உள்ளங்களுக்குக் கண்ணியமும் வசதியுணர்வும் பொருளும் கிடைக்கும்.

அக்ரமின் சொற்களில் சொல்வதென்றால், நெடுங்காலமாக முஸ்லீம்கள் தங்களுடைய இடத்தைப்பற்றி மிகவும் கவலைகொண்டிருக்கிறார்கள். இன்னும் மேம்பட்ட இடம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். கலிஃபேட் கிடைத்தால் இன்னும் நன்றாக இருக்கும், முஸ்லீம் நாடு கிடைத்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று முஸ்லீம் சீர்திருத்தவாதிகள் நினைக்கிறார்கள் சவுதி அரேபியா வுக்குச் சென்றால் அது இன்னும் சிறந்த நாடாக இருக்கும் என்று நாம் நினைக்கிறோம், சவுதி அரேபியா வுக்குச் செல்கிறோம். அங்கு விடுதலை இல்லை என்பதைக் காண்கிறோம்.

அவர் தன்னுடைய மாணவர்களுக்குச் சொல்லும் அறிவுரை, அல்லா உங்களுக்கு வழங்கிய இடத்துக்கு நீங்கள் வரும்போது, புகார் சொல்லாதீர்கள். அதை எப்படிப் பயன்படுத்துவது என்று கற்றுக்கொள்ளுங்கள். சிந்தியுங்கள்!

அத்துடன், மேற்கத்திய நாடுகளில் வசிப்பதால் ஒருவர் நல்ல முஸ்லீமாக இருக்க இயலாது என்று பொருளில்லை என்கிறார் அவர்.
நீங்கள் பக்தியுடன் இருக்கக்கூடாது என்று எந்த அரசாங்கமாவது தடுக்கிறதா என்ன? என்று கேட்கிறார்.

அக்ரம் நத்வியுடனான ஓராண்டு வாசிப்பின் நிறைவில் கார்லா உணர்ந்தது என்னவென்றால், குரான் என்பது இரண்டு அட்டைகளுக்கு நடுவில் தொகுக்கப்பட்டிருக்கும் பக்கங்கள்மட்டுமில்லை. நம்பிக்கை யுள்ளவர்கள் திரும்பத் திரும்ப வருகிற ஓர் இடம்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# ஆளுநர்களுடன் சந்திப்பு

ஜெயஸ்ரீ

## இவருடைய முதன்மையான ஆர்வம், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு

**தீபக் குப்தா,** பொறியியல் பொருட்கள் தயாரிப்பாளர், RC காஜியாபாத், RID 3012

இந்த ஆண்டு அவருக்கு நல்ல அனுபவத்தைத் தந்துள்ளது; அதேநேரம், நாள்தோறும் 48 மணிநேரம் இருக்கலாமே, ஆண்டுக்கு 700 நாட்கள் இருக்கலாமே என்று எண்ணுகிறார் அவர். ஏன் என்று கேட்டால் எல்லாத் தலைவர்களும் ஏதாவது ஒரு பெரிய திட்டத்தை நிறைவேற்றித் தங்கள் சமூகத்துக்கு நன்மைசெய்ய விரும்புகிறார்கள், இவை அனைத்தையும் செய்வதற்கு ஓர் ஆண்டு போதாது என்கிறார் தீபக் குப்தா.

அவர் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு மருந்தை முன்னிறுத்த விரும்புகிறார்; அதற்காக ஒரு பன்னாட்டு நல்கை அங்கீகாரத்தையும் பெற்றுள்ளார். இந்தத் தடுப்பு மருந்தை மாவட்டம் முழுக்கக் கொண்டுசெல்லவேண்டும் என்று நான் விரும்புகிறேன், அதைப்பார்த்து, அரசாங்கம் இதை நாட்டளவுக்குக் கொண்டுசெல்லக்கூடும் என்கிறார்.

பன்னாட்டு நல்கைகளின் மூலம் இவருடைய மாவட்டம் 40–50 மகிழ்ச்சிப் பள்ளிகளை உருவாக்கவும், அத்துடன் கூட்டு முயற்சிகளின் மூலம் இலங்கை, பிரேசில், மெக்சிகோ போன்ற நாடுகளில் திட்டங்களை நிறைவேற்றவும் ஆர்வமாக உள்ளார் இந்த ஆளுநர்.

2001 முதல் ரோட்டரியனாக உள்ள குப்தா விரைவில் AKS உறுப்பினராகவுள்ளார், TRFக்கு ₹100,000 வழங்கியுள்ளார். உறுப்பினர் எண்ணிக்கையைப் பெருக்கவும், வாக்கு வங்கி எண்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்படும் போலிச் சங்கங்களைப்பற்றிய கவலையும் இவருக்கு உள்ளது. இப் பிரச்னையைக் கையாள் வதற்காக, DGND தேர்தல்கள் முடியும் வரை நான் புதிய சங்கங்களைப் பதிவு செய்வதில்லை என்கிறார்.



இம்மாவட்டத்தில் 26 சதவிகிதம் பெண் உறுப்பினர்கள், ரோட்டரியன்களுடைய பிள்ளைகளை உறுப்பினர்களாகக் கொண்ட இரண்டு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன, இதே போல் இன்னும் மூன்று சங்கங்கள் அமைக்கப்படவுள்ளன.

TRF பங்களிப்புக்கான இவருடைய இலக்கு, ₹500,000. தன் மாவட்டத்துடைய நன்கொடை நிறுவல் பங்களிப்பு சுமார் ₹100,000ஆக இருக்கும் என்று மகிழ்கிறார். "இந்த ஆண்டு எங்களிடம் நான்கு நன்கொடை நிறுவல் நன்கொடையாளர்கள் இருப்பார்கள்." இவருடைய மனைவி ரீனாவும் ரோட்டரியன்தான்.■

## மகிழ்ச்சிப் பள்ளிகள்தான் என் முதல் நோக்கம் என்கிறார் இவர்

**ஜிதேந்திரா திங்க்ரா,** அரிசித் தயாரிப்பாளர், RC குருக்ஷேத்ரா, RID 3080

1984வரை ரோடராக்டர், 1992லிருந்து ரோட்டரியன். 2015ல் ரோட்டரி மருத்துவப் பணிக்காக ர்வாண்டா சென்று தன்னார்வலர் சேவையில் ஈடுபட்டதை ஜிதேந்திரா திங்க்ரா மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார், அடுத்த மாதம் இதே போன்ற பணிக்காக ஜிம்பாப்வே செல்லும் வாய்ப்பை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளார்.



லெஹ், லடாக் மற்றும் ரூர்கீ-யிலுள்ள கிராமப்புறப் பகுதிகளில் சூரிய ஆற்றல் விளக்குகளை நிறுவுவதை எண்ணி திங்க்ரா மகிழ்கிறார். இப்பகுதிகளில் சிலவற்றில் மின்சாரமே இல்லை என்பதைக் காண மிகவும் வருத்தமாக உள்ளது என்கிறார்.

இரண்டு பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றுவதற்காக இரண்டு பன்னாட்டு நல்கைகளில் இந்த மாவட்டம் கையெழுத்திட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் 87 சங்கங்களில் 3,800 உறுப்பினர்கள் உள்ளார்கள், உறுப்பினர் எண்ணிக்கையை 10 சதவிகிதம் பெருக்க எண்ணியுள்ளார் திங்க்ரா. இவருக்கு மகிழ்ச்சிதரும் இன்னொரு விஷயம், இந்த மாவட்டத்தின் பல்வேறு நலத்திட்டங்களில் 550 பெண் ரோட்டரியன்கள் பங்கேற்பது!

சமீபத்தில், பெண்களைமட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு ரோட்டரி சங்கத்தை இவர் பதிவு செய்துள்ளார், இதேபோல் இன்னொரு சங்கமும் அமையவுள்ளது என்கிறார்.

TRF பங்களிப்புக்கு இவருடைய இலக்கு, 5 மில்லியன் டாலர். அனைத்துச் சங்கங்களையும் 100 சதவிகிதம் PHF ஆக்குவதன்மூலம் இதை எட்டிவிடலாம் என்று இவர் உறுதியாக நம்புகிறார்.■

## டயாலிசிஸ் வசதிகளை மேம்படுத்துவதில் கவனம்

**ஸ்ரீதர் பலராமன்,** பேக்கரி பொருட்கள், RC வேலூர் கோட்டை, RID 3231



ரோட்டரி நடத்தும் ஒரு பள்ளியில் படிக்கிற, இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உணவு அளிப்பதற்காக இவரை அழைத்தார் ஒரு ரோட்டரியன் நண்பர். அதன் மூலம், இவருக்கும் ரோட்டரியில் சேரும் ஆர்வம் வந்தது.

தான் திட்டத்தலைவராகப் பணியாற்றுகிற, தன்னுடைய மாவட்டத்தின் முக்கியத் திட்டத்தைப்பற்றி மகிழ்ச்சியுடன் பேசுகிறார் இவர்: மாவட்டத்தில் டயாலிசிஸ் வசதிகளை மேம்படுத்துவது.

$100,000 பன்னாட்டு நல்கைமூலம் வேலூரில் எட்டு டயாலிசிஸ் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன, இந்த ஆண்டு, உள்ளூர் நன்கொடையாளர்களுடைய ஆதரவுடன் இன்னும் 17 சேர்க்கப்பட்டன. இவற்றின் செயல்பாடுகளுக்கு "தி டேங்கர் அறக்கட்டளை" உதவுகிறது. இதுவரை 12,500 டயாலிசிஸ் செயல்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்கிறார் இவர், இங்கு இன்னும் அதிக இயந்திரங்களைச் சேர்க்கவும், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூரில் பன்னாட்டு நல்கைகளின்வழியாக இன்னும் மூன்று மையங்களை அமைக்கவும் திட்டமிட்டுள்ளதாகச் சொல்கிறார்.

இவர் ஏழு புதிய சங்கங்களைப் பதிவு செய்துள்ளார், 420 உறுப்பினர்களைச் சேர்த்துள்ளார். இந்த மாவட்டத்தில் இப்போது ஏழு மகளிர்-மட்டும் ரோட்டரி சங்கங்கள் உள்ளன. ஜூன் நிறைவுக்குள் 111 புதிய சங்கங்களை நிறுவ எண்ணியுள்ளார் பலராமன்.

TRFக்கு அவருடைய உறுதியளிப்பு, $1 மில்லியன். இளம்பிள்ளைவாத நிதிக்காக, "இரு சொட்டுகளுக்கு இரண்டு டாலர்" என்ற பிரசாரத்தைத் தொடங்கிக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க எண்ணியுள்ளோம். இத்துடன், 30 பெரிய நன்கொடையாளர்களை ஊக்குவிக்க எண்ணுகிறோம், அதில் 10 பேர் அடையாளம் காணப்பட்டு விட்டார்கள் என்கிறார் DG. ஐந்து நன்கொடை நிறுவல் நன்கொடையாளர்கள் இருப்பார்கள், மீதிப் பணம் கால எல்லைப் பரிசுகளின் மூலம் திரட்டப்படும்.

நான் என்னுடைய தலைவர்களைத் "திகைக்க வைக்கும் தலைவர்கள்" என்று அழைக்கிறேன், எங்கள் மாவட்டத்தின் ஹேஷ்டேக், "அளவற்ற சேவை, மகிழ்ச்சி". ஆகவே, என் குழுவினர் சிறப்பாகப் பணியாற்றுவார்கள், ரோட்டரித் தோழமையை ரசித்தபடி சேவைத் திட்டங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன் என்று முத்தாய்ப்புவைக்கிறார் DG.■

## பெண்களுக்கான கல்வி, நலப்பராமரிப்பு

**A கார்த்திகேயன்,** கல்வி மேலாண்மை, RC திருப்பூர் மெட்டல் டவுன், RID 3202

2004ல், 26வயதில் ரோட்டரியன் ஆனார் இவர். அப்போது தான் என் தந்தை இறந்திருந்தார்; வாழ்க்கையை, அதன் சவால்களைச் சந்திப்பதற்கான வலிமை, தன்னம்பிக்கையை ரோட்டரி எனக்குத் தந்தது என்கிறார் கார்த்திகேயன். இளவயதில் இன்டராக்டராகவும் ரோடராக்டராகவும் இருந்திருக்கும் இவருடைய மகிழ்ச்சியான ரோட்டரி நினைவுகளில் ஒன்று, எழுத்தறிவு மற்றும் இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் திட்டங்களில் கவனம் செலுத்திய ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை முன்னிறுத்திய போது பல சாதனைகளைப் படைத்தது.



இந்த ஆளுநர் தன்னுடைய மாவட்டத்துக் காகப் பலவிதமான சேவைத் திட்டங்களைச் சிந்தித்துள்ளார். அவற்றுள் முக்கியத்துவம் பெறுகிறவை, பெண் குழந்தைகளுக்குக் கல்வி, நலப்பராமரிப்பு வழங்குதல், அவர்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள உதவுகிற பணிவாழ்க்கை வழிகாட்டுதலை வழங்குதல்.

ரூ.2.5 கோடி செலவில் ஒரு நடமாடும் மாமோகிராம் வசதியும், ரூ.1.5 கோடி செலவில் ஒரு ரத்த வங்கியும் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. பிப்ரவரி 23 அன்று, சென்னை MGM மருத்துவமனைகளில் CHD கொண்ட குழந்தைகளுக்குச் சிகிச்சை வழங்கத் திட்டமிட்டுள்ளோம். இந்தச் சிகிச்சைக்கு ஆதரவளிக்கும்படி சங்கங்களைக் கோரியுள்ளோம் என்கிறார் இவர்.

இந்த மாவட்டத்தில் 5,200 உறுப்பினர்கள் உள்ளார்கள்; இதை 15 சதவிகிதம் மேம்படுத்த விரும்புகிறார் கார்த்திகேயன். இதுவரை, 600 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இன்னும் அதிகப் பெண்களை ரோட்டரியில் சேர்க்க விரும்புகிறார் இவர், இதில் கவனம் செலுத்தும்படி சங்கங்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

TRFஐப் பொறுத்தவரை, இவர் $500,000 திரட்டுவதாக இலக்கு நிர்ணயித்துள்ளார், அதில் $350,000க்கான உறுதிப்பாடுகளைப் பெற்றுள்ளார். இத்துடன், தன்னுடைய நிறுவலின்போது அறக்கட்டளைக்கு $100,000 பங்களித்துள்ளார்.■

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# புனே விவசாயிகளுக்கு தேனிலிருந்து பணம்

கிரண் ஜெஹ்ரா

பூனேவின் கிழக்கில் உள்ள ஒரு சிறிய கிராமமான மாவலிலுள்ள அவருடைய வேயப்பட்ட கூரை வீட்டின் பின்னே, நாதா மகாராஜ் ஷெலார் என்ற, ஒரு அரிசி விவசாயி ஒரு மர பெட்டியின் உள்ளே தேனீக்களை வளர்க்கிறார்.'' எனது வருமானம் ஆண்டுக்கு ரூ.15,000 அதிகரிக்கும், மேலும் என்னால் தண்ணீர் பம்பில் முதலீடு செய்ய முடியும்,'' என்று அவர் கூறுகிறார். இப்பகுதியில் உள்ள மற்ற நான்கு விவசாயிகளும் தேனீ வளர்ப்பைப் பின்தொடர்கின்றனர்; RID 3131ஐ சேர்ந்த RC பிரதிகரன் அனைவருக்கும் தேனீ அறுவடை பெட்டிகளை விநியோகித்துள்ளார்.'' எங்கள் நோக்கம் உள்ளூர் சமூகத்தினரை உட்படுத்தி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு ஏற்ற சுற்றுச்சூழலை இந்தக் இந்த கிராமத்தில் உருவாக்குவதாகும்,'' என்கிறார் கிளப் தலைவர் பஹாார் ஷா.

ஒவ்வொரு தேனீ பெட்டியிலும் 30,000 தொழிலாளி தேனீக்கள், 100 ட்ரோன்கள் மற்றும் ஒரு ராணி தேனீ ஆகியவை உள்ளன. மர பெட்டியில் ஒரு கீழ் பலகை, ஒரு ஹைவ் பாடி (hive body) அல்லது இரண்டு ஃபிரேம்கள், கொண்ட பல தேன் சூப்பர்கள் மற்றும் உள் மூடி ஆகியவை இருக்கும். வெளிப்புற மூடி மேலே பொருத்தப்படுகிறது . செயற்கை ஹைவ்வின் வடிவமைப்பு மற்றும் பரிமாணம் தேனீக்கு தேவையான இடம் என்ற கருத்தின் அடிப்படையில் ரூ5,000 செலவில் உருவாக்கப்படுகிறது.

புனேவில் ஆர்கனிக் தேனை உருவாக்குபவரான, ஷிவசாகர் மத் உத்யோக்கின் நிறுவனரான விஜய் மகாஜன், தேனீ வளர்ப்பு பற்றி இந்த விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதோடு அவர்களின் மூல தேனை வாங்கி அதைப் பதப்படுத்தி சில்லறை சந்தைக்கு எடுத்துச் செல் கிறார். ஒவ்வொரு விவசாயினாலும் ஒரு கிலோ தேனுக்கு ரூ.150 சம்பாதிக்க முடியும். ஒரே சீசனில் சம்பாதியம் பெட்டி ஒன்றுக்கு ரூ 4000 விட அதிகமானதாக இருக்கும். இந்தியாவில் மட்டும் ஆர்கானிக் தேனுக்கான தற்போதைய தேவை 20 லட்சம் மெட்ரிக் டன்னாகும். எங்கள்





*சிவ்சாகர் மேத் உத்யோக நிறுவனர் விஜய் மஹாஜன் கிராம மக்களிடம் தேனீ வளர்ப்பு பற்றி பேசுகிறார்.*



உத்யோக் இந்த குடும்பங்களிடமிருந்து தேனை முன்னரே தீர்மானிக்கப்பட்ட விலையில் வாங்க தயாராக உள்ளன,என்று அவர் கூறுகிறார்.

தேனைத் தவிர, தேனீ மெழுகை மருந்து நிறுவனங்களுக்கு ஒரு கிலோ ரூ.300க்கு விற்கலாம். இந்த விவசாயிகளுக்கு முன்னேறுவதற்கு தோராயமாக ஓராண்டு ஆகும் மற்றும் அவர்கள் சம்பாதிக்கும் பணத்தை பொறுத்து மேலும் தேனீ அறுவடை பெட்டிகள் வாங்க முடிவு செய்யலாம்.

மகாஜன் தற்போது அருணாச்சல பிரதேசத்தில் 10,000 விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு பற்றி பயிற்சி அளித்தாலும் தேனீ வளர்ப்பு மட்டும் விவசாயிகள் வாழ போதுமான வருமானம் வழங்காது என்று விளக்குகிறார். எனினும், தேனீ மகரந்த சேர்க்கை, விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல் அதிகரிக்கும்.'' தேனீ வளர்ப்பு கூடுதல் வருமானத்தை பெற்று தரும் மற்றும் விவசாயிகள் செடிகளின் பல்லுயிர்தன்மை மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தேனீக்கள் பெரும் பங்கு ஆற்றுகின்றன என்பதை விவசாயிகள் அறிந்துள்ளனர். தேனீக்கள் மற்றும் பிற பூச்சிகளை மகரந்தச் சேர்க்கையாளர்களாக செடிகள் சார்ந்துள்ளன. இதனால் ஆண்டுக்கு 20 சதவீதம் பயிர் விளைச்சலை மேம்படுத்த முடியும்,என்று அவர் மேலும் கூறுகிறார்.

தற்போது காதி கிராம உத்யோக் திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான விவசாயங்களில் முதலீடு செய்வதன் மூலம் கூடுதல் வருமானத்தை ஈட்ட கடன்களுடன் விவசாயிகளுக்கு உதவ அரசாங்கம் தயாராக உள்ளது என்று ஷா கூறுகிறார்.'' கடன்களுக்காக அணுகுவதற்கு முன்பு விவசாயிகளுக்கு ஒரு அடித்தளத்தை வழங்க நாங்கள் விரும்பினோம். விவசாயிகளின் வாழ்வாதாரங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஆர்கேனிக் சந்தையின் வளர்ச்சி, மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் தகவல்களை பரிமாறிக் கொள்ளுதல் ஆகியவற்றில் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது. இந்த முயற்சியில் மேலும் விவசாயிகளை இணைத்துக் கொள்ள நாங்கள் விரும்புகிறோம்.

தன்னுடைய வீட்டைப் பற்றிச் சொல்லும் போது மகராஜ் ஷெல்கர் என்னுடைய நிலத்தின் உற்பத்தியில் அரிசி, தக்காளிகள், வேர்க்கடலை மற்றும் கத்திரிக்காய் ஆகியவை அடங்கும் என்று கூறுகிறார். நான் நிலத்தில் கடுமையாக உழைத்து விட்டு வீட்டிற்கு திரும்பும்போது தேனீக்களின் ரீங்கார ஒலி எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. அதிகம் எதுவும் செய்யாமலேயே இனிய லாபத்தை நான் அடைய போகிறேன் என்ற எண்ணம் என்னுள் உற்சாகத்தை ஏற்படுத்துகிறது.■

# ரசிக்கலாம், ருசிக்கலாம்

ஹாங்க் சார்டின்

ஜூன் 6 முதல் 10 வரை ரோட்டரி பன்னாட்டுக் மாநாட்டுக்காக நீங்கள் ஹோனலூலு வரும்போது, இந்நகரம் வழங்கும் மிகச் சிறந்த உணவகங்களுடைய வரிசையைக் காண்பீர்கள். அத்துடன், சுவையான உணவைப் பெறுவதற்காக ஹவாயீ மாநாட்டு மையத்திலிருந்து நீங்கள் நெடுந்தொலைவு செல்லவேண்டியிருக்காது.

காலை உணவுக்கு அலோஹா சமையலறையில் முட்டை பெனடிக்ட் மற்றும் ஆம்லெட் போன்ற வழக்கமான உணவு வகைகள் கிடைக்கும். இந்த உணவகத்தின் சிறப்பு, சோஃப்லெ பான்கேக்ஸ். புகழ்பெற்ற இந்தக் காலை யுணவின் காற்றோட்டமான வடிவம் இது.



நீங்கள் சற்று கூடுதலாக நடக்கத் தயாராக இருந்தால் (1.2 மைல்கள்), நூக் என்ற உணவகத்தில் உங்களுடைய காலை உணவில் சில கவர்ச்சியான புதுமைகளைக் காணலாம். எடுத்துக்காட்டாக, ஆரஞ்ச் ப்ளாஸம் பான்கேக்ஸ், தேங்காய்க் கேரமல் வாஃபிள்கள் மற்றும் அரிசி மாவில் செய்த மோச்சி வாஃபிள்கள்.

அருகிலுள்ள மதிய உணவு வாய்ப்புகளைப் பட்டியலிட்டால், நாம் உலகையே சுற்றி வந்து விடலாம்: கிக்கின்' காஜூனில் தொடங்கி ஹோக்கைடோ ராமென் சன்டௌகா, டோ-நெ ஜப்பானிய உணவு, இன்னும் பல.

இரவுணவுக்குக் கொரிய உணவகமான காங் நாம்-க்குச் செல்லலாம். இந்த பார்பேக்யூ உணவகத்தின் சிறப்பம்சம், அதன் யகினிகு (க்ரில் செய்த இறைச்சி). குழுவாகச் சேர்ந்து இங்கு வாருங்கள்; இவர்களுடைய கூட்டுத் தட்டுகளில் ஒன்றை ஆர்டர் செய்யுங்கள்.

புகழ்பெற்ற ப்ரூபப் உணவு என்பது ஹவாயீ-யில் போக் மற்றும் சியர்ட் அஹி சாலட், அத்துடன் சிக்கன் விங்ஸ், பர்கர்கள் மற்றும் பீட்சா. இதை உண்ண விரும்புகிறவர்கள் வைகிகி ப்ரூயிங் கம்பெனிக்குச் செல்லலாம், அவ்வாறு செல்லும்போது, அங்குள்ள பியர்களை மாதிரிபார்க்க மறக்கவேண்டாம்.

பலவிதமான நிகழ்வு களுக்கு நடுவில் ஒரு நல்ல நொறுக்குத்தீனி வேண்டுமென்றால், ஸ்னோ ஃபாக்டரி மற்றும் ஐஸ் மான்ஸ்டர் ஹவாயீ-யில் கிடைக்கிற ஹவாயீ-யின் புகழ்பெற்ற உணவான "ஷேவ் ஐஸ்"ஐ ருசியுங்கள்.

**ஹோனலூலுவில் 2020 ரோட்டரி மாநாட்டின் நுழைவுக்கட்டணத்தை சேமிக்க, 31 மார்ச்சுக்குள் riconvention.orgல் பதிவுசெய்யுங்கள்.**

©The Rotarian

---

# ரோட்டரி நேபாளம் தைவான் மருத்துவச் சேவை

ரோட்டரி செய்திக் குழு

தைவானின் RID 3523 உடன் இணைந்து RID 3292 ஏற்பாடு செய்த இரண்டு நாள் மருத்துவ முகாம் மூலம் 7,000க்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்தனர். ரோட்டரி நேபாளம் தைவான் மருத்துவச் சேவை என்று அழைக்கப்பட்ட இந்த முகாம், RC பக்லுங் சங்கத்தால் ஒருங்கமைக்கப்பட்டு பக்லுங்கில் உள்ள தௌலகிரி மண்டல மருத்துவமனையில் நடத்தப்பெற்றது. பல்வேறு மருத்துவத் துறையை சேர்ந்த 90 நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவினர் நோயாளிகளுக்குச் சிகிச் சையளித்து, ஏழை எளியோருக்கு சுமார் 25 லட்ச நேபாள ரூபாய் மதிப்புள்ள மருந்துக்களை விநியோகித்தனர். தைவானைச் சேர்ந்த 150 ரொட்டேரியன்களும் இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர்.

சங்கத்தினர் தௌலகிரி மண்டல மருத்துவமனைக்கு ஓர் ஈசிஜி, அல்ட்ராசவுண்ட் எந்திரங்களையும், இரண்டு பல் பரிசோதனை நாற்காலிகளையும் நன்கொடையாக வழங்கினர். பர்பத் மற்றும் தமௌலி மாவட்ட மருத்துவமனைகளுக்கு தலா ஒரு அல்ட்ராசவுண்ட் எந்திரத்தை பர்பத் மற்றும் தமௌலி RCகள் வழங்கினர். RID 3523 மற்றும் 3292 கவர்னர்களான ஜாய் மற்றும் கிரண் லால் ஷ்ரேஸ்தா நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இந்த முகாமின் மூலம் இரு மாவட்டங்களுக்கும் இடையிலான



உறவு வலுப்பெற்றுள்ளது என்றார் ஷ்ரேஸ்தா. விரைவில் பக்லுங் மருத்துவமனைக்கு 40,000 டாலர் மதிப்புள்ள தண்ணீர் விநியோக அமைப்பும், போகாரா இதய நல மையத்துக்கு 1,35,000 டாலர் மதிப்புள்ள கேத் பரிசோதனைக் கூடமும் RID 3523யின் ஆதரவில் உருவாக்கப்படும்.■

# RI தெற்காசிய அலுவலக அறிவிப்புகள்

ரோட்டரி அறக்கட்டளைக்கு வருடாந்தி நிதி அல்லது போலியோ ப்ளஸ் அல்லது ஒரு அறக்கட்டளை கிராண்ட் மூலம் ஸ்பான்ஸர் செய்வதற்காக நிதி வழங்குபவர்களுக்கு அறக்கட்டளையினால் அங்கீகாரப் புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

- இந்த நிதிகளுக்கு பங்களிக்கும் ஒவ்வொரு டாலருக்கும் நன்கொடையாளர்கள் ஒரு அங்கீகார புள்ளியைப் பெறு கிறார்கள். எண்டோவ்மென்ட் ஃபண்டிற்கான பங்களிப்புகள் மற்றும் டைரக்ட் செய்யப்பட்ட பரிசுகள் அங்கீகாரம் புள்ளி களுக்கு தகுதியற்றவை.
- நன்கொடையாளர்கள் அறக் கட்டளை அங்கீகார புள்ளிகளை மற்றவர்களுக்கு PHF அல்லது பல PHF ஆக தகுதி பெற உதவ மாற்றி தரலாம்.
- குறைந்தபட்சம் 100 அறக் கட்டளை அங்கீகாரப்புள்ளிகள் மாற்றப்பட்டிருக்க வேண்டும், மற்றும் நன்கொடையாளர் அங்கீகாரம் மற்றும் பரிமாற்றக் கோரிக்கை படிவத்தை முழுமையாக நிரப்பி கையெழுத்திட வேண்டும்.
- அங்கீகார புள்ளிகளை தனிநபர் களிடமிருந்து ஒரு கிளப் அல்லது மாவட்டத்திற்கு மாற்ற முடியாது.

கிளப் மற்றும் மாவட்டத் தலைவர்கள் ஆன்லைனில் கிளப் அங்கீகாரம் சுருக்கத்தைக் காணலாம், இதில் அங்கீகாரத் தொகை, அங்கீகாரப் புள்ளிகள், தற்போதைய PHF நிலை மற்றும் My Rotary லாக்இன் மூலம் அந்த நிலை அடையப்பட்ட தேதி ஆகியவைகள் அடங்கிய செய்திகளை பார்க்கலாம்.

### செலவிடப்படாத CSR தொகை

கார்பரேட்டுகளின் செலவிடப்படாத CSR தொகை தொடர்பான கம்பெனிகள் ஆக்ட், 2013இன் பிரிவு 135இல் செய்யப்பட்ட சமீபத்திய மாற்றம் கீழே வழங்கப்பட்டுள்ளது:

எந்தவொரு நிறுவனத்திற்கும் அதன் கார்ப்பரேட் சமூகப் பொறுப்புக் கொள்கையைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும், பரிந்துரைக்கப்படக்கூடிய நிபந்தனைகளை பூர்த்தி செய்து, எந்தவொரு தற்போதைய திட்டத்திற்கும் செலவிடப்படாத எந்தவொரு CSR தொகையும், நிறுவனத்தின் நிதி ஆண்டின் முடிவிலிருந்து முப்பது நாட்களுக்குள் நிறுவனத்தால் எந்தவொரு வங்கியிலும் செலவழிக்கப்படாத கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு கணக்கு என்று அழைக்கப்படும் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, அந்த மாற்றம் செய்யப்பட்ட மூன்று நிதியாண்டிற்குள் அந்தத் தொகை கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு கொள்கைக்காக செலவு செய்யப்பட வேண்டும். அப்படி தவறும் நிலையில் குறிப்பிடப்பட்ட நிதியினை மூன்றாம் நிதியாண்டு முடிவடைந்த பிறகு முப்பது நாட்களுக்குள் ஷெட்யூல் VIIல் குறிப்பிட்ட படி அந்தத் தொகையை மாற்ற வேண்டும்.

ரோட்டரி கிளப்புகள் மற்றும் மாவட்டங்கள் கார்ப்பரேட்டுகளிடம் இம்மாதிரி செலவிடப்படாத CSR தொகைக்காக அணுகலாம்.

### கிராண்ட் மேனேஜ்மெண்ட் டிரெயினிங் பொருட்கள்

கிராண்ட் மேனேஜ்மெண்ட் டிரெயினிங்கிற்கு தேவையான அனைத்தும் ரோட்டரி படிக்கும் மையத்தில் கிடைக்கின்றன. திட்டத்தை நீடித்ததாக்குதல், சமூக மதிப்பீடுகளை நடத்துதல், பயனுள்ள திட்டங்களைத் திட்டமிடுதல், மானிய நிதிகளை நிர்வகித்தல், ரோட்டரி மானியங்களுக்கான தகுதி கிளப் மற்றும் மானியங்கள் குறித்து அறிக்கை செய்தல் போன்ற பாடத்திட்டங்களைக் கண்டறியவும். ஆன்லைனை பயன்படுத்தி, கிளப்புகள் ஒரு அறக்கட்டளை கிராண்டிற்கு தகுதி பெறும் ஒரு வழியாகவும் அல்லது அத்துடன் இணைந்து ஒரு குறுகிய நேரடி பயிற்சியையும் மேற்கொள்ளலாம். இந்த பயிற்சி உறுப்பினர்களை மாவட்ட தேவைகள் பற்றி விவாதிக்கவும் கேள்விகள் கேட்கவும் வாய்ப்பு வழங்குகிறது.

DGES, DRFCக்கள் மற்றும் மாவட்ட பயிற்சியாளர்களால் உறுப்பினர்கள் பயின்ற பாடங்களின் அறிக்கைகளை அணுக முடியும். இந்த அறிக்கைகளை பயன்படுத்தி உங்கள் மாவட்டத்தின் பயிற்சியை பின் பற்றுவதோடு தகுதிபெறும் முறையையும் நிர்வகிக்கலாம். “ஆக்ஸஸ் டூ லர்னிங் சென்டர் ரிப்போர்ட்”கள் பாடத்திட்டத்தை முடித்து இரண்டு வாரங்களுக்குள் உங்கள் முதல் அறிக்கையை பெறுங்கள். learn@rotary.orgக்கு கேள்விகளை அனுப்பவும்.

### My Rotaryயில் கிராண்ட்கள் மற்றும் உறுப்பினர்களின் அறிக்கைகளை பயன்படுத்துதல்

My Rotaryயில் உள்ள அறிக்கைகள் ரோட்டரி உறுப்பினர்களுக்கு அவர்களின் மானிய நடவடிக் கைகளை நிர்வகிக்க உதவுவதோடு, ரோட்டரி அறக்கட்டளையின் தொழில்நுட்ப ஆலோசகர்களின் உறுப்பினர்களைக் கண்டறியவும், அவர்களுடைய மானிய திட்டங் களை பயன்படுத்தவும் உதவும். பல்வேறு வகையான தகவல்களைச் சேகரிக்க எந்த அறிக்கையைப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் கண்டுபிடிக்க, My Rotaryஇல் உள்நுழைந்து Manage என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

### த ரொட்டேரியன் - டிஜிட்டல்

த ரொட்டேரியன்-டிஜிட்டல் பத்திரிக்கை 6 மாதத்திற்கு $6 என்ற கட்டணத்திற்கு பெறலாம். விருப்பமுள்ளோர் இதனை data@rotary.org என்னும் மின்னஞ்சக்கு தெரியப்படுத்தலாம்.■



# அக்கறை உணர்வுடன் வாழுங்கள்

பரத் மற்றும் ஷாலன் சாவூர்

எல்லாவற்றையும் மகிழ்ச்சியுடன் நிரப்பப்பட்ட கண்களால் பார்த்து, மகிழ்ச்சியுடன் கேட்டு,அனைத்து உணர்வுகளையும் மகிழ்ச்சியுடன் சுவைத்தால் வாழ்க்கை ஒவ்வொரு கணமும் மகிழ்ச்சியாக இருப்பதோடு நீங்கள் சந்திக்கும் அனைத்தையும் அழகாக்கும். மூலத்தின் ஒளி உங்களை ஒளிரச் செய்வது போலவே எல்லாவற்றையும் ஒளிரச் செய்வது உங்கள் ஒளிதான்.

**மகிழ்ச்சியின் சக்திமகிழ்ச்சி** என்பது மன அழுத்தத்திற்கு மாற்று மருந்தாகும். நாம் மகிழ்ச்சியால் நிரப்பப்படும்போது, நமது செல்கள் மகத்தான ஆற்றலை உருவாக்குகின்றன. பண்டைய இந்திய ஞானத்தின்படி, மகிழ்ச்சி என்பது ஒரு அடிப்படை வாழ்க்கைத் தரம் என்பதோடு இதுவே ஆனந்தமாகும். நமது ரிஷிகள் மகிழ்ச்சியின் மூலத்துடன் ஒன்றிப் போவதன் மூலம் அவர்கள் ஓர் ஆத்மீக ஆனந்த நிலையை அனுபவித்தார்கள். அவர்களை சுற்றி உள்ளவர்களும் இதனால் ஓர் அமைதியை அடைந்தார்கள்.

**ஆரோக்கியமற்ற வெறுப்பு உணர்வு**. தேவையற்ற கோபம், பயம், நம்முடைய எண்ணங்களுடன் இணைந்து போகாதவர்கள் மீது வெறுப்பு ஆகிய மோசமான குணங்களே நம்மை நம்முடைய அடிப்படை மகிழ்ச்சியிலிருந்து விலக்கி வைக்கிறது. இம்மாதிரியான மோசமான மனநிலை உடையவர்கள் இயல்பான வாழ்க்கையை வாழுவதற்கு நரம்பு தொடர்பான நோய், அல்லது இதய நோய் இல்லா விட்டால் மனஅழுத்த நோய்க்கான மருந்துகளை எடுத்துக் கொள்பவர்களாக இருப்பார்கள். இது நமக்கு வருத்தத்தை தருகிறது காரணம் அடிப்படையில் நல்லவர்களான அவர்களுடைய இந்த எதிர்மறையான குணங்கள் அவர்களின் நல்ல குணங்களை மறைத்துவிடுகின்றன. இதனால்

அவர்கள்  கசப்பான, அவகுணம் படைத்த மனிதர்களாக மற்றும் வளைந்து கொடுக்காதவர்களாக தெரிகிறார்கள்.

அடுத்தவர்களை கணிப்பதை நிறுத்தி அனைத்து விஷயங்களிலும் உங்களுக்கென்று ஓர் அபிப்ராயத்தை வைத்துக் கொள்ளாமல் இருந்தால் உங்கள் மனமும் உணர்வுகளும் சலனமில்லாத நீர்தேக்கம் போலிருக்கும். அதனால் உங்கள் மனம் லேசாகி சமைப்பதிலிருந்து விளையாடுவது அல்லது கணக்கு களை சரிபார்ப்பது வரை அனைத்து வேலைகளையும் உங்களால் எளிதாக செய்ய முடியும் காரணம் உங்கள் கவனம் சிதறுவதில்லை. அதோடு மனம் அமைதியாக இருக்கும் போது தேவையில்லாத எந்த உணர்வும் உங்களை சலனப்படுத்துவதில்லை. நாட்கள் செல்ல செல்ல, மனதிலும் உடலிலும் ஒரு புதிய உள் சமநிலையின் அமைதியான சமநிலை இருக்கிறது. ஒரு முடிவில்லாத ஓட்டத்தில் இதை அனுபவிக்கும் போது உணர்வுகள இல்லாத மனம் இருந்தால் அதே மனம் எத்தனை அழகாக இருக்கிறது என்பதை நீங்கள் உணருவீர்கள். அப்போதும் எண்ணங்கள் வரும் ஆனால் அவைகள் மேன்மையானவைகளாக இருக்கும் அப்படியில்லாமல் எதிர்மறை உணர்வுகள் தலை தூக்கினால் அவைகளை ஒதுக்கி விட்டு முன்னேறுங்கள்.

உங்களுக்குள் இருக்கும்  விளக்கை ஏற்றவும். ஒரு வேலையிலிருந்து இன்னொரு பணிக்கு சலனமில்லாமல் நீங்கள் மாற முடிகிறது என்றால் அதற்கு காரணம் உங்களுக்கு பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் நீங்கள் செய்யும் ஒவ்வொரு செய்கையையும் உங்களுக்குள் இருக்கும் ஏதோ ஒன்று அதை தேர்வு செய்திருப்பதோடு அது இருளில் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. உங்கள் பணியை வெறுக்காதீர்கள் -அது உங்களுக்கு உணவு அளிக்கறது. அதே போல் சமையலை வெறுப்புடன் அல்லாமல் ஆர்வத்துடன் செய்யுங்கள் அது உங்கள் குடும்பத்தினரின் பசியைத் தீர்க்கிறது. நம்முடைய ஒவ்வொரு செயலும் இருளில் வெளிச்சத்தை கொடுக்கும் செயல் என்பதை மறவாதிருப்பதோடு அதற்காக நன்றியுடன் இருங்கள். சலனம் தவிர்க்க முடியாதது. ஏதோ ஒன்று நிகழ்கிறது என்றால் அது நடந்தே ஆக வேண்டும் என்பது இயல்பு. நீங்கள் அவற்றால் பாதிப்படையாதீர்கள் காரணம் இந்த சலனங்கள் அல்லது குறுக்கீடுகள் கூட வாழ்க்கையின் ஓர் அழகிய அங்கம்தான்.

நான் எனது அணுகுமுறையை மாற்றிய பின்னர், ஆரம்பத்தில்நான் சற்று திசைதிருப்பப்பட்டதாக உணர்ந்தேன். இந்த உணர்வு மோசமானதல்ல என்பதை உணர்ந்தேன் என்ன இதற்கு முன்பு இந்த மாதிரி நான் உணர்ந்ததில்லை. இது பழகிய பின் நேர்மறையான உணர்வுகள் இல்லாததால் இந்த உலகிற்கும் எனக்கும் இடையே ஒரு புதிய உறவு மலர்ந்தது. மற்றவர்கள் தங்கள் உணர்வுகளை பகிறும் போது நீங்கள் கேட்பதோடு அவர்களையும் அவர்களது உணர்வுகளையும் புரிந்து கொள்வதோடு அவர்கள் பால் உங்கள் மனதில் அன்பு பெருகுகிறது. காரணம் ஒரு நேரத்தில் நீங்களும் அதை கடந்து வந்திருக்கிறீர்கள்.

உங்கள் மீது நீங்கள் அக்கறை செலுத்துங்கள். அற்புதமான விஷயம் என்னவென்றால் உங்கள் மீது நீ ங்களே அக்கறை செலுத்த நீங்கள் அதிக புத்திசாலியாகவோ , படித்தவராகவோ, பணக்காரராகவோ அல்லது எல்லா விஷயங்களிலும் மிகச் சிறந்தவராகவோ இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. அக்கறை செலுத்துவதென்பது மனம் தொடர்பான ஓர் உணர்வு. அது நம்முடைய உடலின் ஒவ்வொரு அணுவிலும் நிறைந்திருக்கும் அன்பு என்ற உணர்வை உணர்வதேயாகும். நம்முள்ளே கோபம், சுய பச்சாதாபம் போன்ற எதிர்மறையான உணர்வுகள் தோன்றினால் நம்முடைய சாதாரண துடிப்புகளையும் அது கெடுத்துவிடும். நாம் நம் மீதே அக்கறை செலுத்தும் போது மகிழ்ச்சி தடையில்லாமல் நம்மிடமிருந்து இயல்பான அன்பாக வெளிப்படும்.

நமக்குள் அக்கறையுள்ள மையத்தை உயிருடன் வைத்திருப்பது முக்கியம். எனக்கு என் மீது உள்ள அக்கறையினால் நான் உடற்பயிற்சி செய்கிறேன், ஆரோக்கியமான உணவை சாப்பிடுகிறேன். தியானம் மனதை முழுவதுமாக தளர்த்தி, அதன் விழிப்புணர்வை விரிவுபடுத்தி மனஅழுத்தம் போன்ற சிக்கல்களில் விழுந்திருந்தாலும் அதிலிருந்து மீட்டெடுக்கிறது. இந்த நீட்டிக்கப் பட்ட அக்கறை உணர்வு நமக்கு ஆறுதல் அளிப்பதற்கான அனைத்து வழிகளையும் தேடி எடுக்கிறது. டாக்டர் பிளேர் ஜஸ்டிஸ் கூறிய நம்முடைய உயிர் சக்தியுடன் நம்மை இணைக்கும் அக்கறையுள்ள மையம் நமது உள் ஆரோக்கியத்தின் பாதுகாவலர் எவ்வளவு உண்மை என்பது நமக்கு புரிகிறது.

அக்கறை உணர்வே  நம் வாழ்க்கையை மாற்ற தைரியத்தையும் வீரியத்தையும் தருகிறது. ஆல்ஃபியர் எழுதியது போல, பெரும்பாலும் தைரியத்தின் சோதனை இறப்பது அல்ல, வாழ்வதே ஆகும். தைரியம் வெவ்வேறு நபர்களுக்கு பல்வேறு பாதையில் செல்கிறது. மற்றவர்களை துன்பப்படுத்தினாலும் இல்லை என்று சொல்லும் தைரியம் சிலரிடம் இருக்கிறது. சிலர் தங்கள் கோபம் அல்லது அவமானம் ஆகிய உணர்வுகளை ஒதுக்கி வைத்து மற்றவர்களை மன்னிக்கும் தைரியத்தை வளர்த்துக் கொள்கிறார்கள். ஒட்டுமொத்தமாக பார்த்தால், அக்கறை என்பது ஒரு அழகான அணுகுமுறையாகும், இது மற்றவர்களின் உணர்வுகளை உரசாமல் உங்களை துன்பத்திலிருந்து விடுவிக்க நான் இங்கு வந்துள்ளேன் என்று மென்மையாகச் சொல்கிறது, இது தொடங்குவதற்கு ஒரு சிறந்த இடம் என்பதில் மாற்றுக் கருத்தே இருக்க முடியாது. முயன்று பாருங்கள்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# பழங்குடியினர்களுக்கான ரோட்டரி வீடுகள்

ரோட்டரி செய்திக்குழு



*துவக்கவிழாவில்* PDG *ராஜா சீனிவாசன்.*

செங்கை சென்னையின் ரோட்டரி கிளப், RID 3231, சென்னையின் புறநகர் பகுதியில் எட்டு குடும்பங்களுக்கு வீடுகளை கட்டி கொடுத்துள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கும் 20 குடும்பங்கள் உள்ள இந்த கிராமத்தை ஹாப்பி வில்லேஜ்திட்டத்தின் கீழ் ரோட்டரி தத்து எடுத்துக் கொண்டுள்ளது. கூறையில் வசித்த இவர்களின் வீடுகளை பிரதம மந்திரியின் ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் ரு.3.75 லட்சம் செலவில் 300 சதுர அடி வீடுகளாக அமைத்துக் கொடுத்ததாக லோ காஸ்ட் ஷெல்டர்ஸ் திட்டத்தின் சேர்மென் ஸ்ரீதர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

DG ஸ்ரீதர் பலராமன், RID 3232 PDG ராஜா சீனிவாசன் பங்கேற்று தேசீய SC கமிஷனின் துணை சேர்மென் எல் முருகன் சிறப்பு விருந்தினரான இந்த விழாவில் வீடுகளின் சாவிகள் பயனாளர்களுக்கு வழங்கப் பட்டன. இதே நேரம் தமிழ்நாடு அறம் மக்கள் நல சங்கம் என்ற அரசு சாரா நிறுவனம் அனைவருக்கும் புதிய ஆடைகளை வழங்கியது.■

---

# பூனேவில் குறைந்த செலவில் பல் சிகிச்சை

மூன்று முறைகள் பல்லுக்கு ரூட் கேனால் சிகிச்சை செய்து கொண்ட பூனேவைச் சேர்ந்த மனிஷா சாப்லே மற்றும் தனஞ்சய் கோர்டே ஆகிய இருவரும் இங்குள்ள ரோட்டரி பல் மருத்து வமனையில் கிடைக்கும் சிறப்பான சிகிச்சையை புகழ்ந்தார்கள்.

பூனேவின் போபோடியில்,1996ல் பூனே RC கணேஷ்கிண்ட் RID 3131 ஆல் மதூகர் ஷூக்லாவின் இணையான நிதி உதவுடன் மாநகராட்சி இடத்தில் துவங்கப்பட்ட இந்த பல் மருத்துவ மனையில் குறைந்த செலவில் நிபுணர்களால் பல் சிகிச்சை அளிக்கப்படுகிறது. கிளப்பின் மெடிக்கல் டைரக்டரான டாக்டர் அல்கா பவார் இது தங்கள் கிளப்பின் நீண்ட நாட்களாக இயங்கும் மருத்துவ திட்டம் என்றார்.




ரோட்டரியின் செயல் பாட்டை விளக்கும் பல்வேறு போஸ்டர்கள் இருக்கும் இந்த மருத்துவ மனையின் தலைவரான டாக்டர் தீபக் சோனார் ஆறு நாட்கள் பணி யிலிருக்கும் அவர்கள் நாளொன்றுக்கு 15-20 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதாகுவும் இதுவரையில் ஒரு லட்சம் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்ததாகவும் கூறுகிறார்.

இந்த மருத்துவமனை எங்கள் கிளப்பின் கிரீடம் போன்றது என்று பெருமையுடன் கூறுகிறார் தலைவர் சுனிதா சுரேந்திரா பெராஸ்நிஸ்.■

# மணிப்பாலில் ரோட்டரி தோல் வங்கி

கிரண் ஜெஹ்ரா



*TRF அறங்காவலர் குலாம் வஹனவதி தோல் வங்கியில் PDG D S ரவி, PDG அபினந்தன் ஷெட்டி மற்றும் திட்டக்குழுத் தலைவர் சேசப்பா A ராய் ஆகியோருடன்.*

தீக்காயங்களுக்கு சிகிச்சையளிக்க, RID 3182, மணிப்பாலின் கஸ்தூர்பா மருத்துவமனையில் ரோட்டரி MAHE தோல் வங்கியை மொத்தம் $113,317 (ரூ.80.45 லட்சம்) செலவில் அமைத்துள்ளது. அமெரிக்காவின் ரோட்டரி சங்கங்கள் மற்றும் TRF உடன் செயல்படுத்தப்படும் உலகளாவிய மானிய முயற்சிக்கு IPDG அபிநந்தன் ஷெட்டி DDF லிருந்து நிதி வழங்கினார்.

மணிப்பால் உயர் கல்வி அகாடமி (MAHE) மருத்துவமனையில் ஆய்வகத்திற்கான இடத்தை வழங்கியுள்ளது. தோல் வங்கியை 2019 ஆகஸ்டில் MAHE ப்ரோ சான்ஸலர் டாக்டர் H S பல்லால் திறந்து வைத்ததோடு, வேந்தர் டாக்டர் ராம்தாஸ் M பாய், துணை வேந்தர் வினோத் H பட்டுடன் இணைந்து, TRFக்கு, $35,000ஐ வழங்கினார்.

RID கமல் சங்வி மற்றும் TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி ஆகியோரும் இந்த மையத்திற்கு வருகை தந்து, மணிப்பாலில் தோல் வங்கி அமைத்த கிளப் உறுப்பினர்களைப் பாராட்டினர்.

கஸ்தூர்பா மருத்துவமனையின் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை பேராசிரியரும், HODயுமான டாக்டர் ஸ்ரீகுமார், 25 தோல் நன்கொடையாளர்கள் வங்கியில் பதிவு செய்துள்ளதாக கூறினார். “நன்கொடையாளர்களின் தோல் இறந்த ஆறு மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்டு பதப்படுத்தபட்டு ஐந்து ஆண்டுகளுக்கு வைத்திருக்க முடியும், என்று அவர் விளக்கினார். அதிக தீக்காயங்கள் கொண்ட நோயாளிகளுக்கு தொற்றுநோய் ஆபத்து உள்ளதால் எடுக்கப்பட்ட தோல், எரிந்த பகுதியை தற்காலிகமாக மறைக்க பயன்படும் என்ற டாக்டர் சேசப்பா A ராய், தோல், இரத்தம் இணக்கமாக இருக்க வேண்டியதில்லை என்றார்.

டாக்டர் ஸ்ரீகுமார் மற்றும் அவரது குழுவினர் மும்பையில் உள்ள ஒரு தோல் வங்கியில் சிறப்பு பயிற்சி பெற்றனர்.■




*தோல் வங்கியில் RID கமல் சங்வி மற்றும் அவர் மனைவி சோனல், DGE ராஜாராம் பட் மற்றும் சங்கத்தினருடன்.*



**RC கடலூர் கோஸ்டல் சிட்டி** — RID 2981
மாவட்டம் அதன் ஆறு தொழில் பயிற்சி மையங்களில் 700 பெண்களுக்கு தையல் பயிற்சி அளித்து ரூ.30 லட்சம் செலவில் 300 பெண்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களை வழங்கியது.

**RC ஹோசூர் சிப்காட்** — RID 2982
PDGகளான வாசு மற்றும் தர்மேஷ் படேல் முன்னிலையில் அந்தேவனபள்ளி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் ₹5.65 லட்சம் செலவில் ஒரு கழிப்பறைத் தொகுதியை DG A K நடேசன் திறந்து வைத்தார்.





**RC குர்கான் காஸ்மோபாலிட்டன்** — D 3011
கிளப்பின் பயிற்சியாளர் ருச்சி ராய் நாதுபூர் கிராமத்தின் அரசுப் பள்ளிக்கு புத்தகங்களை அளித்தார். சேரியை சேர்ந்த சுமார் 135 குழந்தைகள் இதனால் பயனடைவார்கள்.

**RC மதுரை வெஸ்ட்** — RID 3000
காமக் பள்ளியில் காது கேளாத குழந்தைகளுக்கு ரூ.50,000 செலவில் ஸ்மார்ட் வகுப்பு திறக்கப்பட்ட துவக்க விழாவில் கிளப் தலைவர் ரவி பார்த்தசாரதியும் பல ரோட்டரியன்கள் கலந்து கொண்டனர்.



# சங்க சேவைகள்

**RC சந்திரபூர்** — RID 3030

ஷேகான் கிராமத்தின் பல் பரிசோதனை முகாமில் 150 மாணவர்களை மருத்துவர்கள் குழு பரிசோதித்து. பற்பசைகள் மற்றும் பிரஷ்கள் வழங்கப்பட்டன.






**RC பிவாடி சக்தி** — RID 3053

பாபா மோகன்ராம் கிஸான் கல்லூரியில் ஒரு பிளாஸ்டிக் பொருட்கள் தவிர்க்கும் விழிப்புணர்வு முகாம் நடைப்பெற்றது. DG ஹரீஷ் கவுர் இந்த முகாமில் பங்கேற்று பொது மக்களுக்கு 2,000 துணிப்பைகளை சங்கத்தினருடன் வழங்கினார்.







**RC பரோடா கலனகரி** — RID 3060

குளிர் காலத்திற்கு தேவையான ஸ்வெட்டர்கள் மற்றும் கம்பளிகளை ஜிலோடில் கிளப் உறுப்பினர்கள் குழந்தைகளுக்கு விநியோகித்தனர்.



**RC அமிர்தசரஸ் நார்த்** — RID 3070

குருநானக்கின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஷாபாத் கயன் போட்டியில் பத்து பள்ளிகள் பங்கேற்க, DGE டேவிந்தர் சிங் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

**RC ஹிம்மத்நகர்** — RID 3054

சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திரசின் சவ்தா மற்றும் நகராட்சித் தலைவர் அனிருத் சொராதியா முன்னிலையில் கிளப் உறுப்பினர்கள் காய்கறி சந்தையில் துணி பைகளை விநியோகித்தனர்.

**RC ரூர்க்கி மிட் டவுன் — RID 3080**
கிளப் தனது ரோட்டரி ரசோய் திட்டம் மூலம் முதல் மற்றும் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் நகரின் மருத்துவமனையில் நோயாளிகளின் கவனிப்பவர்களுக்கு உணவளிப்பதற்காக கட்டப்பட்டுள்ள ஒரு சமையலறை, அவர்களுக்கு ஒரு தற்காலிக தங்குமிடமாகவும் செயல்படுகிறது.



**RC சந்தாசி சிட்டி ஸ்டார் — RID 3100**
நகராட்சித் தலைவர் இந்து ராணி பங்கேற்று, பிளாஸ்டிக், பாலிதீன் பைகளின் தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பிளாஸ்டிக் எதிர்ப்பு பிரச்சாரம் செய்ய, துணிப் பைகள் அனைவருக்கும் வழங்கப்பட்டன.



**RC வாரணாசி சென்ட்ரல் — RID 3120**
காஷி பாலிகா சிக்ஷா நிகேதன் மாணவர்களுக்காக பல் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டு. 350 மாணவர்களை சோதித்து சிகிச்சை அட்டைகளுடன் பற்பசைகள், பிரஷ்கள் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.



**RC ஜல்னா சென்ட்ரல் — RID 3132**
நகரத்தின் ஜாகர்களை ஈர்க்க 1.2 கி.மீ. நீளத்திற்கு ஒரு அழகிய பின்னணியில் ஜாகிங் டிராக் அமைக்கப்பட்டது.



**RC பம்பாய் ஏர்போர்ட் — RID 3141**
ப்ராஜெக்ட் பாசிட்டிவ் ஹெல்தின் கீழ், கிளப் ஒரு நாள் தானியங்கி ரத்த அழுத்த கருவியை அந்தேரி ரயில் நிலையத்தில் அமைத்து, 150க்கும் மேற்பட்ட பயணிகளின் ரத்த அழுத்தம் சோதிக்கப்பட்டது. ரயில் நிலையத்தில் இந்த வசதி கிடைப்பதில் நோயாளிகள் மகிழ்ந்தனர்.



# சங்க சேவைகள்

### RC நெல்லூர் — RID 3160

கோதவங்கல்லு கிராமத்தில் நடந்த கண் முகாமில் 160 பேர் பல நோய்களுக்கு பரிசோதிக்கப்பட்டு மருந்துகளும், 20 பேருக்கு கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. கிளப் ரோட்டரி கண் மருத்துவமனை, ரோட்டரி பொது மருத்துவமனையை நடத்துகிறது.



### RC கோயம்புத்தூர் மெரிடியன் — RID 3201

ரூ.60,000. செலவில் ஃபர்ஸ்ட் ஸ்டெப் திட்டத்தில் ஒன் கேர் மருத்துவ மையத்தில் இரண்டு சிறுவர்களுக்கு குறைபாடு திருத்தும் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு பிசியோதெரபி கொடுக்கப்படுகிறது.





### RC SPIC நகர் — RID 3212

ஒரு குடியிருப்பில் RYLA ஏற்பாடு செய்யப்பட்டு, 50க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் தலைமைத்துவ திறன்கள், குழு கட்டமைத்தல், உட்பட பல் வேறு திறன்களில் பயிற்சி பெற்றனர்.



### RC மெட்ராஸ் சவுத் வெஸ்ட் — RID 3232

DG வைஷ்ணவ கல்லூரி ரோட்டராக்டர்கள், ஏழு சிகையலங்கார நிபுணர்களை கொண்டு, 44 மனநல நோயாளிகளின் சிகையை சரி செய்தனர். இதை ஒவ்வொரு மாதமும் நடத்த திட்ட மிட்டுள்ளனர்.



### RC கல்கத்தா மேக்னம் — RID 3291

ரோட்டராக்டர்கள் மற்றும் இண்டஸ் இண்ட் வங்கியுடன் இணைந்து ரோட்டரி சதனில், பான்ஸ்ட்ரோனியிலிருக்கும் சாந்தி ராணி பள்ளியின் 180 வறிய சிறுமிகளுக்கு ஆடைகள் வழங்கப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

## Rotary News Subscription Remittances

**You can pay the Rotary News / Rotary Samachar subscription online**

**Our Bank details:**

Bank : HDFC Bank
SB Account

Branch : Montieth Road
Egmore, Chennai

A/c Name : Rotary News Trust

A/c No. : 50100213133460

IFSC Code : HDFC0003820

**E mail us following details:**

Name of Club

President/Secretary's name

Amount/Date of transfer/UTR Number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,204,996 |
| Clubs | : | 35,907 |
| Districts | : | 525 |
| Rotaractors | : | 168,960 |
| Clubs | : | 10,192 |
| Interactors | : | 321,172 |
| Clubs | : | 13,964 |
| RCC | : | 10,853 |

As on Jan 15, 2020

*Please note Interact clubs that have not reported Interact Adviser in the past two Rotary years, are placed in "Suspended" status effective Oct 1, 2019.

## Membership Summary

As on Jan 2, 2020

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | *Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 114 | 4,888 | 253 | 46 | 27 | 223 |
| 2982 | 67 | 3,138 | 167 | 82 | 64 | 55 |
| 3000 | 126 | 5,429 | 523 | 186 | 199 | 210 |
| 3011 | 88 | 3,678 | 927 | 49 | 66 | 25 |
| 3012 | 99 | 3,754 | 961 | 51 | 60 | 59 |
| 3020 | 71 | 4,221 | 242 | 54 | 32 | 350 |
| 3030 | 91 | 4,997 | 668 | 95 | 127 | 286 |
| 3040 | 86 | 2,018 | 232 | 36 | 45 | 144 |
| 3053 | 62 | 2,780 | 484 | 16 | 37 | 99 |
| 3054 | 120 | 5,840 | 1015 | 76 | 133 | 475 |
| 3060 | 96 | 4,367 | 617 | 53 | 48 | 143 |
| 3070 | 106 | 3,141 | 446 | 45 | 20 | 58 |
| 3080 | 85 | 3,488 | 321 | 84 | 65 | 112 |
| 3090 | 78 | 2,018 | 55 | 37 | 4 | 122 |
| 3100 | 85 | 2,244 | 176 | 12 | 12 | 146 |
| 3110 | 119 | 3,791 | 361 | 28 | 7 | 105 |
| 3120 | 78 | 3,321 | 452 | 39 | 15 | 53 |
| 3131 | 135 | 5,454 | 1207 | 101 | 143 | 114 |
| 3132 | 84 | 3,491 | 362 | 34 | 67 | 158 |
| 3141 | 103 | 5,716 | 1360 | 115 | 108 | 88 |
| 3142 | 92 | 3,316 | 687 | 78 | 85 | 64 |
| 3150 | 93 | 3,662 | 390 | 58 | 88 | 116 |
| 3160 | 69 | 2,454 | 176 | 28 | 3 | 83 |
| 3170 | 128 | 5,738 | 711 | 67 | 168 | 165 |
| 3181 | 81 | 3,579 | 350 | 60 | 178 | 116 |
| 3182 | 80 | 3,090 | 262 | 41 | 47 | 97 |
| 3190 | 126 | 4,996 | 707 | 132 | 131 | 60 |
| 3201 | 145 | 5,627 | 448 | 103 | 53 | 50 |
| 3202 | 126 | 5,066 | 308 | 77 | 105 | 47 |
| 3211 | 141 | 4,570 | 343 | 8 | 23 | 132 |
| 3212 | 101 | 4,092 | 318 | 100 | 101 | 146 |
| 3231 | 91 | 3,724 | 465 | 50 | 67 | 355 |
| 3232 | 126 | 5,124 | 882 | 125 | 135 | 91 |
| 3240 | 89 | 3,086 | 413 | 50 | 363 | 190 |
| 3250 | 101 | 3,947 | 697 | 60 | 62 | 182 |
| 3261 | 71 | 2,646 | 413 | 16 | 15 | 43 |
| 3262 | 102 | 3,549 | 432 | 45 | 33 | 77 |
| 3291 | 150 | 3,742 | 760 | 86 | 74 | 614 |
| **India Total** | **3,805** | **149,782** | **19,591** | **2,423** | **3,010** | **5,653** |
| 3220 | 69 | 1,982 | 284 | 81 | 118 | 73 |
| 3271 | 88 | 1,405 | 254 | 60 | 10 | 18 |
| 3272 | 148 | 1,827 | 302 | 51 | 14 | 43 |
| 3281 | 212 | 5,695 | 885 | 220 | 36 | 195 |
| 3282 | 167 | 4,319 | 465 | 142 | 36 | 46 |
| 3292 | 122 | 4,844 | 762 | 130 | 103 | 115 |
| **S Asia Total** | **4,611** | **169,854** | **22,543** | **3,107** | **3,327** | **6,143** |

*Source: RI South Asia Office*


# On the racks




## From Oberoi to Oyo: Behind the scenes with the movers and shakers of India's hotel industry

Author : **Chitra Narayanan**
Publisher : **Penguin Portfolio**
Pages : **319; ₹399**

In this book, the author, a journalist who has covered the business of hospitality over long years, traces the origins of the hotel industry in India and tries to provide a glimpse of the future of stays. How did the Taj, the Oberoi and ITC come to dominate the hotel landscape in India? How did they cope when the international chains — Marriott, Accor, Radisson, etc — arrived, and when young disruptive challengers like Oyo emerged? The book provides a behind-the-scenes look at the industry, the business models, the personalities behind the hotels and the ongoing war for supremacy.





## Poonachi: Or the Story of a Black Goat

Author : **Perumal Murugan (Translated from Tamil by N Kalyan Raman)**
Publisher : **Context, Westland Publication**
Pages : **179; ₹359**

Through a seeming act of providence, an old couple receives a day-old female goat as a gift from the cosmos. Thus, begins the story of Poonachi, the little orphan goat.

As you follow her story from forest to habitation, independence to motherhood, you recognise in its significant moments the depth and magnitude of your own fears and longings, fuelled by the instinct for survival that animates all life. Masterly and nuanced, Perumal Murugan's tale forces us to reflect on our own responses to hierarchy and ownership, selflessness and appetite, love and desire, living and dying. Poonachi is the story of a goat who carries the burden of being different all her life, and survives against odds. It is equally an expression of solidarity with the animal world and the female species. The tale is also a commentary on our times, on the choices we make as a society and a nation, and the increasing vulnerability of individuals, particularly writers and artists, who resist when they are pressed to submit.




## A Chequered Brilliance: The Many Lives of V K Krishna Menon

Author : **Jairam Ramesh**
Publisher : **Penguin Viking**
Pages : **776; ₹999**

In Jairam Ramesh's gigantic and well-researched biography of V K Krishna Menon, you will find all aspects of Menon's life — childhood in a rich Malayali family, his early association with the Theosophical Society, his days in London, and above all his relationship with India's first Prime Minister Jawaharlal Nehru. Did you know that he helped to found Penguin Books? This is a compelling biography of one of India's most controversial and consequential public figures. Menon continues to command our attention not just because he was Nehru's confidante and soulmate but also for many of his own political and literary accomplishments. A relentless crusader for Indian independence in the UK in the 1930s and 1940s, he was a global star at the United Nations in the 1950s before he was forced to resign as India's Defence Minister after the humiliation India suffered during the Indo-China war of 1962.

Meticulously researched and based entirely on new archival material, this book reveals Krishna Menon in all his capabilities and contradictions. It is also a rich history of the tumultuous times in which he lived and which he did so much to shape.

The beauty of this book is that you can open any page, any chapter, and it will grip you.

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S

# உங்களைப் பிரமிக்கவைக்கும் அழகு நிறைந்த நியூசிலாந்து

TCA ஸ்ரீனிவாச ராகவன்

கல்லூரித் தோழர்களாகிய நாங்கள் மூவரும், எங்களுடைய மனைவியரும் நியூசிலாந்தைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம். கடந்த ஜூலை மாதத்தில், நாங்கள் நியூசிலாந்துக்குச் சென்றுவரத் தீர்மானித்தோம்.

நான் ஏற்கெனவே இதற்கு முன்னால் ஒரு முறை நியூசிலாந்துக்குச் சென்றுள்ளேன். ஆனால், அந்தமுறை என்னால் தெற்குத் தீவைக் காண இயலவில்லை. ஆகவே, இந்தமுறை நாங்கள் எல்லாரும் எங்களுடைய பெரும்பகுதி நேரத்தை அங்குதான் செலவிடவேண்டும் என்று நான் எல்லாரையும் சம்மதிக்கவைத்தேன்.

அந்தத் தீவுடைய மிகச்சிறந்த இயற்கை அழகின் அளவையும் தீவிரத்தையும் வெல்லக்கூடிய வேறு எந்த இடத்தையும் நான் இதுவரை பார்த்ததில்லை. மலைகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், ஓடைகள், ஏரிகள், கடற்கரைகள், குகைகள் இயற்கையில் வேறு எங்கும் சுவாசிக்க இயலாத தூய காற்று என அனைத்தையும் அனுபவித்தபடி நாங்கள் பல மைல் தூரம் பயணம் செய்தோம். எல்லாவற்றுக்கும் மேலாக, அங்குள்ள வானம் தூய நீலநிறத்தில் காணப்பட்டது. எங்குபார்த்தாலும் அழகு என்று ஒரு விதமான சலிப்பே ஏற்பட்டு விடும் அளவுக்கு அழகு.

நியூசிலாந்தில் பயணம் செய்வதற்கு மிகச்சிறந்த வழி, ஆறு அல்லது எட்டு பேரைக் கொண்ட குழுவாகச் செல் வது தான். அதற்கு முன், நாங்கள் ஆக்லாந்திலிருந்து க்ரைஸ்ட்சர்ச் சென்ற போது, ஓட்டுநருடன் கூடிய ஒரு வேனை வாடகைக்கு எடுத்துக் கொள்வதாக நாங்கள் தீர்மானித்திருந்தோம். அது ஒரு மிகச்சிறந்த தீர்மானமாக அமைந்தது.

எட்டு நாட்கள், தெற்குத் தீவு முழுவதும் (கிட்டத்தட்ட 2000 கி.மீ.,) நல்ல வசதியான வண்டியில் பயணம்செய்வதற்கு நாங்கள் தந்த தொகை, ஒருவருக்கு ரூ.60,000. இந்தியாவில் இதற்கு அதைப்போல் இருமடங்கு செலவாகியிருக்கும்.

ஆனால், நியூசிலாந்திலுள்ள தங்கும் விடுதிகள் மிகச் சுமாரானவை. சிறிய அறைகள், மிக அடிப்படையான வசதிகள், மூன்றாம் தர உணவகங்கள், அதையெல்லாம்விட மோசம், மிகச்சிறிய குளியலறைகள். அவற்றில் குளித்துவிட்டுத் துடைத்துக் கொள்ளக்கூட இடம் இல்லை.

தெற்குத் தீவில் ஒவ்வோர் இரவும் ஓர் இடத்தில் என்று நாங்கள் ஐந்து மோட்டல்களில் தங்கினோம். உண்மையில் அவை அனைத்தும் முழு வசதிகளைக் கொண்ட சேவை அடுக்ககங்களாக இருந்ததைக் கண்டு வியந்தோம். பலவிதமான சமையல் பொருட்கள், பாத்திரம் கழுவும் இயந்திரம், துவைக்கும் இயந்திரம், உயர் தரத் தொலைக் காட்சிப் பெட்டிகள் என அனைத்தும் அங்கு இருந்தன.

ஃபாக்ஸ் க்ளேஸியரில் இருந்த ஒன்றைமட்டும் எங்களால் காண இயலவில்லை, காரணம், அப்போது மழை பொழியத் தொடங்கியிருந்தது. மற்ற அனைத்தும் சுமார் 350 சதுர அடி அளவில் அமைந்திருந்தன. அதாவது, ஏழைகளுக்காக நம் அரசாங்கம் கட்டுகின்ற கட்டுப்படியாகக் கூடிய வீடுகளைவிட வெறும் 50 சதுர அடி குறைவு.

எங்களுடைய சுற்றுப் பயணங்களில் இன்னொன்றை மோசமான வானிலை காரணமாக ரத்துசெய்யவேண்டியிருந்தது. ஆனால், நாங்கள் அங்கு தங்கியிருந்த 14 நாட்களில், இந்த இரண்டு சூழ்நிலைகளில்தான் திட்டமிட்டபடி இடங்களைப் பார்க்க இயலவில்லை.

அவர்களுடைய உணவை இயன்றவரை தவிர்ப்பது நல்லது. அதில் சுவையும் இல்லை, விலையும் மிக அதிகம். ஆனால், நியூசிலாந்துப் பியர், ஒயின் ஆகியவை விலை குறைவானவை, உயர்ந்த தரம் கொண்டவை.

நாங்கள் தாய் மற்றும் இந்திய உணவகங்களில் உண்டோம்; அங்கு உணவுப்பண்டங்கள் அதிகமான அளவில் வழங்கப் பட்டன; நாங்கள் உணவுப் பண்டங்களைப் பகிர்ந்துகொள்ள இயன்றது. ஆறு பேருக்கு மொத்தமாகச் சுமார் NZ90 செலவானது.

இங்கிருந்த சீனச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைப் பார்த்து நாங்கள் திகைத்தோம். எங்கு சென்றாலும் அவர்கள்தான் மொய்த்திருந்தார்கள். உண்மையில், நியூசிலாந்து சற்று கவனமாக இல்லாவிட்டால், சீனா அந்த நாட்டை வாங்கிவிடக்கூடும், சிலகாலத்துக்குமுன் டொனால்ட் ட்ரம்ப் ஐஸ்லாந்தை வாங்க விரும்பியதைப்போல.■

# சாண்டியகோ இன்டர்நேஷனல் அசம்பளியில் DGEக்கள்



**தரையில் இடதிலிருந்து:** *ஹரி கிருஷ்ண நம்பியார்* (3202); *சஞ்சீவ் ராய் மெஹ்ரா* (3011); *ஷபீர் ஷாகிர்* (3030); R *பாலாஜி பாபு* (2981); M *சதீஷ் பாபு* (3020); *சுன்னில் மெஹ்ரா* (3141), S *முத்துபலனியாப்பன்* (3232).

**நாற்காலி:** *ரஷ்மி குல்கர்னி* (3131); *சங்கிராம் பாட்டீல்* (3170); *கஜேந்திர சிங் நாரங்* (3040); *தரம்வீர் சிங் படோரியா* (3053); TRF *அறங்காவலர் குலாம் வாகன்வதி;* RID *பாரத் பாண்ட்யா;* RID *கமல் சங்க்வி;* PDG *தீபக் புரோஹித்;* A L *சொக்கலிங்கம்* (3000); *சௌம்யா ராஜன் மிஸ்ரா* (3262); *ஹன்மந்த் ரெட்டி* (3150); *கருனேஷ் ஸ்ரீவாஸ்தவா* (3120), *சந்தீப் கதம்* (3142).

**நிற்போர்:** *ஜோஸ் மாதவாசேரி* (3201); B L *நாகேந்திர பிரசாத்* (3190); *ராஜாராம பட்* (3182); *ராஜேஷ் அகர்வால்* (3054); *ஹரிஷ் மோத்வானி* (3132); K L *வெங்கடேசன்* (2982); *ஃபக்கீர் மொஹந்தி* (3261); *ராஜீப் போக்ரெல்* (3292); *தாமஸ் வாவனிகுன்னல்* (3211); *விஜய் அரோரா* (3090); *அலோக் குப்தா* (3012); *ராஜன் காந்தோத்ரா* (3250); *தினேஷ் சுக்லா* (3110); *டேவிந்தர் சிங்* (3070); *சுபாஷிஷ் சாட்டர்ஜி* (3240); *ரமேஷ் பஜாஜ்* (3080); *பிரசாந்த் ஜானி* (3060); *சின்னபா ரெட்டி* (3160); M *ரங்கநாத் பட்* (3181); *சுதீப் முகர்ஜி* (3291); P N B*முருகதாஸ்* (3212); *மனீஷ் ஷர்தா* (3100), *அஜித் வீரசிங்க* (3220).


Regn. No. – TN/CCN/677/2019–2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Rotary News Tamil published on 1st of every month

# Rotary India Centennial Summit 2020

Rotary INDIA 100 YEARS

## Biswa Bangla Convention Center
## Kolkata, West Bengal, India
## 14th, 15th & 16th February 2020

Dear Friends,

Rotary India Centennial Summit 2020 is the celebration of completion of 100 years of Rotary in India.

Rotary started in India, in the city of Kolkata on 1st January, 1920 when Rotary Club of Calcutta was chartered in what is today RI District 3291.

This summit will be the celebration of Rotary's motto 'Service above Self' and we shall do this by showcasing the work of Rotary in India in the six areas of focus. Even as we do that we shall also figure out the plans for the future.

Rotary India Centennial Summit is expected to have 5,000 delegates from more than 25 countries. The program will have celebrity speakers and top leadership of the Rotary world. It will be an excellent opportunity to meet friends from across the globe, make new friends, share success stories and take back great ideas from the event.

The lavish food court and the outstanding entertainment will add up to make this a NOT TO BE MISSED event.

You have to be there.

Sincerely,

RID Kamal Sanghvi
*Convenor, RICS 2020*

RID Dr. Bharat Pandya
*Co-convenor, RICS 2020*

## The Venue


Termed as one of the largest convention centers in South Asia, Biswa Bangla Convention Center in Kolkata, West Bengal is all set to host RICS 2020. The magnificent property is a home to a convention center which can efficiently accommodate more than 4,000 guests and a cluster of lovely banquet halls.


## Our Esteemed Overseas Guests



Mark Maloney
*President*
*Rotary International*



Shekhar Mehta
*President Nominee*
*Rotary International*



PRIP Gary Huang
*TRF Trustee Chair*


PRIP K R Ravindran
*TRF Trustee Chair 20-21*



PRIP John Germ
*TRF Trustee Chair 21-22*



Johrita Solari
*RI Director*


Piotr Wygnanczuk
*RI Director*


Mario Camargo
*RI Director*


Francesco Arezzo
*RI Director*



Rafael Garcia
*RI Director*


Dean Rohrs
*RI Director*



David Stovall
*RI Director*



Kyun Kim
*RI Director*



Sangkoo Yun
*TRF Trustee*



Brenda Cressey
*TRF Trustee*



Jorge Aufranc
*TRF Trustee*



Julia D Phelps
*TRF Trustee*


Jennifer Jones
*TRF Trustee*


Peter Kyle
*RID Elect*



Vicki Puliz
*RID Nominee*



Urs Klemn
*RID Nominee*



Aziz Memon
*Inc. TRF Trustee*


San-Lien Hsieh
*Past RI Director*



Fredrick Lin
*Past RI Director*



Anne Matthews
*Past RI Director*



Nancy Barbee
*RRFC*


Sue Paget
*CEO, FHAP*

## Welcome to Kolkata on 14th, 15th & 16th February 2020


PDG Vinod Bansal
*Chairman*
*RICS 2020*


PDG Anirudha Roy Chowdhury
*Jt.-Chairman*
*RICS 2020*


PDG Kishore Kumar Cherukumalli
*Secretary*
*RICS 2020*

Log on to **www.rics2020.org** for online registration